## செவ்வியல் தமிழ் இலக்கியங்களில் தொழில்வளம்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நிதி நல்கையுடன் திருச்சிராப்பள்ளிப் பிஷப் ஹீபர் கல்லூரித் தமிழாய்வுத் துறை ‘செவ்வியல் தமிழ் இலக்கியங்களில் தொழில்வளம்’ என்னும் தலைப்பில் 23.02.2012 முதல் 25.02.2012 வரை கருத்தரங்கை நடத்தியது.

23.02.2012 அன்று காலை தொடங்கிய தொடக்க விழாவில் தமிழாய்வுத் துறைத் தலைவர் முனைவர் ச. சோமசுந்தரம் வரவேற்புரை வழங்க, கல்லூரித் துணைமுதல்வர் முனைவர் க. சோ. விஜயன் கனகராஜ் தலைமையுரை நிகழ்த்தினார். கருத்தரங்க மலரினை வேளாங்கண்ணித் தியான இல்ல இயக்குநரும் தமிழ் இலக்கியக் கழகச் செயலாளருமான அருள்தந்தை அமுதன் அடிகள் வெளியிட, செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன முதுநிலை ஆய்வறிஞர் பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தியும் திருச்சி அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் ப. தேவதாஸ் மனோகரனும் பெற்றுக்கொண்டனர். முனைவர் ப. தேவதாஸ் மனோகரன், அருள்தந்தை அமுதன் அடிகள் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். முனைவர் இ. சுந்தரமூர்த்தி கருத்தரங்கத் தொடக்கவுரையாற்றினார்.

இக்கருத்தரங்கில் பின்வரும் அறிஞர்கள் தங்கள் ஆய்வுரைகளை வழங்கினர்.

**பேராசிரியர் தி.வெ. இராஜேந்திரன்**
**முனைவர் மீ.அ.ச. ஹபிபூர் ரஹ்மான்**
**பேராசிரியர் அருள்ராஜ்**
**முனைவர் நா. செண்பகலட்சுமி**
**முனைவர் மா. பார்வதியம்மாள்**
**முனைவர் அரங்க மல்லிகா**
**முனைவர் நா. தனராஜ்**
**முனைவர் ச. சோமசுந்தரம்**
**முனைவர் சு. இரவிக்குமார்**
**முனைவர் தூ. சேதுப்பாண்டியன்**
**முனைவர் இரா. விஜயராணி**
**முனைவர் ஆ. தனஞ்செயன்**
**முனைவர் ந. அதியமான்**
**முனைவர் மு. பாண்டி**
**முனைவர் ப. ஜெயகிருஷ்ணன்**
**முனைவர் இரா. ஜெகதீசன்**
**பேராசிரியர் ப. மருதநாயகம்**

கருத்தரங்கம் நடைபெற்ற மூன்று நாட்களும் பாரதிதாசன் பல்கலைக்கழக, தமிழ்ப்பல்கலைக்கழக, பிற கல்லூரிகளைச் சார்ந்த ஐம்பதுக்கும் மேற்பட்ட ஆய்வு மாணவர்களும் பிஷப் ஹீபர் கல்லூரியைச் சேர்ந்த 120க்கும் மேற்பட்ட தமிழிலக்கிய மாணவர்களும் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

25.02.2012 அன்று மாலை நடைபெற்ற நிறைவு விழாவிற்குக் கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் முனைவர் இரா. விஜயராணி வரவேற்புரை வழங்க, பேராசிரியர் ப. மருதநாயகம் தலைமையேற்றார். எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகச் சிறப்புநிலைப் பேராசிரியர் மருத்துவர் சு. நரேந்திரன் கருத்தரங்கச் சிறப்புரையாற்றினார். பிஷப் ஹீபர் மாலை நேரக் கல்லூரி ஒருங்கிணைப்பாளர் முனைவர் யோ.டென்னிசன் கருத்தரங்க மதிப்பீட்டுரை வழங்கினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன ஆய்வறிஞர் ப. மருதநாயகம் நிறைவுரையாற்றினார். தமிழாய்வுத் துறைத் துணைப் பேராசிரியர் மு. இராஜசேகரன் நன்றி கூறினார்.

★

**கருத்தரங்கம் 24**

## பண்டைய தமிழில் மூலிகை அறிவியல்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நிதி நல்கையுடன் தஞ்சாவூர்ப் பொன்னையா இராமஜெயம் அறிவியல் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் 2012 பிப்ரவரி 23, 24, 25 ஆகிய மூன்று நாள்களில் ‘பண்டைய தமிழில் மூலிகை அறிவியல்’ என்னும் தலைப்பில் கருத்தரங்கினை நடத்தியது.

23.02.2012 வியாழக்கிழமை காலை நடந்த தொடக்க விழாவில் கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் முனைவர் பா. இராசேந்திரன் வரவேற்புரையாற்றினார். பொன்னையா இராமஜெயம் அறிவியல் தொழில்நுட்பப் பல்கலைக்கழக இணைவேந்தர் பேராசிரியர் சி. நாகராசன் தலைமையேற்றுக் கருத்தரங்க மலரை வெளியிட்டு உரையாற்றினார். அதனைத் தொடர்ந்து பதிவாளர் முனைவர் பி.எஸ்.எம். கண்ணன் முன்னிலை உரையாற்றினார். தஞ்சாவூர்த் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் சுற்றுச்சூழல் மற்றும் மூலிகை அறிவியல் துறைத்தலைவர் முனைவர் ம. ஜெகதீசன் தொடக்கவுரையாற்றினார். தஞ்சாவூர் அருட்பெருஞ்சோதி அறக்கட்டளை நிறுவனர் மருத்துவர் பா. தம்பையா மையக்கருத்துரை வழங்கினார். பின்னர்ப் பொன்னையா இராமஜெயம் அறிவியல் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் என். எத்திராஜுலு, கலைப்புலத் தலைவர் முனைவர் கே. சரவணன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். தமிழ்த்துறை உதவிப் பேராசிரியரும் இணை ஒருங்கிணைப்பாளருமான ஜெ. மகேசன் நன்றிகூறத் தொடக்கவிழா நிறைவுபெற்றது.

இந்தக் கருத்தரங்கில் பின்வரும் பேராளர்கள் தங்கள் ஆய்வுரைகளை அளித்தனர்.





**முனைவர் ம. ஜெகதீசன்**
**மருத்துவர் ச. அரங்கராசன்**
**மருத்துவர் பி.கி. சிவராமன்**
**பேராசிரியர் எஸ். பிரேமா**
**முனைவர் எம். சீனிவாசன்**
**முனைவர் இரா. தமிழடியான்**
**முனைவர் அரங்க தேவநாதன்**
**முனைவர் ச. சுபாஷ்**
**முனைவர் ஞா. பழனிவேலு**
**முனைவர் வீ. சிவபாதசுந்தரம்**
**முனைவர் பெ. வீரசிகாமணி**
**முனைவர் நா. பிரபு**
**மருத்துவர் தி. தட்சிணாமூர்த்தி**
**முனைவர் து. சொக்கலிங்கம்**
**முனைவர் ப.பிரபாகரன்**
**முனைவர் பா. காளீஸ்வரன்**
**முனைவர் வே.முருகன்**
**முனைவர் கோ.வெ.நடராசன்**
**முனைவர் பா. இராசேந்திரன்**
**பேராசிரியர் ஜெ. மகேசன்**
**பேராசிரியர் ஞா. சிவக்குமார்**

நிறைவு விழா 25.02.2012 அன்று மாலை தொடங்கியது. விழாவில் பொன்னையா இராமஜெயம் அறிவியல் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் இணைவேந்தர் தலைமையேற்றுக் கருத்தரங்கில் கலந்து கொண்டவர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார். வேதாரண்யம் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரித் தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் இரா. தமிழடியானும் மன்னார்குடி அரசுக் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் வை. சோமசுந்தரமும் மதிப்பீட்டுரை வழங்கினார்கள். கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் பா. இராசேந்திரன் நன்றி நவின்றார்.

★

கருத்தரங்கம் 25

## திராவிட மொழி இலக்கணங்களின் தோற்றமும் வளர்ச்சியும்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் ஐதராபாத்தில் உள்ள பொட்டி ஸ்ரீராமுலு தெலுங்குப் பல்கலைக்கழக அகராதியியல் துறையும் இணைந்து 'திராவிட மொழி இலக்கணங்களின் தோற்றமும் வளர்ச்சியும்' என்னும் தலைப்பில் 27.02.2012 முதல் 29.02.2012 முடிய மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தின.

இதன் தொடக்க விழா 27.02.2012 அன்று காலை 10.30 மணியளவில் தொடங்கியது. மொழிவளர்ச்சிப் பள்ளிப் புலத்தலைவர் பேராசிரியர் கே. ஆசீர்வாதம் அனைவரையும் வரவேற்றார். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் கே. யதகிரி முன்னிலை வகித்தார். கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் முனைவர் அ. பரிமளகாந்தம் கருத்தரங்கின் குறிக்கோள்பற்றிப் பேசினார். தொடர்ந்து, கருத்தரங்கக் கட்டுரைத் தொகுப்பு நூலினையும் முனைவர் அ.பரிமளகாந்தம் எழுதிய 'மதுரை அரிசனத் தெலுங்கில் தமிழின் தாக்கம்' என்னும் நூலினையும் துணைவேந்தர் வெளியிட்டார். திராவிடப் பல்கலைக்கழக முன்னாள் பதிவாளர் பேராசிரியர் பி. இராமகிருஷ்ண ரெட்டி சிறப்புரையாற்றினார். ஹம்பியில் உள்ள கன்னடப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் கே. முரிகெப்பா நோக்கவுரையாற்றினார்.

**பேராசிரியர் பி. இராமகிருஷ்ண ரெட்டி**
**பேராசிரியர் தி. முருகரத்தனம்**
**முனைவர் அ. பூலோகரம்பை**
**முனைவர் ஏ.ரோஸ்மேரி**
**முனைவர் என். இராஜேந்திரன்**
**திரு ஸ்ரீகுமார்**
**திரு பசவராஜ் கோடகண்டி**
**திருமிகு பிரேமா**
**திரு எஸ். இராஜேந்திரன்**
**திருமிகு சேஷகலா**
**திரு சீதாபதி**
**முனைவர் அ. பரிமளகாந்தம்**
**முனைவர் கே. இராமாஞ்சனேயலு**
**திரு வேணுகோபால் ரெட்டி**
**திரு அட்டங்கி ஸ்ரீனிவாஸ்**
**திரு டி. இராமகிருஷ்ண ஷெட்டி**
**திரு இராமகிருஷ்ண சாஸ்திரி**
**திரு காளீஷ் பிரபு**

ஆகியோர் தங்கள் ஆய்வுரைகளை வழங்கினர்.

நிறைவு விழாவில் பேராசிரியர் கே. ஆசீர்வாதம் தலைமையில் பல்கலைக்கழகப் பதிவாளர் பேராசிரியர் சுதர்சன் சிங் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார். பேராசிரியர் ஏ. உஷாதேவி நிறைவு விழாப் பேருரையாற்றினார். பேராசிரியர் டி. இராமகிருஷ்ண ஷெட்டி, ஸ்ரீகுமார், முனைவர் வேணுகோபால் ரெட்டி, முனைவர் அ. பூலோகரம்பை, குமாரி பாக்யஸ்ரீ ஆகியோர் கருத்தரங்க மதிப்பீட்டுரை வழங்கினர். நிறைவாக முனைவர் அ. பரிமளகாந்தம் நன்றி நவின்றார்.

★

கருத்தரங்கம் 26

## தொல்காப்பியரின் செய்யுளியல் கோட்பாடுகள்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் கிருட்டிணகிரி அரசுக் கலைக் கல்லூரித் தமிழ்த்துறையும் இணைந்து 'தொல்காப்பியரின் செய்யுளியல் கோட்பாடுகள்' என்ற தலைப்பில் 27.02.2012 முதல் 29.02.2012 வரை மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தின. தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் நா. பழனிவேலு இதன் ஒருங்கிணைப்பாளராக விளங்கினார்.

★

கருத்தரங்கம் 27

## செம்மொழித் தமிழ் இலக்கண, இலக்கியப் பழைய உரைகள்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத் தமிழியல் துறையும் இணைந்து 'செம்மொழித் தமிழ் இலக்கண, இலக்கியப் பழைய உரைகள்' என்னும் தலைப்பில் 27.02.2012 முதல் 29.02.2012 முடிய மூன்று நாள் கருத்தரங்கினைப் பல்கலைக்கழகத் தமிழியல் துறையின் தொல்காப்பியர் அரங்கில் நடத்தின.

தொடக்க விழாவில் மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் மொழிப்புல முதன்மையரும் தமிழியல்துறைத் தலைவருமான பேராசிரியர் சு. அழகேசன் வரவேற்புரை நிகழ்த்தினார். தமிழ்ப் பல்கலைக்கழக முன்னைத் துணைவேந்தர் பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி தொடக்கவுரையாற்றினார். பேராசிரியர் ச.வே. சுப்பிரமணியன் தலைமையுரை யாற்றினார். பதிவாளர் ச. மாணிக்கம், பேராசிரியர் தொ. பரமசிவன், பாபநாசம் திருவள்ளுவர் கல்லூரியின் முதல்வர் பேராசிரியர் க. முருகன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

இக்கருத்தரங்கில் பின்வரும் அறிஞர்கள் தங்கள் ஆய்வுரைகளை வழங்கினார்கள்.

**பேராசிரியர் சி. சுப்பிரமணியப் பிள்ளை**
**பேராசிரியர் காஞ்சனா பாலசுப்பிரமணியம்**
**பேராசிரியர் வா.மு.சே.ஆண்டவர்**
**பேராசிரியர் இ. பேச்சிமுத்து**
**பேராசிரியர் உ.லெ. பாலசுப்பிரமணியன்**
**பேராசிரியர் து.சேதுபாண்டியன்**
**பேராசிரியர் சு. வேங்கடராமன்**
**பேராசிரியர் இரா. செயராமன்**
**பேராசிரியர் சங்கரி சீனிவாசன்**
**பேராசிரியர் அ. சீனிவாசன்**
**பேராசிரியர் இரா. சுகிர்தா பஸ்மத்**
**பேராசிரியர் நா. வேலம்மாள்**
**பேராசிரியர் அ. லதா மகேஸ்வரி**
**பேராசிரியர் மு. பாண்டி**
**பேராசிரியர் கு. அ. இராசாராம்**
**பேராசிரியர் பா. வேலம்மாள்**
**பேராசிரியர் பா. வல்சகுமார்**
**பேராசிரியர் காவ்யா சு. சண்முகசுந்தரம்**
**பேராசிரியர் ச.வே. சுப்பிரமணியன்**
**பேராசிரியர் அ. அறிவுநம்பி**
**பேராசிரியர் த. நீலகண்டப்பிள்ளை**
**பேராசிரியர் நிர்மலா மோகன்**
**பேராசிரியர் யாழ். சு. சந்திரா**
**பேராசிரியர் இரா. மோகன்**

நிறைவு விழா 29.02.2012 அன்று மாலை தொடங்கியது. பேராசிரியர் சு. அழகேசன் வரவேற்புரை வழங்கினார். மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினர் மீனாட்சி சுந்தரராஜன் முன்னிலை வகித்தார். பேராசிரியர் சி. சுப்பிரமணியப் பிள்ளை வாழ்த்துரை வழங்கினார். மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகத் தமிழியல் துறையின் ஆய்வியல் நிறைஞர் மாணவி வள்ளியம்மாள், பராசக்தி கல்லூரி மாணவி இரமணிதேவி, நாகலாபுரம் மனோ கல்லூரித் தமிழ்த்துறை விரிவுரையாளர் பேராசிரியர் காந்திமதி ஆகியோர் கருத்துரை வழங்கினார்கள். பழனி சாது சுவாமிகள் நிறைவுரை வழங்கினார். மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகப் பேராசிரியர் பே. நடராசன் நன்றியுரை கூற விழா நிறைவடைந்தது.

★

கருத்தரங்கம் 28

## மேலை நாட்டு அண்மைக்கால ஒப்பிலக்கியத் திறனாய்வுக் கோட்பாட்டுப் பின்னணியில் பத்துப்பாட்டு

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நிதிநல்கையுடன் திருச்சிராப்பள்ளிப் பாரதிதாசன் பல்கலைக்கழக ஆங்கிலத்துறை மற்றும் பிற அயன்மொழிகள் பெரும்புலம் 'மேலை நாட்டு அண்மைக்கால ஒப்பிலக்கியத் திறனாய்வுக் கோட்பாட்டுப் பின்னணியில் பத்துப்பாட்டு' என்னும் பொருண்மையில் 27.02.2012 முதல் 29.02.2012 முடிய மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தியது.

இதன் தொடக்க விழாவில் ஆங்கிலத்துறைத் தலைவரும் கருத்தரங்க ஒருங்கிணைப்பாளருமான முனைவர் வி. அயோத்தி அனைவரையும் வரவேற்றார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனப் பதிவாளர் முனைவர் மு. முத்துவேலு தலைமையுரை நிகழ்த்தினார். முனைவர் பிரேமா நந்தகுமார் தொடக்கவுரை நிகழ்த்தினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன ஆய்வறிஞர் பேராசிரியர் ப. மருதநாயகம் சிறப்புரையாற்றினார். முனைவர் ஐசக் ஜெபஸ்டின் நன்றிகூறத் தொடக்க விழா நிறைவுபெற்றது.

**முனைவர் டி.என். இராமச்சந்திரன்**
**முனைவர் ஏ. தட்சிணாமூர்த்தி**
**முனைவர் சி. இரவீந்திரன்**
**முனைவர் ப. மருதநாயகம்**
**முனைவர் கே. இராஜா**
**முனைவர் எஸ். இரவீந்திரநாதன்**
**முனைவர் பழனியப்பன்**
**முனைவர் முருகையன்**
**திரு கிருஷ்ணமூர்த்தி**
**முனைவர் ஜான் பிரிட்டோ**
**முனைவர் எஸ். கணேசன்**
**முனைவர் கா. செல்லப்பன்**
**முனைவர் எஸ். பிரபாகர்**
**முனைவர் பி. வெங்கடேசன்**
**முனைவர் வி. அயோத்தி**

ஆகியோர் தங்கள் ஆய்வுரைகளை வழங்கினர்.

29.02.2012 அன்று நடைபெற்ற நிறைவு விழாவில் முனைவர் அயோத்தி வரவேற்புரையாற்றினார். பாரதிதாசன் பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் டி. இராமசாமி தலைமை ஏற்று உரை நிகழ்த்தினார். முனைவர் கா. செல்லப்பன் தனது நிறைவு விழாப் பேருரையில், கட்டவிழ்ப்புக் கொள்கையின் அடிப்படையில் நெடுநல்வாடையுடன் ஈவ் ஆஃப் செயிண்ட் ஆக்னேசையும் சஞ்சீவி பர்வதத்தின் சாரலொடு வாசையும் ஒப்பிட்டுப் பேசினார். முனைவர் லாரா நன்றி நவில நிறைவு விழா முடிவுற்றது.



**சிந்துவெளிப் பண்பாடும் சங்க இலக்கியமும்**

**ஆசிரியர் :**

**முனைவர் ஐராவதம் மகாதேவன்**

**விலை உரூ.50/-**

கருத்தரங்கம் 29

## தமிழ்ச் செவ்வியல் படைப்புக்களில் பகுத்தறிவுச் சிந்தனைகள்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நிதிநல்கையுடன் திருச்சிராப்பள்ளிப் பாரதிதாசன் பல்கலைக்கழகப் பெரியாரியல் உயராய்வு மையம் 'தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்களில் பகுத்தறிவுச் சிந்தனைகள்' என்னும் பொருண்மையில் 01.03.2012 முதல் 03.03.2012 முடிய மூன்று நாள்கள் கருத்தரங்கினை நடத்தியது. பேராசிரியர் இரா. அறவேந்தன் இதன் ஒருங்கிணைப்பாளராக விளங்கினார்.

இக்கருத்தரங்கில் பின்வரும் அறிஞர்கள் தங்கள் ஆய்வுரைகளை வழங்கிச் சிறப்பித்தனர்.

**பேராசிரியர் சோ.ந. கந்தசாமி**
**பேராசிரியர் சு. நரேந்திரன்**
**பேராசிரியர் ப. மருதநாயகம்**
**பேராசிரியர் இரா. சீனிவாசன்**
**பேராசிரியர் து.சேதுபாண்டியன்**
**பேராசிரியர் மு. வள்ளியம்மை**
**பேராசிரியர் அ. ஆலிஸ்**
**பேராசிரியர் கி. இராசா**
**முனைவர் ஆ. மணி**
**பேராசிரியர் பா. மதிவாணன்**
**பேராசிரியர் சுப. இரவீந்திரநாதன்**
**முனைவர் உல. பாலசுப்பிரமணியன்**
**பேராசிரியர் க. பஞ்சாங்கம்**
**பேராசிரியர் சு. இராசாராம்**
**முனைவர் தி. தாமரைச்செல்வி**
**திரு அ. புவியரசு**
**பேராசிரியர் தி. முருகரத்தனம்**
**திரு பொ.வேல்சாமி**






★

கருத்தரங்கம் 30

## செவ்வியல் இலக்கியங்களில் பல்துறைத் திறன்கள்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் நிதியுதவியுடன் மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழியற்புலத்தில் 'செவ்வியல் இலக்கியங்களில் பல்துறைத் திறன்கள்' என்னும் பொருளில் மூன்று நாள் தேசியக் கருத்தரங்கு 01.03.2012 முதல் 03.03.2012 வரை நடைபெற்றது.

தொடக்க விழா 01.03.2012 அன்று காலை பத்து மணியளவில் தமிழியற்புலத்தில் உள்ள சேதுபதி அரங்கில் தொடங்கியது. கருத்தரங்க ஒருங்கிணைப்பாளரும் தமிழியற்புலத் தலைவருமாகிய பேராசிரியர் செ. சாரதாம்பாள் வரவேற்புரை வழங்கினார். பல்கலைக்கழகப் பதிவாளர் பேராசிரியர் மு. இராஜியக்கொடி தலைமையுரையாற்றினார். முன்னாள் தமிழியற்புலத் தலைவர் பேராசிரியர் தமிழண்ணல் சிறப்புரை நல்க, பேராசிரியர் மு. மணிவேல், பேராசிரியர் ஏ. ஆதித்தன், திரு இரெ. பாலகிருஷ்ணன் இ.ஆ.ப. ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

இக்கருத்தரங்கில் பின்வரும் அறிஞர்கள் தங்கள் ஆய்வுரைகளை வழங்கினார்கள்.

**திரு இரெ.பாலகிருஷ்ணன்**
**பேராசிரியர் அ. அறிவுநம்பி**
**பேராசிரியர் சு. வேங்கடராமன்**
**பேராசிரியர் ஏ. ஆதித்தன்**
**முனைவர் ம. செந்தில்குமார்**
**முனைவர் உ. கருப்பத்தேவன்**
**பேராசிரியர் சுப. அழகர்நாதன்**
**பேராசிரியர் ம. சுந்தரமாரி**
**பேராசிரியர் பா. ஆனந்தகுமார்**
**பேராசிரியர் வாசுகி ஜெயரத்தினம்**
**பேராசிரியர் ஞா.ஸ்டீபன்**
**பேராசிரியர் கரு.அழ.குணசேகரன்**
**பேராசிரியர் இரா. காசிராஜன்**
**முனைவர் செ. இரவிசங்கர்**
**பேராசிரியர் ஆ. தனஞ்செயன்**
**பேராசிரியர் அ. ஆலிஸ்**
**பேராசிரியர் இரா. மோகன்**
**முனைவர் போ. சத்தியமூர்த்தி**
**பேராசிரியர் இ. முத்தையா**
**பேராசிரியர் செ. சாரதாம்பாள்**

கருத்தரங்கின் நிறைவு விழா 03.03.2012 அன்று மாலை 4 மணியளவில் தொடங்கியது. இவ்விழாவில் பேராசிரியர் செ. சாரதாம்பாள் வரவேற்புரை நிகழ்த்தினார். அக்ரி கே.பி.டி. கணேசன் தலைமை உரையாற்றினார். பேராசிரியர் தி. முருகரத்தனம் நிறைவுப் பேருரை நல்கினார். தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் ம. திருமலை சிறப்புரையாற்றிக் கருத்தரங்கில் பங்கேற்ற மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார். முனைவர் பா. சங்கரேஸ்வரி நன்றி நவின்றார்.

★



**Dravidian Comparative Grammar - I**
**ஆசிரியர் : பி.எஸ். சுப்பிரமணியம்**
**விலை உரூ.350**



**A Supplement to Dravidian Etymological Dictionary(R)**
**ஆசிரியர் : பி.எஸ். சுப்பிரமணியம்**
**விலை உரூ.350**

கருத்தரங்கம் 31

## மொழியியல் நோக்கில் தொல்காப்பியம்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் பூண்டி அ. வீரையா வாண்டையார் நினைவு திரு புட்பம் கல்லூரியும் இணைந்து 'மொழியியல் நோக்கில் தொல்காப்பியம்' என்னும் பொருண்மையில் 01.03.2012 முதல் 03.03.2012 வரை கருத்தரங்கினை நடத்தின. தொடக்க விழா 01.03.2012 அன்று காலை 10 மணியளவில் நடைபெற்றது. அவ்விழாவில் கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் வரவேற்புரையாற்ற முதல்வர் பேராசிரியர் சி. சின்னையன் தலைமையுரையாற்றினார். கலை வணிகவியல் புலத்தலைவர் பேராசிரியர் ந. இராஜேந்திரன் முன்னிலை வகித்தார். கல்லூரிச் செயலர், தாளாளர் வாழ்த்துரை வழங்கியும் தஞ்சாவூர்த் தமிழ்ப் பல்கலைக்கழகப் பேராசிரியர் முனைவர் பழனி அரங்கசாமி கருத்துரை வழங்கியும் விழாவைச் சிறப்பித்தனர். பேராசிரியர் இரா. நடராசன் நன்றியுரையாற்றத் தொடக்க விழா இனிதே நிறைவுற்றது.

இந்தக் கருத்தரங்கில் கீழ்க்காணும் அறிஞர்கள் தங்கள் ஆய்வுரைகளை வழங்கினர்.

**பேராசிரியர் மா. கோவிந்தராசு**
**பேராசிரியர் ஆ.கோ. நடராசன்**
**பேராசிரியர் அ. தட்சிணாமூர்த்தி**
**முனைவர் ப. கொழந்தசாமி**
**முனைவர் மணவை முஸ்தபா**
**பேராசிரியர் சு. செந்தாமரை**
**பேராசிரியர் விசு. பழனியப்பன்**
**முனைவர் சீனிவாசன்**
**முனைவர் தூ. சேதுபாண்டியன்**
**பேராசிரியர் பி. கண்ணையன்**
**முனைவர் மறைமலை இலக்குவனார்**
**பேராசிரியர் செல்வராசு**
**பேராசிரியர் சோ.ந. கந்தசாமி**
**முனைவர் க. இரவிசங்கர்**

03.03.2012 அன்று நடைபெற்ற நிறைவு விழாவில் பேராசிரியர் சு. திருமாவளவன் வரவேற்புரையாற்றினார். கல்லூரி முதல்வர் தலைமையுரையாற்ற அறிவியல் புலத் தலைவர் அ. தாயுமானவன் முன்னிலை வகித்தார். பங்கேற்ற மாணவ மாணவிகளுக்குச் சான்றிதழ்கள் வழங்கிச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனப் பொறுப்பு அலுவலர் க. இராமசாமி நிறைவுப் பேருரை வழங்கினார். நிறைவாக முனைவர் வீ. சிவபாதம் நன்றிகூறினார்.

★

கருத்தரங்கம் 32

## திருக்குறளுக்கு எழுதப்பெற்ற உரைகள் - பன்முக நோக்கு

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் தத்தனூர் மீனாட்சி இராமசாமி கலை அறிவியல் கல்லூரித் தமிழ்த்துறையும் இணைந்து 'திருக்குறளுக்கு எழுதப்பெற்ற உரைகள் - பன்முக நோக்கு' என்னும் பொருண்மையில் 07.03.2012 முதல் 09.03.2012 முடிய மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தின. திருமிகு இரா. பூங்கொடி இதன் ஒருங்கிணைப்பாளராக விளங்கினார்.

★

கருத்தரங்கம் 33

## இலக்கியவியல் நோக்கில் தொல்காப்பியக் கவிதையியலும் சங்க இலக்கியமும் (செய்யுளியல்)

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் நிதி உதவியுடன் புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவன இலக்கியவியல் துறை 'தொல்காப்பியக் கவிதையியலும் சங்க இலக்கியமும்' என்னும் பொருண்மையிலான கருத்தரங்கினை 2012 மார்ச்சுத் திங்கள் 9,10,11 ஆகிய மூன்று நாள்கள் காஞ்சி மாமுனிவர் பட்டமேற்படிப்பு மையக் கருத்தரங்க அறையில் நடத்தியது.

காஞ்சி மாமுனிவர் பட்ட மேற்படிப்பு மைய இயக்குநர் ஓ.பி.ஷைமா கருத்தரங்கத் தொடக்க விழாவிற்குத் தலைமை தாங்கினார். புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவன இயக்குநர் பக்தவத்சல பாரதி வரவேற்புரை வழங்கினார். மயிலம் செந்தமிழ்க் கல்லூரி முதல்வர் பேராசிரியர் இரா. இலட்சாராமன் வாழ்த்துரை வழங்கினார். சென்னைப் பல்கலைக்கழக முன்னைத் துணைவேந்தர் பேராசிரியர் பொற்கோ கருத்தரங்கின் மையக் கருத்துரையாற்றினார். கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் இரா. சம்பத் நன்றியுரை வழங்கக் கருத்தரங்கத் தொடக்க விழா இனிதே முடிவடைந்தது.

இக்கருத்தரங்கில் பின்வரும் அறிஞர்கள் தங்கள் ஆய்வுரைகளை வழங்கினர்.

**பேராசிரியர் அ. சீனிவாசன்**
**முனைவர் இரா. இராசேந்திரன்**
**முனைவர் ஸ்ரீதர்**
**பேராசிரியர் அ. பிச்சை**
**முனைவர் இந்திரா மனுவேல்**
**முனைவர் இரா. வசந்தமாலை**
**முனைவர் அ. சதீஷ்**
**முனைவர் இரா. சீனிவாசன்**
**முனைவர் மஞ்சுளா கனகராஜ்**
**பேராசிரியர் அ. பாண்டுரங்கன்**
**பேராசிரியர் பெ.மாதையன்**
**முனைவர் சிலம்பு நா. செல்வராசு**
**முனைவர் கே. பழனிவேலு**
**பேராசிரியர் இரா. அறவேந்தன்**
**முனைவர் சி. புவனேசுவரி**
**பேராசிரியர் இரா. ஜெயராமன்**
**முனைவர் ஏ. இராஜலட்சுமி**
**முனைவர் இரா. இலட்சாராமன்**
**பேராசிரியர் கி. இராசா**
**முனைவர் தெ. முருகசாமி**
**பேராசிரியர் அ. குணசேகரன்**
**திருமிகு இராஜேஸ்வரி**
**திருமிகு இரா. கலைவாணி**
**முனைவர் ப. கொழந்தசாமி**
**முனைவர் பொ.நா.கமலா**
**முனைவர் ஜெ.சியாமளா**
**முனைவர் சி. கலைமகள்**
**முனைவர் பா. இளமாறன்**
**முனைவர் நா.மம்மது**
**முனைவர் சிவ. மாதவன்**
**முனைவர் ஆ. மணி**
**முனைவர் அ.செல்வராசு**
**முனைவர் இராம. குருநாதன்**

**முனைவர் நா. இளங்கோ**
**திரு பா. சேட்டு**
**திரு திருஞானசம்பந்தம்**

கருத்தரங்கின் நிறைவு விழா பேராசிரியர் செ.வை. சண்முகம் தலைமையில் நடைபெற்றது. பேராசிரியர் பெ. மாதையன் கருத்தரங்க நிறைவுரை வழங்கினார். நிறுவன இயக்குநர் முனைவர் பக்தவத்சல பாரதி வரவேற்புரையும் இலக்கியவியல் புலப் பேராசிரியர் சிலம்பு நா. செல்வராசு நன்றியுரையும் வழங்கினர். இக்கருத்தரங்கிற்குச் சிறப்பு அழைப்பாளர்களாகப் பேராசிரியர் செ.வை. சண்முகமும் பேராசிரியர் மீனாட்சி முருகரத்தனமும் அழைக்கப்பட்டனர். 'செய்யுளியல்: ஒரு முழுப்பார்வை' என்னும் தலைப்பில் செ.வை. சண்முகமும் 'பொருட்புலப்பாட்டு உறுப்புகள்' என்னும் தலைப்பில் பேராசிரியர் மீனாட்சி முருகரத்தனமும் தங்கள் ஆய்வுக் கருத்துரைகளை வழங்கினர்.

★

**கருத்தரங்கம் 34**

## செம்மொழித் தமிழிலக்கியங்கள் பற்றிய மேலைநாட்டாரின் அகவயத் தொடர்பான நுண்மதிப்பீடு

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழியல் துறையும் இணைந்து 'செம்மொழித் தமிழிலக்கியங்கள்பற்றிய மேலைநாட்டாரின் அகவயத் தொடர்பான நுண்மதிப்பீடு' என்னும் பொருண்மையில் 11.03.2012 முதல் 13.03.2012 முடிய மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் எம். மணிவேல் இதன் ஒருங்கிணைப்பாளராக விளங்கினார்.

★

**கருத்தரங்கம் 35**

## தமிழ் வழக்காறுகள்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன அகராதியியல் துறையும் புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனமும் இணைந்து 'தமிழ் வழக்காறுகள்' என்னும் தலைப்பில் 22.03.2012 முதல் 24.03.2012 வரை தேசியக் கருத்தரங்கை நடத்தின. இதன் தொடக்க விழா புதுவை வணிக அவையில் 23.03.2012 அன்று காலை 10 மணியளவில் நடைபெற்றது. கருத்தரங்க ஒருங்கிணைப்பாளரும் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன ஆய்வறிஞருமான முனைவர் ச.மனோகரன் வரவேற்புரையாற்றினார். எழுத்தாளர் கி. இராஜநாராயணன் தலைமையுரை யாற்றினார். அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் துறை முன்னாள் இயக்குநர் பேராசிரியர் செ.வை. சண்முகம் தொடக்கவுரையாற்றினார். எழுத்தாளர் பொன்னீலன் சிறப்புரையாற்றினார்.

இந்தக் கருத்தரங்கில் பின்வரும் அறிஞர்கள் தங்கள் ஆய்வுரைகளை வழங்கினர்.

**முனைவர் சே. கரும்பாயிரம்**
**பேராசிரியர் இரா. கோதண்டராமன்**
**பேராசிரியர் ஜி. சீனிவாச வர்மா**
**முனைவர் த. பரசுராமன்**
**முனைவர் எஸ். இராஜா**
**திரு பொன்னீலன்**
**முனைவர் பசும்பொன்**
**பேராசிரியர் வீ. ரேணுகாதேவி**
**முனைவர் தி. மகாலட்சுமி**
**முனைவர் ந. பெரியசாமி**
**முனைவர் கே. பழனிவேலு**
**திருமிகு சீ. நாகூரம்மாள்**
**முனைவர் கமலா ஏஞ்சல் பிரைட்**
**முனைவர் த. மகாலட்சுமி**
**முனைவர் இரா. குமாரசாமி**

நிறைவு விழாவில் முனைவர் பக்தவத்சல பாரதி அனைவரையும் வரவேற்றார். பேராசிரியர் இரா. கோதண்டராமன் தலைமையுரையாற்றினார். அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் துறை முன்னாள் இயக்குநர் கோ. சீனிவாச வர்மா நிறைவுப் பேருரையாற்றினார். முனைவர் ச. மனோகரன் நன்றி நவின்றார்.

★

**கருத்தரங்கம் 36**

## தமிழ் - சமஸ்கிருத மொழிகளுக்கு இடையேயான உறவு நிலை

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் திருவையாறு அரசர் கல்லூரிச் சமஸ்கிருதத்துறையும் தமிழ்த்துறையும் இணைந்து 'தமிழ் - சமஸ்கிருத மொழிகளுக்கு இடையேயான உறவு நிலை' என்னும் பொருண்மையில் 23.03.2012 முதல் 25.03.2012 வரை தேசியக் கருத்தரங்கினை நடத்தின.

இதன் தொடக்க விழா 23.03.2012 அன்று காலை 11 மணியளவில் நூற்றாண்டு விழாக் கட்டடத்தில் தொடங்கியது. அவ்விழாவில் தமிழ்த்துறைத்தலைவர் சொ. மணிவண்ணன் வரவேற்புரையாற்றினார். கல்லூரி முதல்வர் முனைவர் தி.ந. ஆராவமுதன் தலைமையேற்க, கல்லூரிச் செயலர் திரு. சு. கணேஷ் முன்னிலை வகித்தார். குடியரசுத்தலைவர் விருதுபெற்றவரும் மேனாள் துணைவேந்தருமாகிய முனைவர் என்.எஸ். இராமானுஜ தாதாசாரிய சுவாமி தொடக்கவுரை ஆற்றினார். அவ்வுரையில் அவர், வடமொழியின் சிறப்புக் குறித்தும் தமிழ் மொழியின் மேன்மை குறித்தும் விளக்கினார். மேலும், மனிதனுக்குரிய இரு கண்கள் போலத் தமிழும் வடமொழியும் போற்றப்படவேண்டியவை என்று எடுத்துரைத்தார். அவரைத் தொடர்ந்து மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் முகமது ஆரிப் சாஹப்,






முனைவர் பழனி அரங்கசாமி, முனைவர் கி. சேகர் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

இக்கருத்தரங்கில் கீழ்க்காணும் அறிஞர்கள் தங்கள் ஆய்வுரைகளை வழங்கினர்.

**முனைவர் கே. சீனிவாசன்**
**திரு டி.வி. வாசுதேவா**
**முனைவர் ஏ. வீரராகவன்**
**முனைவர் எஸ். சுதர்சன்**
**பேராசிரியர் வி. கண்ணன்**
**முனைவர் செ. கல்பனா**
**பேராசிரியர் ஜெயஸ்ரீ**
**பேராசிரியர் என்.வி. தேவிபிரசாத்**
**பேராசிரியர் கே.எஸ். பிரணதார்த்திஹரன்**
**பேராசிரியர் ரெங்கசாமி**
**பேராசிரியர் எஸ். கோதண்டராமன்**
**பேராசிரியர் ச. திருஞானசம்பந்தம்**
**பேராசிரியர் ச. சுபாஷ் சந்திரபோசு**
**பேராசிரியர் வி. நடராசன்**
**பேராசிரியர் பழ. முத்துவீரப்பன்**
**பேராசிரியர் அரங்க திருநாராயணன்**
**முனைவர் என். ஆர். ஸ்ரீதரன்**
**பேராசிரியர் அ. திலகவதி**
**பேராசிரியர் து. ரோஸி**
**பேராசிரியர் ப. நடராசன்**
**பேராசிரியர் எஸ். லெட்சுமிகுமார்**
**பேராசிரியர் எஸ்.கற்பகம்**
**பேராசிரியர் வி.எம். அனந்த நாராயணன்**
**திருமதி ஜோன் லிண்டன்**
**முனைவர் வி. கார்த்திகேயன்**
**திருமிகு சித்ரா**
**திருமிகு சிவப்பிரியா**
**முனைவர் கி. இராசா**
**முனைவர் சொ. மணிவண்ணன்**
**பேராசிரியர் வி. இராமன்**
**முனைவர் உல. பாலசுப்பிரமணியன்**
**பேராசிரியர் சாவித்திரி**
**முனைவர் சண்முக. செல்வகணபதி**
**பேராசிரியர் அர. செந்தமிழ்ச்செல்வி**

★

கருத்தரங்கம் 37

## மு.வ. நூற்றாண்டு விழா - பேராசிரியர் மு.வ.வின் தமிழியல் ஆய்வுகள்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், மு. வ. நூற்றாண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடும் வகையில் 'பேராசிரியர் மு. வ. வின் தமிழியல் ஆய்வுகள்' எனும் தலைப்பிலான கருத்தரங்கை 2012 மார்ச்சுத் திங்கள் 26, 27 ஆகிய நாள்களில் சென்னைச் சேப்பாக்கம், சுவாமி






சிவானந்தா சாலையில் அமைந்துள்ள இந்தியப் பொறியாளர் கழகத்தில் நிகழ்த்தியது.

26.03.2012 அன்று முற்பகல் 11 மணிக்குத் தொடங்கிய தொடக்க விழாவிற்குச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் இயக்குநர் பேராசிரியர் இரா. ஞானமூர்த்தி தலைமை தாங்கினார். நிறுவன ஆய்வறிஞர் முனைவர் ந. அரணமுறுவல் வரவேற்புரை நிகழ்த்தினார். இலக்கியத் துறைத்தலைவர் பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி கருத்தரங்கை அறிமுகம் செய்துவைத்தார். முனைவர் சிலம்பொலி செல்லப்பனார் தொடக்கவுரையும் கவிஞர் ஈரோடு தமிழன்பன் சிறப்புரையும் ஆற்றினார்கள். நிறுவனப் பதிவாளர் முனைவர் மு. முத்துவேலு நன்றி கூறத் தொடக்க விழா நிறைவுற்றது.

ஐந்து அமர்வுகளாக நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில் பின்வரும் அறிஞர்கள் தங்கள் ஆய்வுரைகளை நிகழ்த்தினர்.

**பேராசிரியர் கு. சிவமணி**
**முனைவர் இரா. மோகன்**
**முனைவர் இராமர் இளங்கோ**
**திரு இரா. முத்துக்குமாரசுவாமி**
**பேராசிரியர் அன்னிதாமசு**
**முனைவர் மே.து. இராசுகுமார்**
**முனைவர் ந. அரணமுறுவல்**
**முனைவர் ய. மணிகண்டன்**
**பேராசிரியர் ப. மருதநாயகம்**
**முனைவர் தி.ப. சித்தலிங்கையா**
**முனைவர் தெ.ஞானசுந்தரம்**
**முனைவர் அரங்க. இராமலிங்கம்**
**பேராசிரியர் இரா. கோதண்டராமன்**
**முனைவர் இரா. செல்லப்பன்**
**முனைவர் க. முருகையன்**
**முனைவர் சா.வளவன்**
**முனைவர் அ.அ.மணவாளன்**
**முனைவர் இ. மறைமலை**
**முனைவர் இராமகுருநாதன்**

நிறைவு விழா 27.03.2012 அன்று மாலை நடைபெற்றது. அவ்விழாவிற்குப் பேராசிரியர் க. இராமசாமி தலைமை தாங்கினார். பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி வரவேற்புரை நல்கினார். பேராசிரியர் அவ்வை நடராசன், பேராசிரியர் க.ப. அறவாணன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். கவிஞர் கா. வேழவேந்தன் வாழ்த்துரை வழங்கினார். பேராசிரியர் பொற்கோ விழா நிறைவுப் பேருரையாற்றினார். முனைவர் ந. அரணமுறுவல் நன்றிகூறினார். இரண்டு நாள்கள் இனிதே நிகழ்ந்த இக்கருத்தரங்கில் ஆய்வறிஞர்களும் ஆய்வாளர்களுமாகப் பலர் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

★

கருத்தரங்கம் 38

## தமிழிசை வேரும் விழுதுகளும்




செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனக் கலைத் துறையின் சார்பில் 'தமிழிசை வேரும் விழுதுகளும்' என்ற தலைப்பில் 26.03.2012 முதல் 28.03.2012 வரையிலான மூன்று நாள் தேசியக் கருத்தரங்கம் இராணி மேரி கல்லூரியில் நடத்தப்பெற்றது.

26.03.2012 காலை 9.30 மணியளவில் நடந்த தொடக்க விழாவில் கலைத்துறைத் தலைவர்(பொ) பேராசிரியர் இரெ. குமரன் வரவேற்று அறிமுகவுரையாற்றினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனப் பதிவாளர் முனைவர் மு. முத்துவேலு தொடக்கவுரையாற்றினார். இராணிமேரி கல்லூரி முதல்வர்(பொ) முனைவர் கே.ஆர். சீதாலட்சுமி தலைமையுரையாற்றினார். இசை ஆய்வறிஞர் பேராசிரியர் எஸ்.ஏ.கே. துர்கா தமிழிசை குறித்த மையக் கருத்துரை வழங்கினார். திரு குமரிமுத்துவும் பேராசிரியர் மா. வைத்தியலிங்கமும் வாழ்த்துரை நல்கினார்கள். கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் முனைவர் கூ. மு. புவனேசுவரி நன்றி கூறினார்.

ஒன்பது அமர்வுகளாக நடந்த இக்கருத்தரங்கில் சங்க இலக்கியங்களில் அமைந்துள்ள தமிழிசை தொடர்பான 28 கட்டுரைகள் படிக்கப்பட்டன.

**பேராசிரியர் எஸ்.ஏ. கே. துர்கா**
**பேராசிரியர் மா. வைத்தியலிங்கம்**
**பேராசிரியர் இ.அங்கயற்கண்ணி**
**பேராசிரியர் மே.து. இராசுகுமார்**
**பேராசிரியர் பிரமிளா குருமூர்த்தி**
**பேராசிரியர் ஜான் மனுவேல்**
**பேராசிரியர் சண்முக செல்வகணபதி**
**முனைவர் இராம கௌசல்யா**
**முனைவர் நா. மம்மது**
**முனைவர் கே. ஆர். சீதாலட்சுமி**
**முனைவர் ம.அ. பாகீரதி**
**முனைவர் கே.ஏ. பக்கிரிசாமி பாரதி**
**முனைவர் தி. அருட்செல்வி**
**முனைவர் செ. சுப்புலட்சுமி**
**முனைவர் அ. ஸ்ரீவித்யா**
**முனைவர் செ.கற்பகம்**
**முனைவர் இராஜஸ்ரீ**
**முனைவர் எழில்ராமன்**
**முனைவர் தி. சுரேஷ்**
**முனைவர் ஆர். தமிழ்ச்செல்வி**
**முனைவர் சி. கலைமகள்**
**முனைவர் அபிராமசுந்தரி**
**முனைவர் ப. உமா மகேஸ்வரி**
**முனைவர் ச. மலர்விழி**
**முனைவர் இரா. கலைவாணி**
**முனைவர் இரா. மாதவி**
**முனைவர் சுமதி**
**முனைவர் சத்தியவதி**



ஆகியோர் கருத்தரங்கில் கலந்துகொண்டு ஆய்வுரை வழங்கினர்.

28.03.2012 மாலை 3 மணியளவில் நடைபெற்ற நிறைவு விழாவில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனக் கலைத்துறைத் தலைவர் (பொ) பேராசிரியர் இரெ. குமரன் வரவேற்புரை நிகழ்த்தினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனப் பொறுப்பு அலுவலர் முதுநிலை ஆய்வறிஞர் பேராசிரியர் க. இராமசாமி தலைமையுரையாற்றினார். இராணிமேரி கல்லூரி முதல்வர் (பொ) முனைவர் கே. ஆர். சீதாலட்சுமி சிறப்புரை நிகழ்த்தினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன ஆய்வறிஞர் ந.அரணமுறுவல் வாழ்த்துரை வழங்கினார். இசை ஆய்வறிஞர் நா. மம்மது வாழ்த்துரையும் கருத்தரங்கம் குறித்த மதிப்பீட்டுரையும் வழங்கினார். கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் முனைவர் கூ.மு. புவனேசுவரி நன்றி கூறக் கருத்தரங்கம் இனிதே நிறைவுற்றது.

★

கருத்தரங்கம் 39

## தொல்லியலும் சங்க இலக்கியங்களும்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத் தொல்லியல் துறையின் சார்பாகத் 'தொல்லியலும் சங்க இலக்கியங்களும்' என்னும் தலைப்பில் தேசியக் கருத்தரங்கம் சென்னையில் உள்ள இந்தியப் பொறியாளர் கழகத்தில் 2012 மார்ச்சு 28, 29 ஆகிய நாள்களில் நடைபெற்றது.

28.03.2012 அன்று நடைபெற்ற தொடக்க விழாவில் தொல்லியல் துறைத் தலைவரும் கருத்தரங்க ஒருங்கிணைப்பாளருமான முனைவர் மே.து. இராசுகுமார் வரவேற்புரை வழங்கினார். பொறுப்பு அலுவலர் பேராசிரியர் க. இராமசாமி தலைமையில் தமிழ்நாடு அரசுத் தொல்லியல் துறை மேனாள் இயக்குநர் முனைவர் இரா. நாகசாமி சிறப்புரையாற்றினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன முதுநிலை ஆய்வு வளமையர் முனைவர் இரா. அருள்மணி நன்றிகூறினார்.

இரண்டு நாள்கள் நடைபெற்ற ஆறு அமர்வுகளுக்குப் பேராசிரியர் கு. சிவமணி, பேராசியர் ப. சண்முகம், முனைவர் சு. இராசவேலு, முனைவர் ஆ. பத்மாவதி,




முனைவர் மே.து. இராசுகுமார், முனைவர் ந. அரணமுறுவல் ஆகியோர் தலைமையேற்றுச் சிறப்பித்தனர். ஆறு அமர்வுகளில் கீழ்க்காணும் 28 ஆய்வாளர்கள் தங்களது ஆய்வுரைகளை வழங்கினர்.

**முனைவர் ம. சந்திரமூர்த்தி**
**முனைவர் பொ. இராசேந்திரன்**
**முனைவர் ச. கிருஷ்ணமூர்த்தி**
**முனைவர் து. துளசிராமன்**
**முனைவர் அரங்க. பூங்குன்றன்**
**திரு ஆ. கருணாகரன்**
**முனைவர் இரா. சுமதி**
**முனைவர் தி. சுப்பிரமணியன்**
**முனைவர் நா. மார்க்சியகாந்தி**
**முனைவர் சு. இராசவேலு**
**முனைவர் ப. சண்முகம்**
**முனைவர் அதியமான்**
**முனைவர் வீ. செல்வக்குமார்**
**முனைவர் ஆ. பத்மாவதி**
**திரு தேவ. பேரின்பன்**
**முனைவர் சொ. சாந்தலிங்கம்**
**முனைவர் சு. இராசகோபால்**
**முனைவர் கி. ஸ்ரீதரன்**
**முனைவர் இர. சுப்ரமணியன்/**
**ஜோ.த. பாட்ரீசியா பெர்ணாண்டோ**
**முனைவர் தெ. கல்யாணி**
**முனைவர் கூ.மு. புவனேசுவரி**
**முனைவர் க. நர்மதா**
**முனைவர் கு.ஜெயகுமாரி**
**முனைவர் இரா. அருள்மணி**
**முனைவர் கோ. சீனிவாசன்**
**முனைவர் த. சரவணன்**
**முனைவர் சி. கார்த்திகேயன்**
**முனைவர் பி. கணேசன்**

29.03.2012 அன்று நடைபெற்ற நிறைவு விழாவில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன இளநிலை ஆய்வு வளமையர் முனைவர் கோ. சீனிவாசன் வரவேற்புரையாற்றினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனப் பதிவாளர் முனைவர் மு. முத்துவேலு தலைமையேற்க, தமிழ்நாடு அரசுத் தொல்லியல் துறை மேனாள் இயக்குநர் நடன. காசிநாதன் சிறப்புரை வழங்கினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன முதுநிலை ஆய்வறிஞர் பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி நிறைவுரையாற்றினார். முனைவர் மே.து. இராசுகுமார் நன்றிகூறினார். இரண்டு நாள்கள் நடைபெற்ற கருத்தரங்கில் தொல்லியல் ஆர்வலர்கள், தமிழ் அறிஞர்கள், ஆய்வு மாணவர்கள், பொதுமக்கள் பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

★

கருத்தரங்கம் 40

## தமிழர் கலைகள்: வரலாறும் ஆய்வும்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனக் கலைத்துறையின் சார்பாகத் 'தமிழர் கலைகள்: வரலாறும் ஆய்வும்' என்னும் தலைப்பில் தேசியக் கருத்தரங்கம் சென்னையில் உள்ள தியான ஆசிரமத்தில் 2012 மார்ச்சு 29, 30 ஆகிய நாள்களில் நடைபெற்றது.

29.03.2012 அன்று நடைபெற்ற தொடக்க விழாவில் கலைத்துறைத் தலைவரும் கருத்தரங்க ஒருங்கிணைப்பாளருமான முனைவர் இரெ. குமரன் வரவேற்புரை வழங்கினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனப் பதிவாளர் மு. முத்துவேலு தலைமையேற்றார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனப் பொறுப்பு அலுவலர் பேராசிரியர் க. இராமசாமி வாழ்த்துரை வழங்கினார். மாமல்லபுரம் சிற்பக்கலைக் கல்லூரிப் பேராசிரியர் எம். பாலசுப்பிரமணியன் தொடக்கவுரை யாற்றினார். தொல்லியல் துறையின் மேனாள் இயக்குநர் முனைவர் இரா. நாகசாமி நோக்கவுரையாற்றினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன முதுநிலை ஆய்வு வளமையர் சு. ஏழுமலை நன்றி கூறத் தொடக்க விழா நிறைவடைந்தது.

இந்தக் கருத்தரங்கில் பின்வரும் அறிஞர்கள் தங்கள் ஆய்வுரைகளை வழங்கினர்.

**பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி**
**ஓவியர் சந்துரு**
**பேராசிரியர் ஏ. ஏகாம்பரநாதன்**
**முனைவர் ம.சோ.விக்டர்**
**பெருந்தச்சன் தென்னன் மெய்ம்மன்**
**முனைவர் இரா. நாகசாமி**
**முனைவர் ஆ. பத்மாவதி**
**திரு அனந்தபுரம் கோ. கிருட்டினமூர்த்தி**
**திரு மு. காமாட்சி**
**திரு கோ. உத்திராடம்**
**பேராசிரியர் கோ. தெய்வநாயகம்**
**திரு மா. சந்திரமூர்த்தி**
**முனைவர் சௌ. பா. சாலாவாணிஸ்ரீ**
**திரு வே.அழகுமுத்து**
**முனைவர் சு. ஏழுமலை**
**திரு சி. இராமச்சந்திரன்**
**முனைவர் எஸ். இளங்கோவன்**
**பிரம்மவேதி எம்.வி. நரசிம்ம சில்பாச்சாரியார்**
**முனைவர் கா.மு.பாபுஜி**
**திரு மு. சந்திரசேகரன்**





★★★★★

கருத்தரங்கம் 41

## சங்ககாலத் தமிழர் வழக்காறுகளும் சமயக் கோட்பாடுகளும்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் தென்பொதிகைத் தமிழ்ச் சங்கமும் குற்றாலம் ஸ்ரீபராசக்தி மகளிர் கல்லூரித் தமிழ்த்துறை உயராய்வு மையமும் இணைந்து 'சங்ககாலத் தமிழர் வழக்காறுகளும் சமயக் கோட்பாடுகளும்' என்னும் தலைப்பில் 28.03.2012 முதல் 30.03.2012 வரை தேசியக் கருத்தரங்கினை நடத்தின.

இதன் தொடக்க விழா 28.03.2012 அன்று காலை 10 மணியளவில் நடைபெற்றது. ஸ்ரீபராசக்தி மகளிர் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் பா. வேலம்மாள் அனைவரையும் வரவேற்றார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனப் பதிவாளர் மு.முத்துவேலு தலைமை தங்கினார். குப்பத்திலுள்ள திராவிடப் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் சூ. செல்லப்பா தொடக்கவுரையாற்றினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன ஆய்வறிஞர் முனைவர் ப. மருதநாயகம் மையவுரையாற்றினார். குற்றாலம் ஸ்ரீபராசக்தி மகளிர் கல்லூரி முதல்வர் முனைவர் ப. இராஜேஸ்வரி வாழ்த்துரை வழங்கினார். தென்பொதிகைத் தமிழ்ச் சங்கச் செயலர் ச. துரைமுருகன் நன்றி நவின்றார். ஸ்ரீபராசக்தி மகளிர் கல்லூரித் தமிழ்த்துறைப் பேராசிரியர் மு. மகேசுவரி நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

இந்தக் கருத்தரங்கில் கீழ்க்காணும் அறிஞர்கள் தங்கள் ஆய்வுரைகளை வழங்கினர்.

**முனைவர் மு. இராமகிருஷ்ணன்**
**பேராசிரியர் க. நெடுஞ்செழியன்**
**பேராசிரியர் ப. மருதநாயகம்**
**முனைவர் சீ. பக்தவத்சல பாரதி**
**முனைவர் த. தருமராசன்**
**மருத்துவர் வ. நாராயணன்**
**முனைவர் மே.து. இராசுகுமார்**
**முனைவர் ந. இராமச்சந்திரன்**
**பேராசிரியர் சு. இராசவேலு**
**மருத்துவர் மைக்கேல் செயராசு**
**பொறிஞர் ஆதிசங்கரன்**
**மருத்துவர் கல்பனா**
**முனைவர் அமுதாபாண்டியன்**
**முனைவர் மு. இராமசாமி**
**திரு பாமயன்**
**முனைவர் சிவ. மாதவன்**
**முனைவர் வெ. வேதாச்சலம்**

30.03.2012 அன்று மாலை நடைபெற்ற நிறைவு விழாவில் தென்பொதிகைத் தமிழ்ச் சங்கச் செயலாளர் வரவேற்புரை வழங்கினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனப் பொறுப்பு அலுவலர் க. இராமசாமி தலைமை வகித்தார். திருச்சித் தூய வளனார் கல்லூரிப் பேராசிரியர் சூ. ஜான்பிரிட்டோ நிறைவு விழாப் பேருரையாற்றினார். உலகத் தமிழராய்ச்சி நிறுவன முன்னாள் இயக்குநர் முனைவர் ச.வே.சுப்பிரமணியன், திருச்சிராப்பள்ளி உலகத் தமிழ்மொழி மெய்யியல் பண்பாட்டு ஆய்வு நிறுவனப் பொருளாளர் முனைவர் இரா. சக்குபாய் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். ஸ்ரீபராசக்தி மகளிர் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் பா. வேலம்மாள் நன்றி நவின்றார்.

★

கருத்தரங்கம் 42

## செம்மொழித் தமிழும் அகராதியியலும்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நிதிநல்கையுடன் திருவள்ளுவர் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை 'செம்மொழித் தமிழும் அகராதியியலும்' என்னும் தலைப்பிலான கருத்தரங்கினை 2012 மார்ச்சு 29, 30, 31ஆகிய நாள்களில் நடத்தியது. இதன் தொடக்க விழாவில் முனைவர் இரா. கோதண்டராமன் தொடக்கவுரையாற்றினார். முனைவர் செ. வை. சண்முகம் விழாச் சிறப்புரை யாற்றினர்.

இந்தக் கருத்தரங்கில் பின்வரும் அறிஞர்கள் பங்குபெற்றுத் தங்கள் ஆய்வுரைகளை அளித்தனர்.

**பேராசிரியர் அ. பாண்டுரங்கன்**
**பேராசிரியர் வி. முருகன்**
**பேராசிரியர் இரா. கோதண்டராமன்**
**முதுமுனைவர் இரா. இளங்குமரனார்**
**முனைவர் பா. சந்திரமோகன்**
**முனைவர் கா. உமாராஜ்**
**முனைவர் பா. பாண்டியராஜா**
**முனைவர் அ. செந்தில்நாராயணன்**
**முனைவர் ச. மனோகரன்**
**முனைவர் சி. சண்முகம்**
**முனைவர் கே. பழனிவேலு**
**முனைவர் த. விஷ்ணுகுமாரன்**
**முனைவர் கோ. விசயவேணுகோபால்**
**பேராசிரியர் இரா. அறவேந்தன்**
**பேராசிரியர் சு. வேங்கடராமன்**
**முனைவர் ப. குழந்தைசாமி**
**முனைவர் இரா. சீனிவாசன்**
**முனைவர் சீ. பக்தவத்சல பாரதி**





முனைவர் கோ. பழனிராஜன்
பேராசிரியர் பெ. மாதையன்
முனைவர் தி. தாமரைச்செல்வி
முனைவர் பா.ஜெய்கணேஷ்
பேராசிரியர் இரா. செயராமன்
முனைவர் கு.ர. சரளா
பேராசிரியர் ச. இராஜா

31.03.2012 அன்று நடைபெற்ற நிறைவு விழாவில் பேராசிரியர் பெ. மாதையன் நிறைவுரையாற்றினார்.

★

கருத்தரங்கம் 43

## பல்துறை நோக்கில் பழந்தமிழ் இலக்கியங்கள்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் சென்னைத் தாம்பரம் கிறித்தவக் கல்லூரியும் இணைந்து 'பல்துறை நோக்கில் பழந்தமிழ் இலக்கியங்கள்' என்னும் பொருண்மையில் 29.03.2012 முதல் 31.03.2012 முடிய மூன்று நாள்கள் கருத்தரங்கினை நடத்தின.

★

கருத்தரங்கம் 44

## கேரளப் பண்பாட்டு மரபு வழியாகச் சங்ககால மீட்டுருவாக்கம்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் கோழிக்கோடு பல்கலைக்கழக நாட்டுப்புறவியல் பெரும்புலமும் இணைந்து 'கேரளப் பண்பாட்டு மரபு வழியாகச் சங்ககால மீட்டுருவாக்கம்' என்னும் தலைப்பில் 29.03.2012 முதல் 31.03.2012 வரை மூன்று நாள்கள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் இ.கே. கோவிந்த வர்ம ராஜா இதன் ஒருங்கிணைப்பாளராக விளங்கினார்.

★

# இசைக் குறுவட்டுக்கள்







பத்துப்பாட்டு முற்றோதல் (5 தொகுதிகள்) விலை உரூ.250/-







தொல்காப்பியம் முற்றோதல் (5 தொகுதிகள்) விலை உரூ.250/-

பழந்தமிழ்ப் பாக்கள் மரபுவழிப் படித்தலும் பாடுதலும்
(தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு)
விலை உரூ.50/-



# அகத்திணைக் கல்வி

பேராசிரியர் வ.சுப. மாணிக்கம்



அகத்திணை என்பது தமிழர் கண்ட காதல் நெறி. தமிழ் மொழி ஒன்றிலே காணப்படும் காதல் இலக்கியம், ஞால மக்கட்கெல்லாம் உரிய காதல் வாழ்க்கையுமாம். ஆதலின் அகத்திணை யறிவு பெண்ணுக்கும் ஆணுக்கும் இன்றியமையாக் கல்வியாகும். நம் தமிழ் முன்னோர் அகக்கல்வியைச் செம்மையாகப் பெற்றிருந்தனர். அதனால் அன்னவர் இல்லற வாழ்வு பூசலின்றி இயங்கியது. ''பேரமர் உண்கண் இவளினும் பிரிக'' என்று (புறம். 71) பூதப்பாண்டியனும், ''வரைவின் மகளிர் மார்பிடை என் மாலை படுக'' என்று (புறம். 71) சோழன் நலங்கிள்ளியும் கூறும் வஞ்சினங்களில் அன்னோர் மனையன்பைக் காண்கிறோம். அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி என்பது பண்டை அரசியல் செல்நெறி. வேந்தர்களே செவ்விய கணவன்மாராக ஒழுகியதால், மக்களின் மனை வாழ்வும் அன்று ஒழுங்குபட இலங்கியது. சங்ககாலத்து அகக்கல்வி பரவியது, பரப்பப்பட்டது. தமிழ் மக்களெல்லாம் அகவுணர்ச்சியாக வாழ்ந்தனர் என்பதற்கு வேறு சான்று வேண்டா. நானூறு புலவர்கள் அகச்செய்யுள் யாத்தனர் என்பது ஒரு சான்று. இரண்டாயிரம் அகச் செய்யுட்கள் யாக்கப்பட்டன என்பது மற்றொரு சான்று. நமக்குக் கிடைத்துள்ள சங்கப்பனுவலிலிருந்து அறியப்படும் தொகைகள் இவை.

**நூலின் நோக்கம்**

காலக் கூற்றுவனது கொடுவாயும் கறையானது ஈரவாயும் உண்டு செரித்த அகப்பாடல்கள் எத்துணை, எத்துணை? தொல்காப்பியத்துக்கு முந்திய அகப்பாக்கள் எங்கே எங்கே? சங்கத் தொகைகளில் இல்லாது உரையாசிரியர்கள் காட்டும் அகச்செய்யுட்கள் தாமும் யாண்டு ஒளிந்தன? இவற்றையெல்லாம் ஆக்கிய புலவர்கள் எத்துணையரோ! எவ்வளவு எவ்வளவோ தொலைந்த பின்னும் நற்பேற்றால் எஞ்சி வாழும் தொல்காப்பியமும் சங்கப் பனுவல்களும் நமக்குப் பேராறுதல் அளிக்கின்றன. மனையாளை இழந்த இளைஞன் குழந்தையைக் கண்டு ஆறுதல் அடைகின்றான் அன்றோ? பல்லாயிரம் ஆண்டுகளாகப் பல்லோரால் அகத்திணைச் செய்யுட்கள் ஆக்கப்பட்டன என்பதனால், அகக்கல்வி தமிழ்ச் சமுதாயத்தில் நல்லூரம் பெற்றிருந்தது, நல்வளம் தந்தது என்பது வெளிப்படை. இத்தகு கல்வி சங்கப்பிற்காலத்து மறைந்தமையால் தமிழ் நாட்டில் பல்லூறுகள் ஏற்பட்டன. அகக்கல்வி பரவாது படியாது குறைந்தது. அகத்திணையின் தோற்றமும் நோக்கமும் அமைப்பும் எல்லாம் விளங்காது, விளக்குவாரின்றி மறைபட்டன. விளக்கப் புகுந்தாரும் சமயக்கல்வியாகவும் வீடுபேற்றிற்கு உரிய இலக்கியமாகவும் அகத்திணையைத் திரித்து எழுதினர், கற்பித்தனர். அதனால் அகத்திணை தன் உண்மையை இழந்து, மாறான பொய்யேற்றம் கொண்டது. தமிழினமும் உலகினமும் காதற்றுறையில் புத்துயிரும் புதுவாழ்வும் பெறவேண்டுமேல், அகத்திணைக் கல்வி தமிழகத்தும் உலகத்தும் பரவவேண்டும்; பொய்களைந்து காதல் மெய்ம்மைகளைப் பரப்ப வேண்டும். இந்நோக்கத்தால் தமிழ்க் காதல் என்னும் இந்நூல் எழுந்தது.

**காதற் காமம்**

தமிழ்மொழிக்கண் காதல், காமம் என்ற இருசொற்கள் உள. இவற்றின் நேர்பொருள் என்ன? கடவுட் காதல், தெய்வக் காதல், மக்கட் காதல், மொழிக் காதல், நாட்டுக் காதல் என்ற தொடர்களை நாம் கேட்கின்றோம். நல்லுறவெல்லாம் காதல் என்ற கிளவியால் மொழியப்படும். காதலந்தோழி, தமர் பாராட்டக் காதலின் வளர்ந்த மாதர், குறவன் காதல் மடமகள், காதற் செவிலியர், நின் காதலம் புதல்வன் எனவரும் சங்கத் தொடர்களில் உறவுமுறைகள் காதல் வாய்பாடு படுகின்றன. ''கருங்கோட்டு எருமைச் செங்கட் புனிற்றாக் காதற்குழவி'' (ஐங். 62) என்ற அடியில் அஃறிணை உறவும் காதலாகின்றது. ''பொருளே காதலர் காதல்'' (அகம். 53) என்ற தலைவி கூற்றில் தலைவனது பேராசை காதலாகத் தோன்றுகின்றது. ஆண் பெண் காதலுறவைக் குறிக்குமிடத்து, அன்பு கேண்மை முதலான சொற்களும் ஆளப்படுகின்றன. தமிழ்மொழிக்கண் காதற் சொல்லாட்சி பல்லாறாக இருப்பினும் அவற்றிடை ஓர் ஒற்றுமைப் பண்பு உண்டு. உள்ளத்தோடு இயைந்த தொடர்பெல்லாம் காதல் எனப்படுகின்றது. எனவே காதல் உள்ளப் புணர்ச்சி, மனவிசைவு என்று பொருள் கொள்ளலாம். இப்பொருள் அகத்திணைத் தலைமக்களுக்கும் பொருந்தும், உள்ளப் புணர்ச்சி அகத்திணையின் தலையாய இலக்கண மாதலின் மேலும் ஒன்றை நினைமின். காதல் என்னும் தொழிற்சொல் பல அன்புறவுகளைக் குறித்தாலும், காதலன் காதலி என்ற சொற்கள் பாலுறவுடையவர்களையே குறிக்கும். பிறவுடையாரையும் அன்பர்களையும் நண்பர்களையும் எத்துணை உள்ளொற்றுமை இருப்பினும் காதலி காதலன் என்று சொல்லும்போதும், அத்தொழிற்சொல் பாலுறவையே சுட்டும். இதனால் காதற்சொல் உள்ளன்பை உணர்த்துவது எனவும், முதலாவதாகப் பாலுறவைக் காட்டி நிற்பது எனவும் அறியலாம்.

கோப்பெருஞ் சோழனும் பிசிராந்தையாரும் நட்பினர். அதியமானும் ஔவையாரும் நட்பினர். ஆணும் பெண்ணும் நட்புறுதல் போல ஆணும் பெண்ணும் மனம் ஒத்த நட்பாக இருக்கலாம்; உணர்ச்சி ஒன்றிய நண்பர்களாக இருக்கலாமே. இவ்வுறவு மானிடவுறவன்றிப் பாலுறவாகாது. பாலுறவு என்று சொல்லும்போது உள்ளப்புணர்ச்சிமேல் உடற் புணர்ச்சியைக் கருதுகின்றோம். பால் என்பது மெய்யுறு காமத்தைக் குறிக்கும். ஆண்பால் பெண்பால் என்ற பிரிவு முதற்கண் மெய் வேற்றுமையால் எழுவதன்றோ? எனவே பாலுறவு என்பது அம்மெய்களின் முயக்கத்தையே உணர்த்தும்.

காமம் என்னும் சொல்லுக்கு மெய்யுணர்ச்சி என்பது பொருள். ''மெய்யில் தீரா மேவரு காமம்'' (அகம். 28) என்பர் கபிலர். இச்சொல் பண்டு நற்பொருளில் பயின்றது. பாலுறவைக் ''காமக்கூட்டம்'' (1037) என்றும், காதலனைக் ''காமக் கிழவன்'' (1058) என்றும் கூறுவர் தொல்காப்பியர். திருக்குறள் மூன்றாவது இயல் காமத்துப்பால் என வழங்கப்பெறும். மலரினும் மெல்லிது காமம், காமம் கூடியார் பெற்ற பயன், காமத்துக் காழில் கனி, கள்ளினும் காமம் இனிது எனப் பல குறள்களில் காமச்சொல் பயின்று வருகின்றது. மன்மதனைக் காமக்கடவுள் என்று மொழிவர் இளங்கோ.

காமம் என்பது பருவவுணர்ச்சி, மெல்லிய உடலுணர்ச்சி. இவ்வுணர்ச்சி பெருகி வளருங் காலம் இளமை எனவும், குறைந்து சிறுகுங்காலம் முதுமை எனவும் படும். ஆதலின் குறைவு தொடங்குவதற்கு முன்னுள்ள இளமையில், பாலின்பம் துய்ப்பதைக் கருத்திற்கொள்ள வேண்டும். தமிழ்த்திணை எனத்தகும் அகத்திணைக்கு வெறும் உள்ளக் காதலும் பொருளன்று. வெறும் மெய்க் காமமும் பொருளன்று, உள்ளம் இயைந்த உடலுறவும், உடல் இயைந்த உள்ளவுறவும், சுருங்கக்கூறின் உயிர்மெய்ப் புணர்ச்சியே அதன் பாடுபொருளாம். ஆண்டாள் காதல் அகத்திணையாகாது, மெய்யுறல் இன்மையின். மாருத வேகன் சுதமதியைக் கூடியதும் அகத்திணையாகாது, உள்ளிசைவு இன்மையின் ''மெய்யாக நோக்கின் காதல் என்பதனுள் உடற் கலப்பும் அடங்கும். உடற்கலவியின்றிக் காதற்றன்மை செவ்வுறாது. பாலுறவுதான் காதல் என்னும் தகுதிக்கு உரியது. காதல் என்ற பெயர் மேலிட்டுப் பிறவாறு சொல்லுவனவெல்லாம் அரைகுறையான உருவகமாவன'' என்பர் ஆசுவால் சார்ச்சு.[1]

*காதற் காமம் காமத்துச் சிறந்தது*
*விருப்போ ரொத்து மெய்யுறு புணர்ச்சி* (பரி.9)

என்று இரு சொற்களையும் இயைத்தார் குன்றம் பூதனார். பொதுவான மொழி வழக்கில் காதல் என்பது உள்ளப் பற்றையும், காமம் உடற்பற்றையும் குறிக்கும் என முன்னர்க் கண்டோம். இருசொல்லின் பொருளையும் ஒருங்கு காட்டும் ஒரு தமிழ்ச் சொல் உண்டா? உண்டு. அதுவே அகம் என்னும் சொல். எனினும் முன்னிலைப்படுத்திக் கூறும் நான்மறையாளர்க்கு விளங்கவேண்டி, குன்றம் பூதனார் ''காதற்காமம்''[2] என்ற ஒரு புதுத் தொடரை ஆக்கினார். ஆக்கி, ''விருப்பு ஓரொத்து மெய்யுறு புணர்ச்சி'' எனப் பொருளும் நிரல்பட விரித்துக் காட்டினார். இக் காதற்காமந்தான் அகத்திணை. அகத்திணைத் தலைமக்கள் உள்ளங்கூடிய உடற்கூட்டாளிகள். உடல் மட்டும் கலந்ததா, உள்ளம் மட்டும் கலந்ததா? என்ற வினாவிற்கு இவர்பால் இடமில்லை. ஆதலின் அகப்பாட்டின்கண் காதல் என்ற சொல் வருமிடத்துக் காமப் பொருளும் உண்டெனக் கொள்க; காமச்சொல் வந்த இடத்துக் காதற் பொருளும் உண்டெனக் கொள்க.

**உள்ளப் புணர்ச்சி**

காதலர்தம் உள்ளப்புணர்ச்சியை அகப்பாட்டு விரித்துரைப்பது இல்லை. அதனை விரித்து மொழிய என்ன இடனுண்டு? ''பாலது ஆணையின் ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப'' என்று உள்ள ஒற்றுமையின் இயல்புக் கிடப்பைக் கூறுவர் தொல்காப்பியர். களவுத் தலைவனைத் தோழி பன்முறை வரைவு கடாவும் போதும், அவன் வரைவு நீட்டிக்கும் போதும், அவனது உள்ளத்தில் மாறுபாடு உண்டோ என்று ஐயுறுதல் கூடாது. வேற்றுமணஞ் செய்து கொள்வான் என்ற கருத்தை உள்வைத்துத் தோழி வரைவுமுடுக்கல் இல்லை. அந்நோக்கம் வைத்து அவன் நாட்கடத்தலும் இலன். திருமணத்திற்குப்பின் தலைவன் வேற்று நாட்டைப் பல திங்கள் பிரிந்திருந்தபோதும், உள்ளூரின்கண் பரத்தையிற் பிரிந்த போதும் அவனது நெஞ்சத்தன்பிற்கு வஞ்சகம் கற்பிப்பது இல்லை. ''அறனில்லா அன்பிலி பெற்ற மகன்'' (கலி. 89) என்று கடிவனவெல்லாம் உணர்ச்சிச் சொற்களேயன்றி உண்மைக் கருத்துக்கள் அல்ல. அகத்தின் எத்துறைப் பாட்டும் உள்ளப்புணர்ச்சி, மனவுறவு என்னும் அடிநிலத்திலிருந்து தோன்றுவது. அந்நிலத்திற் பிறவாப் பாட்டு அகப்பாட்டு இல்லை. ஆதலின் இருவர்தம் மனவொப்பு உண்டோ இன்றோ, நிறைவோ குறைவோ என்ற வகையால் அகப்பாட்டில் ஆராய்ச்சி இல்லை. காதலன்மேல் காதலிக்கும், காதலிமேல் காதலனுக்கும் ஐயந்தோன்றிவிடின்?... தோன்றல் ஆகாது, தோன்றும் எண்ணமே ஆகாது எனின், அதுபற்றி மேலும் சிந்தித்தலும் காரணம் தேடலும், மறைந்து காணலும், பிறர்பாற் சொல்லலும், பிறர் சொல்லக் கேட்டலும் ஆகுமா? காதலுலகில் ஐயப்பாதை சாவுப்பாதை. எண்ணம் என்னும் அடியை ஒருகால் ஐயவழியில் எடுத்து வைத்துவிட்டால், அவ்வழி நீளுமேயல்லது முடியாது. அவ்வழியில் நடப்பவர் ஓடுவார் திரிவார் உழல் புணர்ச்சி இமயமலையன்ன உயர்ந்த புணர்ச்சியாகவும் தமிழன்ன தூய புணர்ச்சியாகவும் இலங்குக.

அகத்திணை இலக்கியத்தைக் கற்கும் காதலர்க்கு நிறைவான நல்லுணர்ச்சி தோன்றுமலலது கயமைப் புல்லுணர்ச்சி தோன்றாது. ஏன்? காதற்பொருளில் ஐயச் சிந்தனைகள் ஆண்டு நுழைவு பெறவில்லை. காப்பியம், புதினம், நாடகம் முதலான பிற இலக்கியங்கள் காதலர்க்கு மனவொப்பு வேண்டும் என்று முடித்தாலும், முடிப்பதற்குமுன், ஒருவர் மேல் மற்றொருவருக்கு எழுந்த ஐயப்பாடுகளை எல்லாம் அழகாக விரித்து விளக்கும். நுணுக்கமாக ஐயங்களைக் காட்டிச் செல்லும், பலபட ஐயச்சார்புகளை அடுக்கிக் கொண்டுபோகும். சூழ்நிலையும் கரவும்கொண்டு அமைப்பதுதான் இலக்கிய அமைப்பு என்று கூறுவர் திறனாய்வாளர். இலக்கிய மாந்தர்களை ஐயப்பாதையில் இழுத்துச் செல்லும் போது, அவற்றைக் கற்பவரும் அப்பாதையில் நெடும்பொழுது நடக்கின்றனர். அதனால் காதற்பள்ளியில் ஐயக் கல்வியும் பெறுகின்றார் என்பதுவே கருத்து, நெஞ்சம் விழைவோடு நீள நினைப்பது எது, அறிவு வேட்கையோடு மிகுதியும் கற்பது எது, அது வாழ்க்கையிற் பதிந்துவிடும். பிறவிலக்கியம் எல்லாம் வழுவமைதியிலக்கியம். அகத்திணை ஒன்றுதான் வழாநிலையிலக்கியம், இவ்விலக்கியத்தின் முடிபும் தூயது; அம்முடிவினைக் கற்பிக்க மேற்கொண்ட நெறியும் தூயது. ஆதலின் காதல் ஞாலத்து நிறைநெஞ்சம் வேண்டும் மனித குலம் தமிழ் அகத்திணையைக் கற்கவேண்டும். அகத்திணைக் கல்வி சங்ககாலங்களில் நன்றாக முறையாகப் பரவியிருந்தமையின், தமிழ் மொழிக்கண் ஒழுக்க ஐயத்தினை வைத்து இலக்கியங்கள் எழவில்லை என்று அறிக. சிலப்பதிகார மணிமேகலைத் தமிழ்க் காப்பியங்கள் இதற்கு ஓர் சான்று.

**காமப்புணர்ச்சி**

அகத்திணை இலக்கியத்தில் பன்மாணும் விரித்துப் புனையப் பெறுவது ஏனையதாகிய காமப்புணர்ச்சியே. புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல் ஊடல்களும் இவற்றின் நிமித்தங்களும் எல்லாம் காமப்புணர்ச்சியின் கூறுகளே. முதல் கருவெல்லாம் காமப்புணர்ச்சியின் விரிவுகளே. காமம் பிறப்பின் இயல்பானது. நல்லது, இனியது, இன்றியமையாதது என்பது தமிழியம். காமத்துறையில் எண்ணங்களை எண்ணுவது எப்படி? சொல்லுவது எப்படி? புறச் சூழ்நிலைகளைப் பயன்கொள்வது எப்படி? புணர்வைத் துய்த்தும் பிரிவைப் பொறுத்தும் வாழ்வது எப்படி? என்ற அறிவுரைகளை அகப்பாட்டுக் கற்பிக்கின்றது. ஆண்பாலின் பெருமிதத்தையும் உரனையும் மனைவி மதிப்பதும், பெண்பாலின் அருமையையும் நிறைவையும் நாணத்தையும் கணவன் மதிப்பதும் ஆகிய கல்வியை அகத்தாற் பெறலாம்.

1. The Psychology of Sex, p.105.
2. காதலங் காமம், பரி.6; அன்புறு காமம், நற்.389

உலக வளர்ச்சி பசியால் உண்டு; உள்ள வளர்ச்சி காமத்தால் உண்டு. அரும் பெருஞ் சான்றோர் சிலர் ஞால நலங்கருதிப் பசி நோற்கலாம், காமம் நோற்கலாம். இஃது இயற்கையும் அன்று; உயிர்ப் பொதுவிதியும் அன்று. பசியும் காமமும் நிறையா உணர்ச்சிகள். இவற்றுக்குத் திங்கள் போல் நிறைவும் குறைவும் மாறி மாறி வரும். மாறிமாறிவரும் இச்சூழ்ச்சியால் ஞாலம் வாழுகின்றது. உயிர்கள் பிறந்து வாழ்கின்றன. சங்ககாலம் காமவின்பத்தை மாசற்ற இன்பம் எனப் போற்றி வளர்த்த காலம். அதனால் காம மெய்ப்பாடுகளை மெய்ப்பாட்டியலில் தொல்காப்பியர் வகைபட நூற்பித்தார். சங்கப்பாட்டு எதுவும் அன்புக் காமத்தை இழிவெனச் சுட்டியதில்லை.

*நோதக் கன்றே காமம் யாவதும்*
*நன்றென உணரார் மாட்டும்*
*சென்றே நிற்கும் பெரும்பே தைமைத்தே* (குறுந். 78)

என்பது பாங்கன் தலைமகனைக் கழறிய பாட்டு. ''தன்னை விழைந்தார் விழையாதார் என்று பாராது காமம் யார் மேலும் செல்லும்; அங்ஙனம் செல்வது பெரிய மடமை. ஆதலின் அக்காமவுணர்ச்சி வெறுக்கத்தக்கது, கைவிடத்தக்கது'' என்பது பாங்கன் இடிப்புரை. ஒருவன் ஒருத்திபால் காமம் செலுத்துகின்றான்; அவளும் அதனை நல்லது என்று ஏற்று உணர்கின்றாள்; எனின் அக்காமம் விரும்பத்தகுவது, அறிவுடையது என்ற குறிப்பு இப்பாட்டிற் கிடைக்கவில்லையா? தலைவன் தன் புதிய உணர்ச்சியை வந்து சொல்லியபோது, ''இவ்வுணர்ச்சி அவளுக்கும் தோன்றியிருக்குமா? தோன்றி இருக்கும் என இவன் கருதுவது ஒக்குமா? இருபால் ஒப்பு இன்றெனின் காமம் பழியும் கேடும் தருமே'' என்ற நினைவினால் பாங்கன், ''நோதக்கன்றே காமம்'' என்றான். காமத்தை இழிப்பது அவன் நோக்கம் அன்று; உணர்வொப்பு வேண்டும் எனச் சுட்டிக் காட்டுவதே அவன் நோக்கம்.

*காலையும் பகலும் கையறு மாலையும்*
*ஊர்துஞ்சு யாமமும் விடியலும் என்றிப்*
*பொழுதிடை தெரியிற் பொய்யே காமம்* (குறுந். 32)

என்பது ஒரு களவுத் தலைவன் மொழிவு. களவான மறைவொழுக்கம் ஆதலின் நினைத்தாங்கு இன்பம் அவனாற் பெற இயலவில்லை. தலைவனை விரைவில் வரையச் செய்யவேண்டும் என்ற கருத்தால் இரவுக்குறி பகற்குறிக்கு இடஞ்செய்யாது கழிக்கின்றாள் தோழி. காமம் புதிது துய்த்த தலைவனுக்கு ஓரிரு புணர்ச்சிகளால் வேட்கை மிக்கதே யன்றித் தணியவில்லை. பொழுது பாராது இன்பம் எய்தவேண்டும், பிரிவு என்பது கூடாது என்பது அவனது விழைவு. எண்ணியது கைகூடாமையின் ''பொய்யே காமம்'' என்று கசந்தான். பொழுது இடையின்றி ஐம்பொழுதும் தலைவியைப் பெற முடியுமெனின், காமம் மெய்யே என்பது அவன் உள்ளெண்ணம்.

*பயனின்று மன்றம்ம காமம்* (கலி. 142)
*கனவின் நிலையின்றாற் காமம்* (கலி. 145)
*அரைசினும் அன்பின்றாற் காமம்* (கலி. 146)

என்பன பெருந்திணைத் தலைவியின் பிதற்றல்கள். கணவன் பிரிவினால் நாணிழந்தாள். நிறையிழந்தாள், ஊறறிய உற்றது உரைத்தாள். ஆராக் காமவேட்கை, இப்பழம் புளிக்கும் என்றது போல வெறுப்பை விளைக்கின்றது. அதுவல்லது அந்நங்கை காமத்துறவு பூண்டாள் என்பது கருத்தன்று. நுனிக் கொம்பளவும் ஏறி வீழ்பவன் மரம் ஏறுவது கூடாது என்றல் போல, முதுமொழி கூறுகின்றாள் காமம் காழ்த்த மங்கை. கணவன் வந்த பின்றை விடாக் காமம் உண்ண வேண்டும் என்பது அவள் வேட்கை.

### காம மதிப்பு

காதலன் தன் காதலியின் காமக்கூறுகளையும் அவள் அவன்தன் காமக் கூறுகளையும் புரிந்துகொண்டு ஒழுக வேண்டும். சொல்லித் தெரியவேண்டும் என்று வாளாவிராது, சொல்லிய சொல்லுள்ளும் சொல்லாத சொல்லுள்ளும் நாடி உணர வேண்டும். உணராக்குறை ஒருகோடி கேடுதரும். காமக் குறைவினால் இல்லறம் கெடும்; அக்குறைவுடையார் அணை கடந்த வெள்ளம்போல ஊரையும் நாட்டையும் உலகத்தையும் கெடுப்பர். அத்தகை கேடுகளுக்கு மூலகாரணம் இன்பக்குறை என்பதை யார் அறிவார்? நாளாயின் அவரே அறியார்காண். ஆதலின் ஒருவனுக்கும் ஒருத்திக்கும் இன்பநிறைவு வீட்டிற்கும் நாட்டிற்கும் நல்லது. இந்நிறைவுக் கல்வியை அகத்திணையில் காண்கிறோம்.

*நோயலைக் கலங்கிய மதனழி பொழுதிற்*
*காமம் செப்பல் ஆண்மகற்கு அமையும்*
*யானே, பெண்மை தட்ப நுண்ணிதின் தாங்கி* (நற். 94)

ஆடவன் தன் காமத்தை வெளிப்படச் சொல்வான், நங்கை அதனை நாணத்தாற் புலப்படுத்தலும் மாட்டாள் என்ற ஆண் பெண் இயல்புகளை மேலையடிகள் உணர்த்துவன. பாங்கனுக்குத் தலைவன் உற்றது உரைக்கும் துறைகளாலும், தோழிக்கும் அன்னைக்கும் ஊர்க்கும் தலைவி உற்றதைப் பலவாறு மறைக்கும் துறைகளாலும், அவரவர் இயல்புகளை நன்கு அறிந்து கொள்கின்றோம் எனினும் இவ்வியல்புகள் பொதுப்பட்டவை. சிறப்பியல்பு கொண்ட ஆடவரும் பெண்டிரும் இருப்பர். அதனை உரியவர் புரிந்துகொள்ளல் வேண்டும். தலைவன் தன் உள்ளுணர்வை வெளிப்படுத்த மாட்டாது விழுங்கினான், புழுங்கினான், வெறுமனே திரும்பினான் என்று நாணுடைமை காட்டும் அகப்பாடல்களும் உள.

*காலை வந்து மாலைப் பொழுதின்*
*நல்லகம் நயந்துதான் உயங்கிச்*
*சொல்லவு மாகாது அஃகி யோனே* (குறுந். 346)

என்று ஒரு தலைவனது நாண் நிலையைப் பாடுவார் வாயில் இளங்கண்ணனார். குவளை மாலை தருகின்றான், கிளி ஓட்டி உதவி செய்கின்றான், காலையில் வந்து மாலை வரை இருந்து திரும்புகின்றான், ஒன்றும் தன் வாய்விட்டுச் சொல்கின்றான் அல்லன் என்று, தலைவனது சொல்லாக் குறிப்பைத் தலைவிக்கு அறிவிக்கின்றாள் தோழி. பொதுவியல்புக்கு வேறாகக் காமத்தை வெளிப்பட மொழியும் நன்மாந்தர்களும் உளர். இன்ன மொழிவு சூழ்நிலையும் கேட்பாரையும் பொறுத்தது.

*கொன்னோர் அன்ன கொடுமையோ டின்றே*
*யாமம் கொளவரிற் கனைஇக் காமம்*
*கடலினும் உரைஇக் கரைபொழி யும்மே* (அகம்.128)

என்பது கபிலர் பாடிய ஒரு களவு மகளின் காமப் பேருரை. நடுயாமத்துத் தன் காமவுணர்வு கடலினும் பரந்து கரைகடந்து செல்லுகின்றது என்று தோழிக்குப் புலப்படுத்துகின்றாள் தலைவி. பாலுணர்வை வெளிப்படுத்தும் வழிகள் ஆள்தோறும் வேறுபடுதலின், காதலர்கள் ஒருவர் நிலையை மற்றவர் விளங்கி இன்புறுதல் முறையாகும்.

### அகத்திணைத் தலைமை

காதலன் காதலி இருவரும் தலைவன் தலைவி என்று பெயர் பெற்றாலும், அகத்தலைமை பெண்ணுக்கே உரியது.

புறத்தலைமையுடைய ஆடவன் இல்லத் தலைமையையும் உடன்கொள்வது ஒத்துவராது. மகவைப் பொறுக்கும் பெண்ணினத்துக்கே குடும்பத்தைச் சுமக்கும் பொறுப்பு உரியதும் எளியதும் நல்லதும் ஆம் ஆதலின் தலைவன் தோழி செவிலி அன்னை முதலான அகமாந்தர்கள் எல்லாரும் தலைமை நோக்கி இயங்குபவர்கள். பகற்குறி, இரவுக்குறி, வரைவு கடாவுதல், அறத்தோடு நிற்றல் ஆகிய களவுத் துறைகள் பலவும், வாயில் நேர்தல், வாயில் மறுத்தல், செலவழுங்குவித்தல், பிரிவுணர்த்தல் ஆகிய கற்புத்துறைகள் பலவும் தோழி கூற்றாக வருதலின், தலைமகள் தோழி வழிப்பட்டவள் என்று எண்ணவேண்டா. தோழி மகளின் நண்பியும் வாயிலும் ஆவாள்; அத்துணையல்லது அவளுக்கு மேல்நிலையில் நின்று யாதும் செய்யாள். அவள் மனப்போக்கெல்லாம் நாளும் பயின்று அறிபவளாதலின், உடன்படுவனவே செய்வாள். தலைவி உயிரோரன்ன கேண்மையளாயினும், அவளது களவுச் செய்கையைத் தோழி நேர்படக் கேளாள்; அவளது நாண் மிகுதிக்கும் அவள் காதலனது பெருமைக்கும் குற்றப்படாது அறிந்து கொள்ளவே முயல்வாள். தலைவன் வந்து குறையுற்றக்கால் அவன் குறையை ஏற்றுக்கொள் என்று தலைவிக்கு வெளிப்படச் சொல்லாது, குறிப்பிற் புலம்படும்படியே உணர்த்துவாள். தலைவியைப் பெரிதும் மதித்து அவள் சிறிதும் சினவாது ஒழுகுபவள் தோழி. தலைவனைத் தோழி இயற்பழிக்கும் போது, தலைவி இயற்பட மொழிந்து மறுப்பதைக் காண்கின்றோம்.

*அருவி வேங்கைப் பெருமலை நாடற்கு*
*யானெவன் செய்கோ என்றி; யானது*
*நகையென உணரே னாயின்*
*என்னா குவைகொல் நன்னுதல் நீயே* (குறுந்.96)

தலைவி தோழியைச் சினந்த அரும்பாடல் இது. தலைவன் வரைவு நினைப்பின்றி வந்து களவொழுகிக் கொண்டிருந்தான். தோழியின் வரைவுக் கருத்தை அவன் மதிக்கவில்லை. அதனால் வெறுப்புற்ற தோழி 'நான் என் செய்வது' என்று தலைவன் மேல் கசப்புற்றாள். தலைவிக்குச் சினம் அரும்பிற்று. 'நீ சொல்வதை விளையாட்டு மொழி என்று கருதிக் கொள்கின்றேன். வேறு விதமாகக் கருதினால் உன் நிலை என்னாம்?' என்று சொல்லி நிறுத்திக் கொண்டனள். இனி அறத்தோடு நிற்க வேண்டியதுதான் என்று தலைவி சுட்டினாலல்லது, நிற்கும் உரிமை தோழிக்கும் இல்லை என்பது தொல்காப்பிய விதி.

*இருவேம் ஆய்ந்த மன்றல் இதுவென*
*நாமறி வுறாலிற் பழியும் உண்டோ?*

என்று தலைவி மொழிந்த பின்னரே, தோழி அறத்தொடு நிற்றலைக் குறிஞ்சிப்பாட்டிற் கற்கின்றோம். ஆதலின் தோழி தலைவியின் நட்புத் தூதுவளேயன்றி அகத்திணைக்கண் தலைமையுடையவள் ஆகாள். கருணாகரத் தொண்டைமான் படைத் தலைமை தாங்கிப் போர்க்களம் புக்குக் கலிங்கத்தை வென்றாலும் வென்று பெற்ற திறைப் பொருளை வைத்து வணங்குமிடம் குலோத்துங்க சோழன் அடியன்றோ?

**பெண்ணிலக்கியம்**

அகத்திணை ஓர் பெண்ணிலக்கியம். ஆண்டுவரும் மாந்தர்களுட் பலர் பெண்பாலரே. பாங்கன் ஒரு துறையளவில் வந்து போய் விடுகின்றான். பாணன் சிலபொழுது வருகின்றான். தேர்ப்பாகன் கூற்றுக்குப் பெரிய இடமில்லை. தலைவனது தந்தை உடன்பிறந்தார் பற்றி ஒன்றும் சொல்லலாகாது. தலைவியது தந்தையும் அண்ணன்மாரும் கூற்றுக்கு உரியவரல்லர். கற்பியலில் வரும் மழலைமகன் இளந்தூதுவனேயன்றி உரையாடான். தோழியும் செவிலியும் அன்னையும் பரத்தையும் அகவிலக்கியத்தில் கொள்ளும் வாய்ப்பு மிகப் பெரிது. தலைவியே அகப்பாட்டிற்குத் தலைமையள் ஆதலின் பெண்ணாட்கள் பலர் இடம் பெறுப. செவிலியும் அன்னையும் தலைவியின் நல்வாழ்விற்காக வாழ்பவர்கள்; அவள் உடன்போகின் உயிர் புறம்போயது போல அவலக் கடலில் ஆழ்பவர்கள். தலைவனது பெருந் தொடர்பால் பரத்தை தருக்கிச் செருக்குற்றாலும், அவனுக்குத் தலைவி தானல்லள், அவனை இடித்துரைக்க வல்ல மனையாள் ஒருத்தி உண்டு என்பதனை நன்கு அறிந்தவள்.

*எம்மிற் பெருமொழி கூறித் தம்மிற்*
*கையும் காலும் தூக்கத் தூக்கும்*
*ஆடிப் பாவை போல*
*மேவன செய்யும்தன் புதல்வன் தாய்க்கே* (குறுந்.8)

தலைவனது வழி அறாது மகப்பெற்றுக் காக்கும் குடியுரிமை தலைவிக்கு உண்டாதலின், அவன் அவளுக்கு அடங்கி நடக்கின்றான் என்பது பரத்தையின் குறிப்பு.

தலைவியே தலைமையள் என்பதால், தலைவன் தலைமை இழந்தவன் என்பது கருத்தன்று. ஒரு குடும்பத்தின் அகத்துறை புறத்துறை என்னும் வாழ்க்கைத்துறை இரண்டனுள் உலகப் புறத்துறையில் அவன் தலைமை பெறுகின்றான். அவனது ஆற்றலும் நாட்டமும் அத்துறையின் கண் இயங்குகின்றன. அவனது பயிற்சியெல்லாம் புறமாய் விளங்குகின்றன. ஆதலின் அவன் அகத்துறைக்கண் வேண்டும் பயில்வும் நினைவும் இலனாகின்றான். அகத்துறை என்பது காதற்றுறை. தலைவன் பெருவேட்கையனாக இருப்பினும், அவ்வேட்கை அவனுள்ளத்து எப்போதும் நிலையாக ஓடிக்கொண்டிராது. தலைவியோடு உடனுறையும் காலத்துள் காமம் கனிவான்; எண்ணிய வினையை முடித்த பின்றைக் காமம் ஊறுவான்; நினைத்த இன்பம் பெறகில்லாது இடையூறு படுங்கால் ஆண்மை தோன்றக் காமம் கூர்வான். ''பாணியும் உடைத்து அது காணுநர்ப் பெறினே'' (குறுந்.136), உரியாரைக் காணின் காமம் வெளிப்படும் என்றும் தலைவனே கூறுதல் காண்க. தலைவி என்றும் காமவுள்ளத்தி. அவள் காமம் நீறு பூவா நெருப்பு. ஆர்ந்த புணர்ச்சிக்குப்பின்னும் அவள் வேட்கை அளவிற் குறையாது.

*குவியிணர்த் தோன்றி ஒண்பூ அன்ன*
*தொகுசெந் நெற்றிக் கணங்கொள் சேவல்*
*நள்ளிருள் யாமத்து இல்லெலி பார்க்கும்*
*பிள்ளை வெருகிற்கு அல்கிரை யாகிக்*
*கடுநவைப் படீஇயரோ நீயே; நெடுநீர்*
*யாணர் ஊரன் தன்னொடு வதிந்த*
*ஏம இன்துயில் எடுப்பி யோயே* (குறுந்.107)

கூடியிருக்கும் ஒரு தலைவியின் சாபப் பாட்டு இது. நெடுநாட்பிரிவுக்குப்பின் வந்த கணவனோடு உடனுறைந்து இரவெல்லாம் இன்புற்றுக் காலம் தோன்றாது தன்னை மறந்து கிடக்கையில், பொழுது புலர்ந்தது என்பதனைக் கோழி கூவிக் காட்டியது. கோழி கூவாவிட்டால் பொழுது புலராது என்பது காம நங்கையின் கருத்துப் போலும்! அக் கோழி இரவில் இரைதேடும் வெருகுப் பூனைக்கு உணவாகட்டும் என்று பாயற்பள்ளியில் அமர்ந்து கொண்டே சபிக்கலானாள். ஆதலின் பெண்ணின் காமவெப்பம் நல்லுடலின் வெப்பம் போலக் குறையாது என்று

அறியலாம். தலைவியைத் தலைவனுந்தானே பிரிகின்றான்? அவனுக்கு ஆற்றாமையுண்டோ? அவனை ஆற்றுவார் உண்டோ? அவனுக்குக் காமம் மிக்க கழிபடர் கிளவி உண்டோ? அவனுக்குப் புலம்பு உண்டோ? இவ்வெல்லாம் தலைவிக்கே உரியவாகக் கற்கின்றோம். புணர்வினும் பிரிவினும் காமம் அறாத நெஞ்சு மகளிர் நெஞ்சு ஆதலின், காமத்திணையாம் அகத்திணைத் தலைமைக்குச் சான்றவள் தலைவியே என்பது தெளிவு.

**கற்பிலக்கியம்**

அகத்திணை ஓர் கற்பிலக்கியம். சிற்றிளங்குமரியின் திண்ணிய காதல் நெஞ்சத்திற்குமுன் குடும்பமும் ஊரும் உலகமும் எல்லாம் முடிவில் வழிபட்டு இயைந்து ஒழுகுவதை அகவிலக்கியத்திற் காண்கின்றோம். அறியாமையால் வழிபட்டு ஒழுகாதபோது, கற்பு பெற்ற குடும்பத்தையும் பிறந்த ஊரையும் துறந்து உடன் போகின்றது; ''ஏனை உலகத்தும் இயைவதால் நமக்கு'' (குறிஞ்சிப்.24) என உலகத்துறப்பே துணிகின்றது.

*வேலன் வேண்ட வெறிமனை வந்தோய்*
*கடவு ளாயினும் ஆகுக*
*மடவை மன்ற வாழியே முருகே* (நற்.34)

வெறியாட்டின்கண் வேலன் மேல் ஏறி வந்த முருகக்கடவுளை நல்ல மடவன் என்று இகழ்கின்றாள் நங்கை. பெண்கற்பு கடவுட் கற்பாம் (அகம்.184) என்பது அகத்தமிழ்.

கற்பின் சிறப்பு காதற்சிறப்பாக ஒளிரும். அச்சிறப்பு குடிக்கும் சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் ஒழுங்கான வாழ்க்கை உண்டாக்கும். அகமாவது வீடு; புறமாவது அவ்வீட்டில் வெளியாதலின், வீட்டுத் தலைமையுடை பெண்ணே உலகம் தாங்குகின்றாள். உலகத்தை வளர்க்கும் ஆற்றல் பெண்ணினத்துக்குக் கற்புத்திண்மையால் பெருகுகின்றது. அத்திண்மைக்குக் கலக்கம் வரும்போது, காக்கவல்ல புத்தாண்மை எங்கிருந்தோ அவட்குத் தோன்றுகின்றது. பிறர் தன் கற்புக்கு இடையூறு செய்வரேல், சினங்கொண்டு மறத்தி ஆவாள். உயிரைப் பொருட்படுத்தாள். கற்புடைப் பெண்டிர்க்குப் புறப்பகை அடிக்கடி வருவதில்லை. அன்புடைய அகத் தலைவன் தன் பரத்தமையொழுக்கத்தால் பகையாக நடக்கின்றான். இவனை என் செய்வது? ஆண்டுச் சினங்கொண்டு மறத்தியாகாது, நிகரற்ற பொறுமை கொண்டு அறத்தியாய்க் காதலியாய் அவன் இன்பத்துக்கு இசையும் ஒருத்தியாகின்றாள்.

*கடைஇய நின்மார்பு தோயலம் என்னும்*
*இடையும் நிறையும் எளிதோநிற் காணின்*
*கடவுபு கைத்தாங்கா நெஞ்சென்னும் தம்மோடு*
*உடன்வாழ் பகையுடை யார்க்கு* (கலி.77)

இங்ஙனம் கணவனைக் காணுங்கால் கற்பு இரங்குகின்றது, பணிகின்றது, பண்படுகின்றது. கற்பிலாத கணவனைக் கண்டு வருந்துவது கற்புள்ளம்; அவனை எள்ளி இகழ்ந்து பரத்தமையை வளர்க்காது ஆரத்தழுவி இன்புறுவது கற்புள்ளம். இவ்வுள்ளம் உடைய பெண்ணே அகத்தலைமைக்கு ஏற்றவள். இல்லக்கிழத்தியின் பல்வகைப் பண்புகளை ஒருங்குகாட்டும் தொல்காப்பியர் எல்லாப் பெண்ணியலுக்கும் கற்பே தலைமைப்பண்பு என்பதனை முதலில் வைத்து எண்ணுவர்.

*கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமு*
*மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்*
*விருந்துபுறந் தருதலும் சுற்றம் ஓம்பலும்*
*பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்* (தொல்.1097)

**பாலியற் கல்வி**

அகத்திணை ஓர் பாலிலக்கியம், பெயரில்லாதார் வாழ்க்கையிலிருந்து காம நுணுக்கங்களைக் கற்றுக் கொள்கின்றோம். காமம் பற்றிய ஆணுடல் பெண்ணுடலின் கூறுகளையும், இயற்கை செயற்கை திரிபு ஆகிய மனக்கூறுகளையும் கரவின்றிப் பட்டாங்குச் சொல்வது பாலிலக்கண நூல். அந்நூல் வாழ்வைத் தொடாது, அறிவைத் தொடாது. அதனைக் கற்பவர் அறிவு நிலைபெறுவரன்றிக் காதலுக்கு இன்றியமையாத உணர்ச்சி நிலையைப் பெறார்; சமுதாயத்தோடு இசைந்த புணர்ச்சி நிலையை எண்ணார். அகத்திணை வாழ்க்கையிலக்கியம் ஆதலால், உலக நடைமுறைக்கு ஒப்பதாயும் பெயரில்லாதாரின் காதலியல்களைப் புலப்படுத்துவதால், கற்பவர்க்குத் தமது என்ற உணர்ச்சியை ஊட்டுவதாயும் அமைந்துள்ளது. உடல் நலத்திற்கென உடற்பயிற்சி இருவர் செய்கின்றனர் என வைத்துக்கொள்வோம். ஒருவன் பயிற்சிப் படங்களைப் பார்த்துப் பயில்கின்றான். மற்றொருவன் தன்முன் நின்று பயிற்சி செய்யும் பயில்வானைப் பார்த்துப் பயில்கின்றான். இவ்விரு நிலைக்கும் பெரு வேறுபாடு இல்லையா? பின்னது சிறந்தது, முறையானது, கெடுதலற்றது என்பதைச் சொல்லவும் வேண்டுமா? பாலிலக்கண நூல் கற்றுக் காதலுலகிற் புகுவான் இன்ப மரபு அறியாதவனாய், சமையல் நூல் கற்றுச் சமைக்கப் புகுந்தாளைப் போல இடர்பட்டுக் காமம் இழப்பான், பசி நீங்கான். அகத்திணை போன்ற பாலிலக்கிய நூல் கற்பவர் கற்கும்போதே காதற் பயிற்சி கைவரப் பெறுவர்; அன்னை அருகிருந்து மகள் அடுப்புத் தொழில் பழகிக்கொள்வது போல, அன்புக்கேடும் ஆரவாரமும் இன்றிக் காதலுலகில் இனிது இயங்குபவர் ஆதலின், பருவம் உற்ற ஆண் பெண் அனைவர்க்கும் அகத்திணைக் கல்வி இன்றியமையாதது. அக்கல்வி காமப் பருவத் தொடக்கத்தே கற்கத் தொடங்கவேண்டியது.

அகக்கல்வி கற்கும் நல்லிளைஞர் இளைஞியர் இன்றியமையாத உள்ளப் பண்பாவது கற்பு என்றும், இன்றியமையாத உடல் வினையாவது காமம் என்றும் தெளிவாக விளங்கிக் கொள்வர், ஒருவர் காமத்தை ஏனையர் மதித்து ஒழுகுவர், காமநிறைவு மனநிறைவாம் என்று இன்பச் செய்கையில் மீக்கொள்வர், ஞாலத்தைக் காதலுக்குப் பயன்கொண்டு தம் காதலால் ஞாலத்தை வாழ்விப்பர்.

அகம் கற்ற இளைஞன் தன் இன்பமே பெரிதென எண்ணமாட்டான். தன் கயமலர்க் கண்ணியை இன்புறுத்திப் பெறும் இன்பத்தையே காமம் என்று எண்ணி, அதற்கேற்றபடி காதற் பள்ளியில் நடந்துகொள்வான். மனைவியின் ஊடலையும் ஊடற் காரணங்களையும், ஊடல் நீட்சிகளையும், ஊடல் சொற்களையும் இன்ப இகலாகக் கருதாது, இன்ப வாயிலாகக் கருதுவான், தன் புகழ்ப் பெருமையையும், அறிவுப் பெருமையையும், செல்வப் பெருமையையும், பதவிப் பெருமையையும், பரிசுப் பெருமையையும் எண்ணிச் செம்மாக்காது, மெல்லியலாளின் காமப்பெருமையையும் ஏற்றுக் கொண்டு இரங்கி மொழிவான்.

அகம் கற்ற இளையாள் காமப்பெருக்கம் கருதி ஊடுவாளேயன்றி, குற்றம் உடைய தலைவனாயினும், அவனை இடித்துரைப்பதற்கு, அதுதான் காலம் என்று பள்ளிக்கலவியில் ஊடற் புரையோடாள். இன்பக்கொடை

அவளது நோக்கம் ஆவதன்றிச் சிறுமைசுட்டி அக்கொடை செய்தல் அவள் கற்புக்குச் சிறப்பளிக்காது; பெருந்தோள் ஆடவனது பணியையும் வேண்டுதலையும் கிடப்பையும் கண்டு காமுகன் என்றோ, சிறியவன் என்றோ கருதித் தருக்காது, கற்பின் வணக்கம் என்று பொருள்புரிந்து இன்ப அருள் செய்வாள்.

அகம் கற்ற குடும்பத்தார் தம் ஆண் பெண்மக்களின் பருவவோட்டங்களை எளிதிற் புரிந்துகொள்வர். பருவக்கோளாறு என்று கருதி மயங்கி, அறிவற்ற அன்பினால் காதற்கோளாறும் கற்புக்கோளாறும் செய்யார்.

அகக்கல்வி பரவிய இனத்தார் காதல் வாழ்வுக்கு மாறான சமுதாயப் போக்குகளை வேரூன்றவிடார். கற்பிற்கு முரணான பரத்தமையை ஆடவர்க்காக வளரவிடார். வளர்ந்த பரத்தமையைக் குலவொழுக்கமென வாழவிடார். பெண்டிரெல்லாம் கற்புப் பெண்டிராகவே வாழ வழிவகுப்பர்.

துறவிக்கும் அகத்திணைக் கல்வி வேண்டற்பாலது. துறவாத இல்லற மக்களுக்குத் தொண்டு செய்யுங்கால், அம்மக்களின் காதற் காமநிலை பற்றிய அறிவு வேண்டாங் கொல்?

அகத்திணைக்கல்வி தொல்காப்பியத்தாலும் சங்க விலக்கியத்தாலும் திருக்குறளாலும் அன்றி வேறு எவ்வகையானும் பெறுதற்கில்லை. தமிழ்ப்பிறவி எடுத்த நாம் இம்முத்திற நூல்களையும் கற்கவேண்டும். கற்பதோடன்றி நம்போல் ஞாலமும் உய்யும்படி கற்பிக்கவேண்டும். இவை செய்யாவிடின் இப்பிறவியை ஏன் சுமந்தோம்? அகப்பொருள் யாத்த தொல்காப்பியர் ஒல்காப் புலமை வாய்ந்தவர், பல்புகழ் கொண்ட பண்பினர் என்று அறிவோம். சங்கச் செய்யுட்கள் பாடியோர் எத்தகையர்? வாய்மை விளங்கும் கபிலரும், உலகறம் மொழிந்த கணியன் பூங்குன்றனாரும், அச்சமில்லாத நக்கீரரும், அருநெல்லி பெற்ற ஔவையாரும், நெடுஞ்செழியன் புகழ்ந்த மருதனாரும், கரிகாலன் மதித்த கண்ணனாரும், கரிகாலன் மகள் ஆதிமந்தியாரும், ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியரும், பிசிராந்தையாரின் நண்பர் கோப்பெருஞ்சோழரும் முதலான எண்ணிலாச் சான்றோர் என்பது அறிவோம். காமத்துப்பால் அருளியவரோ தமிழ்த்தாய் உலக நலத்திற்கெனப் பெற்ற வள்ளுவப் பெருமகன். இத்தமிழ்ச் சான்றோர் எல்லாம் அகத்திணைப் பாடல்கள் யாத்தார்கள் எனின், அக்கல்வி ஞால மானிடர்க்கு இன்றியமையாத தலைசால் தூய கல்வி என்பதுவே முடிவு.

சங்கவிலக்கியம் 1862 அகப்பாடல் உடைய காதலிலக்கியம். ஒவ்வொரு பாடலிலும் ஆண் பெண் உள்ளங்கள் உள்ளன. இப்பாடல்களைக் கற்பவர் 3724 காதல் உள்ளங்களைப் பற்றிய அறிவு பெறுவர், மேலும் காதற்றலைமையுடைய இவ்விருவரைப் பற்றிப் பாங்கன் நினைத்தனவும், ஊரார் கண்டார் நினைத்தனவும் ஆகிய பல்வேறு உள்ளங்களின் அறிவினையும் பெறுவர். திருக்குறட் காமத்துப்பாலின் 250 குறள்களைக் கற்குநர் 500 காம நெஞ்சங்களைக் குறித்த கல்வி பெறுவர். பொருட்பாலால் புறவாழ்க்கையிலும் காமத்துப்பாலால் அகவாழ்க்கையிலும் செம்மை எய்துவர். அகத்திணைக் கல்வித் தலைவராகிய தொல்காப்பியரது தமிழ் முதல் நூலைக் கற்கும் அன்புடைத் தமிழ் நங்கையரும் நம்பியரும் இருபாலாரின் நுண்ணியல்களை யெல்லாம் பண்போடும் பாங்கோடும் தெளிந்து வாழ்ந்து நன்றியர்களாகப் பொலிவார்காண்.

**தொல்காப்பியம்**

*எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது*
*தானமர்ந்து வரூஉம் மேவற் றாகும்.*

மாணிக்கம், வ.சுப. 2002. **தமிழ்க் காதல்**. சிதம்பரம்: மெய்யப்பன் பதிப்பகம். பக்.368-381

## செம்மொழித் தமிழ்க் காட்சிக் குறும்படங்கள்










**செம்மொழித் தமிழ்க்**
**காட்சிக் குறும்படங்கள்**
**9 தொகுதிகள்**
**விலை உரூ.450/-**

# பயிலரங்குகள்

பயிலரங்கம் 1

## தொல்காப்பிய அகவியற் கோட்பாடுகளும் பிற்கால அகவியல் இலக்கணங்களும்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத் தமிழ்த்துறையும் இணைந்து 'தொல்காப்பிய அகவியற் கோட்பாடுகளும் பிற்கால அகவியல் இலக்கணங்களும்' என்னும் பொருண்மையில் 04.01.2012 முதல் 13.01.2012 வரை பத்து நாள் பயிலரங்கினை நடத்தின. அழகப்பா பல்கலைக்கழகத் தமிழ்த்துறை இணைப் பேராசிரியர் முனைவர் சே. செந்தமிழ்ப்பாவை கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

04.01.2012ஆம் நாள் முற்பகல் 10 மணியளவில் நடந்த தொடக்க விழாவில் தமிழ்த் துறைத்தலைவர் முனைவர் மு. பாண்டி வரவேற்புரையாற்றினார். அழகப்பா பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சேது சுடலைமுத்து தலைமையுரையாற்றினார். பேராசிரியர் ச.வே. சுப்பிரமணியன் தொடக்க விழாப் பேருரையாற்றினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனப் பொறுப்பு அலுவலர் பேராசிரியர் க. இராமசாமி வாழ்த்துரை வழங்கினார். பயிலரங்க ஒருங்கிணைப்பாளர் முனைவர் சே. செந்தமிழ்ப்பாவை நன்றிகூறினார்.

**பேராசிரியர் அ. அறிவுடைநம்பி**
**பேராசிரியர் வ. குருநாதன்**
**பேராசிரியர் கா. காளிதாசன்**
**பேராசிரியர் மு. மணிவேல்**
**பேராசிரியர் அ. இராசாராம்**
**பேராசிரியர் ச. திருஞானசம்பந்தம்**
**பேராசிரியர் ம.சா. அறிவுடைநம்பி**
**பேராசிரியர் தெ. முருகசாமி**
**பேராசிரியர் தூ. சேதுபாண்டியன்**
**பேராசிரியர் இரா. தாமோதரன்**
**பேராசிரியர் பழ. முத்துவீரப்பன்**
**பேராசிரியர் நா. சுப்பிரமணியன்**
**பேராசிரியர் சி. சித்ரா**
**பேராசிரியர் கே. கண்ணாத்தாள்**
**பேராசிரியர் தி. பூங்குன்றன்**
**பேராசிரியர் சா. இரமேசு**
**பேராசிரியர் பூ. ரோசுலெட்**
**பேராசிரியர் அ. ஆலிஸ்**
**பேராசிரியர் மு. பாண்டி**
**பேராசிரியர் க. சுந்தரபாண்டியன்**
**பேராசிரியர் சே. செந்தமிழ்ப்பாவை**
**பேராசிரியர் துரை. இரவிக்குமார்**

ஆகிய அறிஞர்கள் இப் பயிலரங்கில் தங்கள் ஆய்வுரைகளை வழங்கிச் சிறப்பித்தார்கள்.

13.01.2012 அன்று பிற்பகல் நிறைவு விழா நடைபெற்றது. பயிலரங்க நிறைவு விழாவில் அழகப்பா பல்கலைக்கழகத் தேர்வாணையர் பேராசிரியர் வெ. மாணிக்கவாசகம் சிறப்புரையாற்றினார். பயிற்சியாளர்களுக்குச் சான்றிதழ்களும் வழங்கிச் சிறப்பித்தார். ஆய்வாளர்கள் ம. மார்ஷல், கி. சுபதாரணி, சு. பிரபாகரன் ஆகியோர் பயிலரங்கப் பயனுரை வழங்கினர். பேராசிரியர் சு. இராசாராம் நன்றிகூறினார்.

★

பயிலரங்கம் 2

## தொல்காப்பிய இலக்கிய, இலக்கணக் கோட்பாடுகள்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் மதுரை யாதவர் கல்லூரித் தமிழ் உயராய்வு மையமும் இணைந்து 'தொல்காப்பிய இலக்கிய, இலக்கணக் கோட்பாடுகள்' என்னும் தலைப்பில் 20.01.2012 முதல் 29.01.2012 வரை பத்து நாள் பயிலரங்கை நடத்தின. யாதவர் கல்லூரித் தமிழ் உயராய்வு மையத்தின் தலைவர் முனைவர் வீ. மோகன், அக்கல்லூரியின் இணைப் பேராசிரியர் முனைவர் வீ. கோபால் ஆகியோர் ஒருங்கிணைப்பாளர்களாகச் செயல்பட்டார்கள்.

20.01.2012ஆம் நாள் முற்பகல் நடந்த தொடக்க விழாவில் முனைவர் வீ. மோகன் வரவேற்புரையாற்றினார். யாதவர் கல்லூரித் தமிழ் உயராய்வு மையத்தின் முதல்வர் பேராசிரியர் கி. கண்ணன் தலைமைதாங்க, கல்லூரிச் செயலர் மற்றும் தாளாளர் திரு க.ப. நவநீதகிருஷ்ணன் வாழ்த்துரை வழங்கினார். மதுரை காமராசர் பல்கலைக்கழகப் பதிவாளர் (பொறுப்பு) முனைவர் மு. ராஜியக்கொடி தொடக்கவிழாச் சிறப்புரையாற்றினார்.

**பேராசிரியர் ச.வே. சுப்பிரமணியன்**
**பேராசிரியர் பெ. மாதையன்**
**முனைவர் யாழ். சந்திரா**
**முனைவர் சோ. முத்தமிழ்ச்செல்வன்**
**பேராசிரியர் சு. இராசாராம்**
**முனைவர் ச. திருஞானசம்பந்தம்**
**பேராசிரியர் ச. குருசாமி**
**முனைவர் சு. அழகேசன்**
**முனைவர் நா. கருணாமூர்த்தி**
**பேராசிரியர் தூ. சேதுபாண்டியன்**
**பேராசிரியர் மு. மணிவேல்**
**முனைவர் இரா. சீனிவாசன்**
**முனைவர் அ. ஆலிஸ்**
**முனைவர் இரா. சம்பத்**
**முனைவர் சிவ. மாதவன்**
**பேராசிரியர் ம. திருமலை**
**பேராசிரியர் அ. சீனிவாசன்**
**முனைவர் ஏ. ஆதித்தன்**
**பேராசிரியர் ப. மருதநாயகம்**
**முனைவர் இ.கி. இராமசாமி**

ஆகிய அறிஞர்கள் தங்கள் ஆய்வுரைகளை வழங்கிச் சிறப்பித்தனர். இப்பயிலரங்கில் நாற்பது ஆய்வு மாணவர்கள் பங்கேற்றுப் பயனடைந்தனர்.

26.01.2012 அன்று பிற்பகல் 4 மணியளவில் நிறைவு விழா நடைபெற்றது. யாதவர் கல்லூரித் தமிழ் உயராய்வு மையத்தின் இணைப் பேராசிரியர் முனைவர் க. முத்துக்கிருஷ்ணன் அனைவரையும் வரவேற்றார். கல்லூரி முதல்வர் பேராசிரியர் கி. கண்ணன் தலைமையேற்றார். கல்லூரிச் செயலர் மற்றும் தாளாளர் க.ப. நவநீதகிருஷ்ணன் வாழ்த்துரை வழங்கினார். மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழியற்புல மேனாள் தலைவர் மூதறிஞர் தமிழண்ணல் சிறப்புரையாற்றினார். அவர் தமது உரையில் தொல்காப்பிய நூல்கட்டமைப்புக் கோட்பாடு,

தொ

அழகியல் கோட்பாடு, அறநெறிக் கோட்பாடு குறித்து விளக்கினார். முனைவர் இரா. பேபிகிருஷ்ணம்மாள் நன்றியுரை நல்கினார்.

★

பயிலரங்கம் 3

## தொல்காப்பியம்: மரபியல் பார்வையும் மொழியியல் நோக்கும்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் சென்னைப் புதுக் கல்லூரித் தமிழ்த் துறையும் இணைந்து 'தொல்காப்பியம்: மரபியல் பார்வையும் மொழியியல் நோக்கும்' எனும் பொருண்மையில் 23.01.2012 முதல் 02.02.2012 வரை பத்து நாள் பயிலரங்கை நடத்தின.

இதன் தொடக்க விழா 23.01.2012ஆம் நாள் முற்பகல் 10 மணியளவில் நடந்தது. இவ்விழாவில் புதுக்கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் ஹ.மு. நத்தர்சா வரவேற்புரையாற்றினார். புதுக்கல்லூரி முதல்வர் முனைவர் க. அல்தாஃப் தலைமையுரையாற்றினார். பயிலரங்க ஒருங்கிணைப்பாளரான முனைவர் மு.இ. அகமது மரைக்காயர் நோக்கவுரை வழங்கினார். புதுக் கல்லூரியின் மதிப்புறு செயலர் மற்றும் தாளாளர் திரு ஏ. முகம்மது அஷ்ரஃப் வாழ்த்துரைவழங்கினார். சென்னைப் பல்கலைக்கழக முன்னைத் துணைவேந்தர் முனைவர் பொன். கோதண்டராமன் கருத்தரங்கின் மையப்பொருள் குறித்து உரையாற்றினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனப் பதிவாளர் முனைவர் மு. முத்துவேலு தொடக்கவுரையாற்றினார். பேராசிரியர் மு. கலீல் அகமது நன்றி கூறத் தொடக்க விழா நிறைவடைந்தது.

இக் கருத்தரங்கில் பின்வரும் அறிஞர்கள் தங்கள் ஆய்வுரைகளை வழங்கினர்.

**முனைவர் மு.இ. அகமது மரைக்காயர்**
**முனைவர் கு. அரசேந்திரன்**
**பேராசிரியர் அ. அறிவுநம்பி**
**பேராசிரியர் சு. இராசாராம்**
**முனைவர் பெ. இலக்குமி நாராயணன்**
**பேராசிரியர் சோ. ந. கந்தசாமி**
**பேராசிரியர் ச. குருசாமி**
**பேராசிரியர் இரா. கோதண்டராமன்**
**முனைவர் மா. சற்குணம்**
**முனைவர் மு. சாயபு மரைக்காயர்**
**பேராசிரியர் அ. சீனிவாசன்**
**முனைவர் இரா. சீனிவாசன்**
**பேராசிரியர் ச. வே. சுப்பிரமணியன்**
**முனைவர் க. சேக்மீரான்**
**பேராசிரியர் ஞானசுந்தரம்**
**பேராசிரியர் ந. தெய்வசுந்தரம்**
**முனைவர் சா. நசீமா பானு**
**முனைவர் ஹ. மு. நத்தர்சா**






**முனைவர் நித்திய கல்யாணி**
**முனைவர் ப. மகாலிங்கம்**
**முனைவர் ஆ. மணி**
**முனைவர் ய. மணிகண்டன்**
**பேராசிரியர் ப. மருதநாயகம்**
**பேராசிரியர் பெ. மாதையன்**
**முனைவர் மு. முகம்மது அலி**
**முனைவர் க. முருகையன்**
**முனைவர் சா. வளவன்**
**முனைவர் மு. ஹம்சா**
**பேராசிரியர் வ. ஜெயதேவன்**

02.02.2012 அன்று மாலை நடந்த நிறைவு விழாவில் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் ஹ.மு. நத்தர்சா வரவேற்புரையாற்றினார். கல்லூரி முதல்வர் முனைவர் க. அல்தாஃப் தலைமையுரையாற்றினார் கல்லூரியின் ஆட்சிக்குழுத் தலைவர் திருமிகு உ. கலீலுல்லாஹ் வாழ்த்துரை வழங்கினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன இயக்குநர் பேராசிரியர் இரா. ஞானமூர்த்தி சிறப்புரையாற்றினார். தமிழ்ப் பல்கலைக்கழக முன்னைத் துணைவேந்தரும் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் முதுநிலை ஆய்வறிஞருமான பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி நிறைவுரையாற்றினார். முனைவர் மு. இ. அகமது மரைக்காயர் நன்றிகூறினார்.

★

பயிலரங்கம் 4

## சங்ககால மெய்யியல் கோட்பாடுகள் ஒரு வரலாற்று நோக்கு

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் உலகத் தமிழ்மொழி மெய்யியல் பண்பாட்டு ஆய்வு நிறுவனமும் இணைந்து 'சங்ககால மெய்யியல் கோட்பாடுகள் - ஒரு வரலாற்று நோக்கு' என்னும் தலைப்பில் 30.01.2012 முதல் 08.02.2012 வரை பத்து நாள் பயிலரங்கைத் திருச்சியில் நடத்தின.

இதன் தொடக்க விழா 30.01.2012 அன்று நடைபெற்றது. இவ்விழாவில் பேராசிரியர் க. நெடுஞ்செழியன் அனைவரையும் வரவேற்றார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனப் பதிவாளர் முனைவர் மு. முத்துவேலு தலைமை தாங்கினார். அருள்திரு முனைவர் சூ. ஜான் பிரிட்டோ கருத்தரங்க நோக்கவுரை வழங்கினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன ஆய்வறிஞர் பேராசிரியர் ப. மருதநாயகம் வாழ்த்துரை வழங்கினார். தினமணி ஆசிரியர் திரு கே. வைத்தியநாதன் தொடக்கவுரை யாற்றினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் இணை ஆய்வறிஞர் மு. இராமகிருஷ்ணன் நன்றிகூறத் தொடக்க விழா நிறைவடைந்தது.

**பேராசிரியர் க. நெடுஞ்செழியன்**
**பேராசிரியர் ப. மருதநாயகம்**
**வேளாண் அறிஞர் ப. மருதமலைமுருகன்**
**முனைவர் இரா. காமராசு**
**முனைவர் மு. இராமகிருட்டிணன்**
**மருத்துவர் செந்தில்**
**அருள்திரு முனைவர் சூ. ஜான் பிரிட்டோ**
**முனைவர் அ. அந்தோனிகுருசு**
**முனைவர் இரா. சக்குபாய்**
**பொறிஞர் இராம கண்ணகி**
**பேராசிரியர் முத்துமோகன்**
**பேராசிரியர் தி. முருகரத்தனம்**
**பேராசிரியர் மு. இராமசாமி**
**மருத்துவர் முனைவர் ஆனந்தன்**
**மருத்துவர் கு. சிவராமன்**
**முனைவர் தி. சத்தியமூர்த்தி**
**முனைவர் கா. இராசன்**
**திரு ஆதிசங்கரன்**
**பொறிஞர் கோ. வெங்கடாசலம்**
**ஆய்வாளர் நா. ப. பூரணச்சந்திர ஜீவா**
**போராசிரியர் க. முத்துசாமி**
**அறிவர் பாமயன்**
**முனைவர் அர. வாசுதேவன்**
**முனைவர் சு. இராசவேலு**
**பேராசிரியர் கா. செல்லப்பன்**

ஆகிய அறிஞர்கள் இப் பயிலரங்கில் ஆய்வுரை வழங்கிச் சிறப்பித்தார்கள். இந்தப் பயிலரங்கில் ஐம்பது ஆய்வு மாணவர்கள் கலந்துகொண்டு பயனடைந்தனர்.

பயிலரங்க நிறைவு விழா 08.02.2012 அன்று நடைபெற்றது. இவ்விழாவில் முனைவர் அ. அந்தோணி குருசு வரவேற்புரையாற்றினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனப் பொறுப்பு அலுவலர் பேராசிரியர் க. இராமசாமி தலைமையுரையாற்றினார். அருள் முனைவர்களான ஆல்பர்ட் முத்துசாமி, செபாஸ்டின் ஆனந்து ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். முனைவர் கா. செல்லப்பன் கருத்தரங்க நிறைவுப் பேருரையாற்றினார். பயிலரங்க ஒருங்கிணைப்பாளர் முனைவர் க. நெடுஞ்செழியன் நன்றிநவின்றார்.

★

பயிலரங்கம் 5

## பழந்தமிழில் எழுத்தியல் மற்றும் சொல்லியற் கூறுகள்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் அண்ணாமலைப் பல்கலைக் கழக மொழியியல் உயராய்வு மையமும் இணைந்து ‘பழந்தமிழில் எழுத்தியல் மற்றும் சொல்லியற் கூறுகள்’ என்னும் தலைப்பில் 01.02.2012 முதல் 10.02.2012 வரை பத்து நாள் பயிலரங்கினை நடத்தின. முனைவர் வி. திருவள்ளுவன் இதன் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

**பேராசிரியர் எஸ். ஆரோக்கியநாதன்**
**பேராசிரியர் எச். சித்திரபுத்திரன்**
**பேராசிரியர் ந. தெய்வசுந்தரம்**
**பேராசிரியர் பூ.சி. இளங்கோவன்**
**பேராசிரியர் ம. கணேசன்**
**பேராசிரியர் இரா. கண்ணன்**
**பேராசிரியர் ஆ. கார்த்திகேயன்**
**பேராசிரியர் இரா. கோதண்டராமன்**
**பேராசிரியர் க. முருகையன்**
**பேராசிரியர் என். நடராஜப்பிள்ளை**
**பேராசிரியர் எஸ். நடனசபாபதி**
**பேராசிரியர் ப. பத்மநாபப்பிள்ளை**
**முனைவர் க. பசும்பொன்**
**பேராசிரியர் கி. அரங்கன்**
**முனைவர் க. இரவிசங்கர்**
**பேராசிரியர் வீ. ரேணுகாதேவி**
**பேராசிரியர் செ. சண்முகம்**
**பேராசிரியர் செ.வை. சண்முகம்**
**பேராசிரியர் கோ. சீனிவாச வர்மா**
**பேராசிரியர் அ. சீனிவாசன்**
**பேராசிரியர் எம். சுசீலா**
**பேராசிரியர் வி. திருவள்ளுவன்**

ஆகிய அறிஞர்கள் இப்பயிலரங்கில் தங்கள் ஆய்வுரைகளை வழங்கினர்.

★

பயிலரங்கம் 6

## சங்க இலக்கியம் வழி அறியப்பெறும் அரசியல், சமூக, பொருளியல் போக்குகளும் கடல் வணிகமும்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் காரைக்கால் ஔவையார் அரசு மகளிர் கல்லூரி வரலாற்றுத் துறையும் தமிழ்த்துறையும் இணைந்து ‘சங்க இலக்கியம் வழி அறியப்பெறும் அரசியல், சமூக, பொருளியல் போக்குகளும் கடல் வணிகமும்’ என்னும் பொருளில் 01.02.2012 முதல் 10.02.2012 வரை பத்து நாள் பயிலரங்கை நடத்தின.

பயிலரங்கத் தொடக்க விழா 01.02.2012 அன்று காலை 10 மணியளவில் தொடங்கியது. முனைவர் சிவ. மாதவன் அனைவரையும் வரவேற்றார். புதுச்சேரி அரசின் வேளாண்துறை அமைச்சர் மு. சந்திரகாசு பயிலரங்கைத் தொடங்கி வைத்தார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனப் பதிவாளர் முனைவர் மு. முத்துவேலு நோக்கவுரையாற்றினார். சட்ட மன்ற உறுப்பினர்கள் வி.எம்.சி. சிவக்குமார், ஏ.எம்.எச். நாஜிம், பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் எ.எஸ்.டி. அன்சாரி பாபு, உயர் மற்றும் தொழில்நுட்பக் கல்வி இயக்கக இயக்குநர் க. பன்னீர்செல்வம் ஆகியோர் வாழ்த்தினர். ஔவையார் அரசுக் கல்லூரி முதல்வர் முனைவர் தமிழரசி தமிழ்மணி தலைமையுரையாற்றினார். முனைவர் மா. மாணிக்கம் நன்றிகூறத் தொடக்க விழா நிறைவடைந்தது.

இப்பயிலரங்கில் பின்வரும் அறிஞர்கள் தங்கள் ஆய்வுரைகளை வழங்கினர்.

**முனைவர் மு. முத்துவேலு**
**முனைவர் ஆ. மணி**
**முனைவர் சிவ. மாதவன்**
**முனைவர் செ. சுசிலா**
**முனைவர் இரா. குப்புசாமி**
**முனைவர் சீ. பக்தவத்சல பாரதி**
**திரு ந. வெங்கடேசன்**
**பேராசிரியர் இரா. அறவேந்தன்**
**முனைவர் இரா. நடராஜன்**
**பேராசிரியர் அரங்க. இராமலிங்கம்**
**பேராசிரியர் ப. மருதநாயகம்**
**முனைவர் ச. திருஞானசம்பந்தம்**

பேராசிரியர் மா. உதயகுமார்
பேராசிரியர் க. பஞ்சாங்கம்
முனைவர் மா. மாணிக்கம்
முனைவர் க. சேகர்
பேராசிரியர் மு. சாயபு மரைக்காயர்
பேராசிரியர் சு. தில்லைவனம்
முனைவர் தா. ரூபிசந்திரா
முனைவர் வன்மீக வெங்கடாசலம்
முனைவர் கோ.ப. நல்லசிவம்
முனைவர் தெ. வெற்றிச்செல்வன்
முனைவர் கே. பழனிவேலு
முனைவர் வி. செல்வகுமார்
முனைவர் ச. பாபு
முனைவர் சு. தமிழ்வேலு
முனைவர் இரா. இலட்சாராமன்
முனைவர் ப. ஜோதிபாக்கியம்
முனைவர் இரா. நிர்மலா
பேராசிரியர் பழ. முத்துவீரப்பன்
முனைவர் இராம. இராமமூர்த்தி
பேராசிரியர் க. நெடுஞ்செழியன்

10.02.2012 அன்று நடைபெற்ற நிறைவு விழாவில் முனைவர் சிவ. மாதவன் அனைவரையும் வரவேற்க, ஔவையார் அரசு மகளிர் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் தா. ரூபிசந்திரா தலைமைதாங்கினார். அறிஞர் அண்ணா அரசுக் கலைக்கல்லூரி முதல்வர் முனைவர் சசி காந்த தாஸ், வரலாற்றுத் துறைத்தலைவர் இரா. பச்சைவல்லி, பெற்றோர் ஆசிரியர் சங்கத் துணைத்தலைவர் த. ஆறுமுகம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். தஞ்சாவூர்த் தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன முதுநிலை ஆய்வறிஞருமான பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி பயிலரங்க நிறைவுரையாற்றிப் பயிலரங்கில் பங்கேற்றவர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார். முனைவர் மா. மாணிக்கம் நன்றி நவின்றார்.

★

பயிலரங்கம் 7

## தொல்காப்பியமும் தொல்காப்பியத்திற்குப் பின்வந்த இலக்கண நூல்களும் - பன்முக நோக்கு

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் திருச்சிராப்பள்ளி ஜமால் முகம்மது கல்லூரியும் இணைந்து ‘தொல்காப்பியமும் தொல்காப்பியத்திற்குப் பின் வந்த இலக்கண நூல்களும் - பன்முக நோக்கு’ என்னும் தலைப்பில் 03.02.2012 முதல் 12.02.2012 வரை பத்து நாள் பயிலரங்கை நடத்தின.





பேராசிரியர் ச.வே. சுப்பிரமணியன்
முதுமுனைவர் இரா. இளங்குமரனார்
முனைவர் வி. நாகராசன்
முனைவர் இரா. சம்பத்
முனைவர் பெ. சுயம்பு
முனைவர் இரா. சபாபதி
முனைவர் ச. ஈஸ்வரன்
பேராசிரியர் தூ. சேதுபாண்டியன்
முனைவர் மா. சற்குணம்
பேராசிரியர் சோ. ந. கந்தசாமி
முனைவர் இந்திரா மனுவேல்
முனைவர் ஆ. கார்த்திகேயன்
பேராசிரியர் க. முருகையன்
முனைவர் பி. தமிழகன்
முனைவர் ச. திருஞானசம்பந்தம்
முனைவர் அ. சையத் ஜாகீர் ஹசன்
பேராசிரியர் கி. அரங்கன்
பேராசிரியர் சு. இராசாராம்

ஆகிய அறிஞர்கள் தங்கள் ஆய்வுரைகளை வழங்கிச் சிறப்பித்தனர்.

★

பயிலரங்கம் 8

## தொல்காப்பியச் சொல்லிலக்கணமும் தொடரிலக்கணமும்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் அரியலூர் அரசுக் கலைக் கல்லூரித் தமிழ்த் துறையும் இணைந்து ‘தொல்காப்பியச் சொல்லிலக்கணமும் தொடரிலக்கணமும்’ என்னும் தலைப்பில் 08.02.2012 முதல் 17.02.2012 வரை பத்து நாள் பயிலரங்கை நடத்தின.

பயிலரங்கத் தொடக்க விழா 08.02.2012 காலை 9.45 மணியளவில் நடந்தது. கல்லூரித் தமிழாய்வுத் துறைத்தலைவர் முனைவர் மா. திருவள்ளுவன் தலைமையேற்றார். தமிழ்த்துறையின் இணைப் பேராசிரியர் முனைவர் வீ. பொய்யாமணி அனைவரையும் வரவேற்றார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் பொறுப்பு அலுவலர் பேராசிரியர் க. இராமசாமி பயிலரங்கைத் தொடங்கி வைத்துக் கருத்துரை நிகழ்த்தினார். வரலாற்றுத் துறைத் தலைவர் முனைவர் இல. தியாகராஜன் வாழ்த்துரை வழங்கினார். உதவிப் பேராசிரியர் முனைவர் த. மரகதம் நன்றி கூறத் தொடக்க விழா நிறைவடைந்தது.

இப்பயிலரங்கில் பின்வரும் அறிஞர்கள் தங்கள் ஆய்வுரைகளை வழங்கினர்.

**பேராசிரியர் பாண்டியராஜா**
**முனைவர் அ.ம. சத்தியமூர்த்தி**
**முனைவர் து.சேகர்**
**பேராசிரியர் ந. தெய்வசுந்தரம்**
**முனைவர் ஆ. கார்த்திகேயன்**
**முனைவர் சா. சிற்றரசு**
**முனைவர் இரா. இளமுருகன்**
**பேராசிரியர் பெ. மாதையன்**
**முனைவர் க. இராதாகிருஷ்ணன்**
**முனைவர் சண்முக. செல்வகணபதி**
**முனைவர் அரங்க. சுப்பையா**
**முனைவர் மு. தமிழரசன்**
**முனைவர் இந்திரா மனுவேல்**
**முனைவர் மா. சற்குணம்**
**முனைவர் வீ. பொய்யாமணி**
**முனைவர் கா. கோ. வேங்கடராமன்**
**முனைவர் க. தமிழ்மாறன்**
**முனைவர் இல. தியாகராஜன்**
**பேராசிரியர் சு. இராசாராம்**
**முனைவர் சிவ. மாதவன்**
**பேராசிரியர் செ.வை. சண்முகம்**
**முனைவர் அ. காமாட்சி**
**முனைவர் ம. இளையராஜா**
**பேராசிரியர் கி. அரங்கன்**
**திரு கோ. உத்திராடம்**

இப்பயிலரங்கில் நாற்பது மாணவர்கள் பங்கேற்றுப் பயனடைந்தனர்.

இதன் நிறைவு விழா 17.02.2012 அன்று பிற்பகல் நடைபெற்றது. இணைப் பேராசிரியர் முனைவர் சா. சிற்றரசு வரவேற்புரை வழங்க, கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவர் முனைவர் மா. திருவள்ளுவன் தலைமைதாங்கினார். பயிலரங்க ஒருங்கிணைப்பாளர் ம. இளையராஜா பயிலரங்க அறிக்கை வாசித்தார். கல்லூரியின் முதல்வர் கே. சாந்தாள் வாழ்த்துரை வழங்கியதோடு, பயிலரங்கில் பங்கேற்ற ஆய்வு மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கிச் சிறப்பித்தார். உதவிப் பேராசிரியர் முனைவர் கோ. குணசேகர் நன்றிகூறினார்.

★

பயிலரங்கம் 9

## தொல்காப்பிய மொழிவிளக்க மரபுகளும் பிற தமிழ் இலக்கணங்களும்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நிதிநல்கையுடன் மதுரை காமராசர் பல்கலைக்கழக மொழியியல் துறையும் தமிழ்த் துறையும் இணைந்து ‘தொல்காப்பிய மொழிவிளக்க மரபுகளும் பிற தமிழ் இலக்கணங்களும்’ என்னும் பொருண்மையில் 10.02.2012 முதல் 19.02.2012 வரை பத்து நாள் பயிலரங்கை நடத்தின.

பயிலரங்கத் தொடக்க விழா 10.02.2012ஆம் நாள் 10 மணியளவில் நடந்தது. இவ்விழாவில் மதுரை காமராசர் பல்கலைக்கழகப் பதிவாளர் பேராசிரியர் மு. ராஜியக்கொடி தலைமையுரையாற்றினார். தமிழியற்புல முன்னைத் தலைவர் பேராசிரியர் தமிழண்ணல் பயிலரங்கினைத் தொடங்கி வைத்து விழாப் பேருரையாற்றினார். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் முன்னை இயக்குநர் பேராசிரியர் ச.வே. சுப்பிரமணியன் சிறப்புரையாற்றினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் பொறுப்பு அலுவலர் பேராசிரியர் க. இராமசாமி முதன்மையுரை யாற்றினார். மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழியற்புலத் தலைவர் பேராசிரியர் செ. சாரதாம்பாள் வாழ்த்துரை வழங்கினார். பயிலரங்க ஒருங்கிணைப்பாளரும் மொழியியல் துறைப் பேராசிரியருமான ஏ. ஆதித்தன் நோக்கவுரையாற்றினார்.

இப்பயிலரங்கில் பின்வரும் அறிஞர்கள் தங்கள் ஆய்வுரைகளை வழங்கினர்.

**பேராசிரியர் ச.வே. சுப்பிரமணியன்**
**முனைவர் அ. காமாட்சி**
**பேராசிரியர் இரா. ஜெயராமன்**
**முனைவர் நா. வேல்மயில்**
**முனைவர் எஸ்.ஏ.ஆர். பரதராஜ்**
**முனைவர் மு. அஞ்சலி அன்னாபாய்**
**பேராசிரியர் சி. சுப்பிரமணியப்பிள்ளை**
**பேராசிரியர் தூ. சேதுபாண்டியன்**
**பேராசிரியர் அ. சீனிவாசன்**
**பேராசிரியர் கோ. விஜயவேணுகோபால்**
**முனைவர் இரா. காசிராஜன்**
**பேராசிரியர் செ. சாரதாம்பாள்**
**மருத்துவர் து. மெய்கண்டான்**
**முனைவர் பெ. சுயம்பு**
**முனைவர் மு. கற்பகம்**
**பேராசிரியர் தி. நடராசன்**
**பேராசிரியர் மு. பெர்னாட்ஷா**
**பேராசிரியர் மீனாட்சி முருகரத்தனம்**
**பேராசிரியர் ம.சா. அறிவுடைநம்பி**
**பேராசிரியர் சு. அழகேசன்**
**பேராசிரியர் கி. அரங்கன்**
**பேராசிரியர் மு. மணிவேல்**
**பேராசிரியர் ந. தெய்வசுந்தரம்**
**முனைவர் குளோரி பொன்மொழி**
**பேராசிரியர் தி. முருகரத்தனம்**
**முனைவர் சி. கஸ்தூரி**
**முனைவர் சி. சொர்ணமாலா**
**பேராசிரியர் இ. முத்தையா**
**பேராசிரியர் இரா. அறவேந்தன்**
**முனைவர் கா. உமாராஜ்**
**பேராசிரியர் அ. ஆலிஸ்**
**முனைவர் ஜெ. பிரீதி**
**மருத்துவர் வ. இன்பசேகரன்**
**முனைவர் இரா. குமாரசாமி**

இப்பயிலரங்கில் மதுரைத் தியாகராசர் கல்லூரி, டோக் பெருமாட்டி கல்லூரி, பாத்திமா கல்லூரி , மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை, மொழியியல் துறை ஆகியவற்றின் ஆய்வு மாணவர்கள் நாற்பது பேர் பங்கேற்றுப் பயனடைந்தனர்.

பயிலரங்கின் நிறைவு விழா 19.02.2012 அன்று பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்றது. விழாவிற்கு மதுரை காமராசர் பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினர் பேராசிரியர் சொ. சுப்பையா தலைமையேற்றார்.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன முதுநிலை ஆய்வறிஞர் பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி நிறைவு விழாப் பேருரையாற்றிப் பயிலரங்கில் பங்கேற்ற மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கிச் சிறப்பித்தார். தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் ம. திருமலை வாழ்த்துரை வழங்கினார்.

★

*பயிலரங்கம் 10*

## பழந்தமிழ் இலக்கிய ஆய்வு நெறிமுறைகளும் கோட்பாடுகளும்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் காந்தி கிராமக் கிராமியப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையும் இணைந்து 'பழந்தமிழ் இலக்கிய ஆய்வு நெறிமுறைகளும் கோட்பாடுகளும்' என்னும் தலைப்பில் 13.02.2012 முதல் 22.02.2012 வரை பத்து நாள் பயிலரங்கை நடத்தின.

13.02.2012 அன்று காலை 10 மணியளவில் நடந்த தொடக்க விழாவில் முனைவர் அ. பிச்சை வரவேற்புரையாற்றினார். காந்திகிராமக்கிராமியப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் சோம. இராமசாமி தலைமையுரையாற்றினார். தமிழ்த் துறைப் பேராசிரியர் முனைவர் பா. ஆனந்தகுமார் நன்றி கூறத் தொடக்க விழா நிறைவடைந்தது.

**முனைவர் வெ. வேதாச்சலம்**
**பேராசிரியர் தி. முருகரத்தனம்**
**முனைவர் சீ. பக்தவத்சலபாரதி**
**பேராசிரியர் ப. மருதநாயகம்**
**பேராசிரியர் து. மூர்த்தி**
**பேராசிரியர் கி. இராசா**
**பேராசிரியர் இரா. காசிராஜன்**
**பேராசிரியர் அ. சீனிவாசன்**
**பேராசிரியர் துரை. சீனிச்சாமி**
**முனைவர் யாழ். சந்திரா**
**பேராசிரியர் கு.வெ.பாலசுப்பிரமணியன்**
**பேராசிரியர் தி.சு.நடராஜன்**
**பேராசிரியர் க. பஞ்சாங்கம்**
**பேராசிரியர் அ. ஆலிஸ்**
**பேராசிரியர் பா. ஆனந்தகுமார்**
**முனைவர் ஆ. தனஞ்செயன்**
**பேராசிரியர் டாக்டர் நசீம்தீன்**
**பேராசிரியர் ம. திருமலை**
**பேராசிரியர் செ.வை. சண்முகம்**
**பேராசிரியர் இரா. வேங்கடரத்தினம்**
**பேராசிரியர் ஐ. முத்தையா**
**முனைவர் அ. பூலோகரம்பை**
**முனைவர் க. நாகநந்தினி**
**பேராசிரியர் பி.என். கமலா**
**பேராசிரியர் செ. சாரதாம்பாள்**
**பேராசிரியர் கா. செல்லப்பன்**

ஆகிய அறிஞர்கள் தங்கள் ஆய்வுரைகளை வழங்கினர்.

22.02.2012 அன்று பிற்பகல் 4 மணியளவில் நிறைவு விழா நடைபெற்றது. காந்திகிராமக் கிராமியப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் பா. ஆனந்தகுமார் வரவேற்புரையாற்றினார். காந்திகிராமக் கிராமியப் பல்கலைக்கழகப் பதிவாளர் பேராசிரியர் நம். நாராயணசாமி தலைமையுரை நிகழ்த்தினார். சாகித்திய அகாதெமி ஆலோசனைக் குழுத் தலைவர் பேராசிரியர் சிற்பி. பாலசுப்பிரணியன் பயிலரங்க நிறைவுப் பேருரையாற்றினார். பயிலரங்க ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் அ. பிச்சை நன்றி நவின்றார்.

★

*பயிலரங்கம் 11*

## பழந்தமிழ் இலக்கியங்களில் இசையும் நாட்டியமும்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் தஞ்சாவூர்த் தமிழ்ப் பல்கலைக்கழக இசைத்துறையும் இணைந்து 'பழந்தமிழ் இலக்கியங்களில் இசையும் நாட்டியமும்' என்னும் தலைப்பில் 13.02.2012 முதல் 22.02.2012 வரை பத்து நாள் பயிலரங்கினை நடத்தின.

இதன் தொடக்க விழா 13.02.2012 அன்று காலை பத்து மணியளவில் நடைபெற்றது. தமிழ்ப் பல்கலைக்கழக இசைத்துறைத் தலைவர் முனைவர் இ. அங்கயற்கண்ணி அனைவரையும் வரவேற்றார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனப் பொறுப்பு அலுவலர் பேராசிரியர் க. இராமசாமி பயிலரங்கைத் தொடங்கி வைத்துத் தொடக்கவுரையாற்றினார். தமிழ்ப் பல்கலைக்கழகக் கலைப்புலத் தலைவர் முனைவர் த. சந்திரகுமார், தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிவாளர் ச. பரிமளா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். புதுச்சேரி இசையியல் அறிஞர் பா. மீ. சுந்தரம் மையக்கருத்துரை வழங்கினார். முனைவர் இரா. மாதவி நன்றி நவிலத் தொடக்க விழா நிறைவடைந்தது.

**முனைவர் நா. மம்மது**
**முனைவர் இராம கௌசல்யா**
**முனைவர் ச. உமாமகேசுவரி**
**முனைவர் த. சந்திரகுமார்**
**முனைவர் தி. அருட்செல்வி**
**முனைவர் மு. இராமசாமி**
**முனைவர் இரா. கலைவாணி**
**திருமிகு ச. மலர்விழி**
**முனைவர் ஆ. கார்த்திகேயன்**
**முனைவர் எஸ். செல்வகணபதி**
**முனைவர் தி. சுரேஷ்சிவன்**
**முனைவர் கே. ஆர். சீதாலட்சுமி**
**திரு முத்துக்கந்தசாமி தேசிகர்**
**முனைவர் க. இரவீந்திரன்**
**முனைவர் மா.சுப. சரளா**
**முனைவர் க. திலகவதி**
**முனைவர் செ. கற்பகம்**
**முனைவர் கோ. தெய்வநாயகம்**
**முனைவர் அரிமளம் சு. பத்மநாபன்**
**முனைவர் இரா. மாதவி**
**முனைவர் தி. கனகசபை**
**முனைவர் ந. இளமுருகன்**
**முனைவர் கூ. மு. புவனேசுவரி**
**முனைவர் ப. உமாமகேசுவரி**
**முனைவர் பாலா நந்தகுமார்**
**முனைவர் எஸ். இரகுராமன்**
**முனைவர் ஆ. தட்சிணாமூர்த்தி**
**முனைவர் எஸ். ஸ்ரீவித்யா**

ஆகிய அறிஞர்கள் தங்கள் ஆய்வுரைகளை வழங்கிச் சிறப்பித்தனர். நாற்பது மாணவர்கள் பங்கேற்றுப் பயனடைந்தனர்.

இப்பயிலரங்கின் நிறைவு விழா 22.02.2012 அன்று மாலை நடைபெற்றது. தமிழ்ப் பல்கலைக்கழக இசைத்துறைத் தலைவர் பேராசிரியர் இ. அங்கயற்கண்ணி வரவேற்புரையாற்றினார். தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் ம. திருமலை தலைமையுரையாற்றினார். உலகச் செம்மொழிகள் உயராய்வு மைய இயக்குநர் பேராசிரியர் சோ.ந. கந்தசாமி நிறைவுரையாற்றினார். முனைவர் செ. கற்பகம் நன்றிகூறினார்.

★

பயிலரங்கம் 12

## தமிழ்ச் செவ்விலக்கியங்களைப் பிற திராவிட மொழிகளில் மொழிபெயர்க்கும்போது ஏற்படும் சிக்கல்கள்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் பன்னாட்டுத் திராவிட மொழியியல் நிறுவனமும் இணைந்து 'தமிழ்ச் செவ்விலக்கியங்களைப் பிற திராவிட மொழிகளில் மொழிபெயர்க்கும்போது ஏற்படும் சிக்கல்கள்' என்னும் தலைப்பில் பிப்ரவரி 15 முதல் 24 வரையில் பத்து நாள் பயிலரங்கினைத் திருவனந்தபுரத்தில் நடத்தின.

இதன் தொடக்க விழாவில் பேராசிரியர் எம். இராமா விழாவிற்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்றுப் பயிலரங்கின் நோக்கத்தினையும் முக்கியத்துவத்தினையும் எடுத்துரைத்தார். திரு கே. இரவீந்திரன் தொடக்கவுரையாற்றினார். முனைவர் புதுசேரி இராமச்சந்திரன் தலைமையுரையாற்றினார். முனைவர் எம்.ஆர். தம்பன், திரு டி. மாதவ மேனன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். பேராசிரியர் ப. மருதநாயகம் மையவுரையாற்றினார். அவ்வுரையில், சங்க இலக்கியத்திற்குப் பன்னாட்டு அங்கீகாரம் கிடைப்பதற்கு மேலை நாட்டினரின் மொழிபெயர்ப்பே காரணம் என்று அவர்களின் பங்களிப்பைப் பாராட்டிப் பேசினார். மேலும் அவர், 'எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் தமிழர்களுக்கு மட்டும் உரியதன்று; தென்னிந்தியா முழுமைக்கும் பொதுவானது' என்று குறிப்பிட்டார்.

இந்தக் கருத்தரங்கில் பின்வரும் அறிஞர்கள் தங்கள் ஆய்வுரைகளை வழங்கினார்கள்.

**பேராசிரியர் ப. மருதநாயகம்**
**முனைவர் உள்ளூர் எம். பரமேஸ்வரன்**
**முனைவர் கோபிநாதன் நாயர்**
**பேராசிரியர் எம்.நயினார்**
**திரு டி. மாதவமேனன்**
**முனைவர் நடுவட்டம் கோபாலகிருஷ்ணன்**
**பேராசிரியர் இராதாகிருஷ்ணன்**
**திரு எம். தட்சிணாமூர்த்தி**
**முனைவர் எம். இராமா**
**முனைவர் பி. ஜெயகிருஷ்ணன்**
**திரு சௌரவ் சக்ரவர்த்தி**
**முனைவர் ஜி.கே. பணிக்கர்**
**முனைவர் சீனிவாசன்**
**முனைவர் வி. கோபாலகிருஷ்ணா**
**பேராசிரியர் கா. செல்லப்பன்**
**முனைவர் என். இராசேந்திரன்**
**முனைவர் எல். குளோரியா சுந்தரமதி**
**முனைவர் டி.பி. சங்கரன்குட்டி நாயர்**
**முனைவர் என். பக்தவத்சல ரெட்டி**
**முனைவர் என்.பி.உன்னி**
**முனைவர் இந்திரா மனுவேல்**
**முனைவர் ரோஸ் மேரி**
**முனைவர் ஜேம்ஸ் ரொனால்டு டேனியல்**

இந்தப் பயிலரங்கில் பல்வேறு நிறுவனங்களைச் சேர்ந்த முப்பதுக்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள் கலந்துகொண்டு பயனடைந்தனர். 24.02.2012 அன்று நடைபெற்ற நிறைவு விழா இராஜராஜ வர்மா அரங்கில் நடைபெற்றது. பன்னாட்டுத் திராவிட மொழியியல் நிறுவனத்தின் முதுநிலை ஆய்வறிஞர் முனைவர் நடுவட்டம் கோபாலகிருஷ்ணன் அனைவரையும் வரவேற்றார். திராவிட மொழியியல் கழகத் துணைத் தலைவர் முனைவர் கே. ரெத்னம்மா தலைமைவுரையாற்றினார். அவர்தம் உரையில் பன்னாட்டுத் திராவிட மொழியியல் நிறுவனத்தின் பணிகளைப் பாராட்டிப் பேசினார். மேலும் பொது மூதாதையரின் தொல்திராவிட மொழியிலிருந்து கிளைத்த திராவிட மொழிகளின் வரலாற்றுப் படிமலர்ச்சியைக் குறிப்பிட்டுப் பேசினார். பேராசிரியர் ஜி.கே.பணிக்கர் நிறைவுரையாற்றினார். பேராசிரியர் எம். இராமா பயிலரங்கில் பங்கேற்றவர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார். முனைவர் கே. குஞ்சம்மா நன்றி நவில விழா இனிதே நிறைவடைந்தது.

★

பயிலரங்கம் 13

## சங்க இலக்கிய நோக்கில் இலக்கியப் பயில்முறை

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் சேலம் பெரியார் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையும் இணைந்து 'சங்க இலக்கிய நோக்கில் இலக்கியப் பயில்முறை' என்னும் தலைப்பில் 20.02.2012 முதல் 01.03.2012 வரை பத்து நாள் பயிலரங்கினை நடத்தின.

இப்பயிலரங்கின் தொடக்க விழா 20.02.2012 அன்று காலை 10.30 மணியளவில் தொடங்கியது. தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் பெ. மாதையன் அனைவரையும் வரவேற்றார். பெரியார் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் கி. முத்துச்செழியன் தலைமையுரையாற்றினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனப் பொறுப்பு அலுவலர் பேராசிரியர் க. இராமசாமி பயிலரங்க மையக்கருத்துரை வழங்கினார். அலிகார் முஸ்லிம் பல்கலைக்கழகப் பேராசிரியர் து. மூர்த்தி வாழ்த்துரை வழங்கினார். முனைவர் தி. பெரியசாமி நன்றிகூறத் தொடக்க விழா நிறைவடைந்தது.

**பேராசிரியர் கா. இராஜன்**
**முனைவர் மே.து. இராசுகுமார்**
**பேராசிரியர் து.மூர்த்தி**
**பேராசிரியர் தமிழவன்**
**திரு பொ. வேல்சாமி**
**முனைவர் இரா. பூங்குன்றன்**
**பேராசிரியர் ப. மருதநாயகம்**
**முனைவர் கே. பழனிவேலு**
**முனைவர் த. தருமராஜன்**
**முனைவர் ஞா. ஸ்டீபன்**
**பேராசிரியர் இரா. பிரேமா**
**முனைவர் ஆ. தனஞ்செயன்**
**பேராசிரியர் அ. சீனிவாசன்**
**பேராசிரியர் ந. முத்துமோகன்**
**பேராசிரியர் புனல் க. முருகையன்**
**முனைவர் இரா. சம்பத்**

முனைவர் சீ. பக்தவத்சல பாரதி
பேராசிரியர் க. பஞ்சாங்கம்
பேராசிரியர் சு. இராசவேலு
பேராசிரியர் கி. நாச்சிமுத்து
பேராசிரியர் தி.சு. நடராஜன்

ஆகிய அறிஞர்கள் தங்கள் ஆய்வுரைகளை வழங்கினர்.

01.03.2012 அன்று நடைபெற்ற நிறைவு விழாவில் பேராசிரியர் பெ. மாதையன் வரவேற்புரை வழங்கினார். பெரியார் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் கி. முத்துச்செழியன் தலைமையுரையாற்றினார். தமிழ்ப் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தரும் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன முதுநிலை ஆய்வறிஞருமான பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி நிறைவு விழாப் பேருரை நிகழ்த்தினார். பேராசிரியர் மோ. தமிழ்மாறன் நன்றி நவின்றார்.

★

பயிலரங்கம் 14

## சிலப்பதிகாரக் கலைகளும் கலைக் கோட்பாடுகளும்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் கும்பகோணம் அரசுக் கலைக்கல்லூரித் தமிழ்த்துறையும் இணைந்து 'சிலப்பதிகாரக் கலைகளும் கலைக் கோட்பாடுகளும்' என்னும் தலைப்பில் 22.02.2012 முதல் 02.03.2012 வரை பத்து நாள் பயிலரங்கை நடத்தின.

பயிலரங்கத் தொடக்க விழா 02.02.2012 முற்பகல் 9.30 மணியளவில் கல்லூரி முதல்வர்(பொ) முனைவர் ஜெ. கோவிந்ததாஸ் தலைமையில் நடைபெற்றது. தமிழ்த் துறை இணைப்பேராசிரியர் முனைவர் க. துரையரசன் வரவேற்புரையாற்றினார். சென்னைப் பல்கலைக்கழகத் தமிழிலக்கியத் துறைத்தலைவர் முனைவர் வீ. அரசு மையக் கருத்துரை வழங்கிப் பயிலரங்கைத் தொடக்கி வைத்தார். முனைவர் அ. குணசேகரன் நோக்கவுரையாற்றினார். உதவிப் பேராசிரியர் மா. சேகர் நன்றிகூறப் பயிலரங்கத் தொடக்க விழா நிறைவடைந்தது.

முனைவர் இரா. கலைவாணி
முனைவர் கேசவ. பழனிவேலு
முனைவர் இரா. கலைவாணி
பேராசிரியர் க. பஞ்சாங்கம்
முனைவர் இரா. சம்பத்
முனைவர் த. தியாகராசன்
முனைவர் அ.ம. சத்தியமூர்த்தி
முனைவர் பா. சிவநேசன்
முனைவர் சு. வேங்கடராமன்
பேராசிரியர் கரு.அழ.குணசேகரன்
முனைவர் அரிமளம் சு. பத்மநாபன்
பேராசிரியர் அ. அறிவுநம்பி
முனைவர் சுவாமி தியாகராஜன்
முனைவர் ஆ. திருநாகலிங்கம்
முனைவர் ப. ஜெயகிருஷ்ணன்
முனைவர் இ. அங்கயற்கண்ணி
திரு பி. சிவராமகிருஷ்ணன்
திரு வா.சி.த. அருளரசன்
முனைவர் ச. இரமேஷ்
முனைவர் த. கனகசபை
முனைவர் கோ. தெய்வநாயகம்
முனைவர் அ. குணசேகரன்

முனைவர் மு. கண்ணையன்
முனைவர் க. துரையரசன்
முனைவர் மு. பழனியப்பன்

ஆகிய அறிஞர்கள் தங்கள் ஆய்வுரைகளை வழங்கிச் சிறப்பித்தனர்.

இப்பயிலரங்கின் நிறைவு விழா 02.03.2012 அன்று பிற்பகல் நடைபெற்றது. இவ்விழாவில் கல்லூரித் தேர்வு நெறியாளர் முனைவர் நா. இராமகிருஷ்ணன் தலைமை தாங்கினார். தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் க. அன்புமணி வரவேற்புரையாற்றினார். தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் அ.ம. சத்தியமூர்த்தி வாழ்த்துரை வழங்கினார். தமிழ்ப் பல்கலைக்கழக நாடகவியல் துறைத்தலைவர் பேராசிரியர் மு. இராமசாமி நிறைவு விழாப் பேருரையாற்றிப் பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கிச் சிறப்பித்தார். நிறைவாகத் தமிழ்த்துறை இணைப் பேராசிரியர் பா. சிவநேசன் நன்றிகூறினார்.

★

பயிலரங்கம் 15

## செம்மொழித் தமிழ் நூல்களில் தமிழர் சமயக் கோட்பாடுகள்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் திருப்பனந்தாள் சீர்வளர்சீர் காசிவாசி சுவாமிநாத சுவாமிகள் கலைக் கல்லூரியும் இணைந்து 'செம்மொழித் தமிழ் நூல்களில் தமிழர் சமயக் கோட்பாடுகள்' என்னும் தலைப்பில் 27.02.2012 முதல் 07.03.2012 வரை பத்து நாள் பயிலரங்கை நடத்தின.

இப்பயிலரங்கின் தொடக்க விழா 27.02.2012ஆம் நாள் காலை 10 மணியளவில் நடந்தது. இவ்விழாவில் கல்லூரி முதல்வர் முனைவர் ப. பாஸ்கரன் வரவேற்புரையாற்றினார். கல்லூரிச் செயலர் பேராசிரியர் இரா. சுப்பராயலு தலைமையுரையாற்றினார். திருப்பனந்தாள் காசிமட அதிபர், கயிலை மாமுனிவர் சீர்வளர்சீர் காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் ஆசியுரை கூறினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனப் பொறுப்பு அலுவலர் முனைவர் க. இராமசாமி பயிலரங்கைத் தொடங்கி வைத்துச் சிறப்புரையாற்றினார். இணைப் பேராசிரியர் முனைவர் சிவ. பங்கயச்செல்வி நன்றிகூறத் தொடக்க விழா நிறைவடைந்தது.

முனைவர் சு. வேங்கடராமன்
பேராசிரியர் இரா. சுப்பராயலு
முனைவர் வே. சீதாலெட்சுமி
முனைவர் சிவ. பங்கயச்செல்வி
முனைவர் நா. மாதவி
முனைவர் டி.என். இராமச்சந்திரன்
முனைவர் சாமி தியாகராசன்
முனைவர் சா. கிருஷ்ணமூர்த்தி
முனைவர் ச. சுப்புரத்தினம்
முனைவர் நா. வசந்தி
முனைவர் மு. சிவச்சந்திரன்
பேராசிரியர் ம.வே. பசுபதி
முனைவர் சி. சண்முகநாதன்
பேராசிரியர் ம. சா. அறிவுடைநம்பி
முனைவர் இரா. மருதநாயகம்
முனைவர் க. சேகர்
முனைவர் இரா. செல்லதுரை
முனைவர் கோ.ப. நல்லசிவம்

முனைவர் ந. முருகேசன்
முனைவர் சி. மனோகரன்
முனைவர் பா. சிவநேசன்
முனைவர் தி. அரங்கநாதன்
முனைவர் கு.வெ. பாலசுப்பிரமணியன்

ஆகிய அறிஞர்கள் தங்கள் ஆய்வுரைகளை வழங்கிச் சிறப்பித்தனர்.

07.03.2012 அன்று பிற்பகல் 2.00 மணியளவில் நிறைவு விழா நடைபெற்றது. இணைப் பேராசிரியர் முனைவர் நா. மாதவி வரவேற்புரையாற்றினார். கல்லூரியின் செயலர் பேராசிரியர் இரா. சுப்பராயலு தலைமையுரையாற்றினார். தமிழ்ப் பல்கலைக்கழக முன்னைப் பேராசிரியர் முனைவர் கு.வெ. பாலசுப்பிரமணியன் சிறப்புரை வழங்கினார். திருப்பனந்தாள் காசிமட இணை அதிபர் அருள்திரு சுந்தரமூர்த்தித் தம்பிரான் சுவாமிகள் ஆசியுரை வழங்கியதோடு பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கிச் சிறப்பித்தார். கல்லூரி முதல்வர் முனைவர் ப. பாஸ்கரன் நன்றிகூறினார்.

★

பயிலரங்கம் 16

## பாவியல் நோக்கிலும், பண்பாட்டியல் நோக்கிலும் சிலப்பதிகாரம்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் மயிலம் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ், கலை, அறிவியல் கல்லூரியும் இணைந்து ‘பாவியல் நோக்கிலும் பண்பாட்டியல் நோக்கிலும் சிலப்பதிகாரம்’ என்னும் தலைப்பில் 27.02.2012 முதல் 07.03.2012 வரை பத்து நாள் பயிலரங்கை நடத்தின.

★

பயிலரங்கம் 17

## இரட்டைக்காப்பியங்களில் தமிழ்ச் சமுதாயம்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் கோயம்புத்தூர் அரசுக் கலைக்கல்லூரித் தமிழ்த்துறையும் இணைந்து ‘இரட்டைக் காப்பியங்களில் தமிழ்ச்சமுதாயம்’ என்னும் தலைப்பில் 29.02.2012 முதல் 09.03.2012 வரை பத்து நாள் பயிலரங்கை நடத்தின. பேராசிரியர் சு. துரை இதன் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

★

பயிலரங்கம் 18

## தமிழ்ச் செம்மொழி இலக்கியத்தில் பார்வையற்றவர்களுக்கான கல்வித் திட்டம்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் சென்னை மாநிலக் கல்லூரித் தமிழ்த்துறையும் இணைந்து ‘தமிழ்ச் செம்மொழி இலக்கியத்தில் பார்வையற்றவர்களுக்கான கல்வித் திட்டம்’ என்னும் தலைப்பில் 03.03.2012 முதல் 12.03.2012 வரை பத்து நாள் பயிலரங்கை நடத்தின.

இதன் தொடக்க விழாவில் மாநிலக் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் ப. மகாலிங்கம் வரவேற்புரை யாற்றினார். பயிலரங்க ஒருங்கிணைப்பாளர் முனைவர் அர. ஜெயச்சந்திரன் பயிலரங்க அறிமுகவுரை நிகழ்த்தினார். மாநிலக் கல்லூரி முதல்வர்(பொ.) பா.சே. இரகுராமன் அவர்கள் தலைமையுரை ஆற்றினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனப் பதிவாளர் முனைவர் மு. முத்துவேலு தொடக்க விழாச் சிறப்புரையும் பயிலரங்க மையப்பொருளுரையும் வழங்கினார். திருப்பூர் அரசுக் கலைக்கல்லூரி முதல்வர் முனைவர் கே.எம். பிரபு, சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் பா. புண்ணியகோடி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மாநிலக் கல்லூரித் தமிழ்த்துறை இணைப்பேராசிரியர் முனைவர் சு. வேலப்பன் நன்றிகூறத் தொடக்கவிழா நிறைவடைந்தது.

இந்தப் பயிலரங்கில் பின்வரும் ஆய்வறிஞர்கள் பங்கேற்றுத் தங்கள் ஆய்வுரைகளை வழங்கினர்.

திரு கலைச்செல்வன்
முனைவர் இரா. மதிவாணன்
முனைவர் ப. தாமரைக்கண்ணன்
முனைவர் மா.கி. இரமணன்
முனைவர் ம. இளங்கோ
முனைவர் பா.சே. இரகுராமன்
முனைவர் கு. மோகனராசு
முனைவர் இரா. கோதண்டராமன்
முனைவர் ஜசக் ஜெபஸ்டின்
முனைவர் மு. தவமணி
முனைவர் தெ. வெற்றிச்செல்வன்
மருத்துவர் கே. வெங்கடேசன்
முனைவர் ச. ஏழுமலை
முனைவர் சுபாஷிணி ஆர். காந்தி
முனைவர் கோ.ப. நல்லசிவம்
முனைவர் ச. பாஸ்கரன்
காம்கேர் கே. புவனேஸ்வரி
முனைவர் அ. விமலாராணி
முனைவர் கஸ்தூரிராஜா
முனைவர் ப. மருதநாயகம்
முனைவர் டி. கமலி
முனைவர் என். சந்திரசேகரன்
முனைவர் சுப. நடராஜன்
முனைவர் ந. இராதாமணி
முனைவர் பி.வி. சீனிவாசன்
முனைவர் ஏ. சிதம்பரம்
திருக்குறள் சொ. பத்மநாபன்

இப்பயிலரங்கில் பார்வையற்ற ஆசிரியர்களும் மாணவர்களும் என 40 பேர் பங்கேற்றுப் பயனடைந்தனர்.

12.03.2012 மாலை 4 மணியளவில் இப் பயிலரங்கின் நிறைவுவிழா நடைபெற்றது. மாநிலக் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் ப. மகாலிங்கம் வரவேற்புரை யாற்றினார். பயிலரங்க ஒருங்கிணைப்பாளர் முனைவர் அர. ஜெயச்சந்திரன் தொகுப்புரை நிகழ்த்தினார். மாநிலக் கல்லூரி முதல்வர் (பொ.) முனைவர் பா.சே. இரகுராமன் தலைமையுரையாற்றினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனப் பொறுப்பு அலுவலர் பேராசிரியர் க. இராமசாமி பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கி நிறைவு விழாப் பேருரை நிகழ்த்தினார். மாநிலக் கல்லூரித் தமிழ்த்துறை மேனாள் இணைப் பேராசிரியர் இ. மறைமலை வாழ்த்துரை வழங்கினார். மாநிலக் கல்லூரித் தமிழ்த்துறை இணைப் பேராசிரியர் க. வேலு நன்றிகூறினார்.

★

ந.அ

பயிலரங்கம் 19

## சங்க இலக்கியமும் பண்டைத் தமிழ்ச் சமூக அமைப்புக்களும்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் பாளையங்கோட்டைத் தூய சவேரியார் கல்லூரி நாட்டார் வழக்காற்றியல் துறையும் இணைந்து 'சங்க இலக்கியமும் பண்டைத் தமிழ்ச் சமூக அமைப்புக்களும்' என்னும் தலைப்பில் 05.03.2012 முதல் 14.03.2012 வரை பத்து நாள் பயிலரங்கினை நடத்தின.

05.03.2012ஆம் நாள் முற்பகல் 10.30 மணியளவில் நடந்த தொடக்க விழாவில் நாட்டார் வழக்காற்றியல் துறை இணைப் பேராசிரியர் முனைவர் நா. இராமச்சந்திரன் வரவேற்புரையாற்றினார். கல்லூரிச் செயலர் அருள்திரு முனைவர் ஆரோக்கியசாமி தலைமையுரை வழங்கினார். தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக முன்னைத் துணைவேந்தரும் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன முதுநிலை ஆய்வறிஞருமான பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி தொடக்கவுரையாற்றினார். பயிலரங்க ஒருங்கிணைப்பாளர் ஆ. தனஞ்செயன் நோக்கவுரை வழங்கினார். தூய சவேரியார் கல்வி நிறுவனங்களின் அதிபர் அருள்திரு பிரிட்டோ வின்சென்ட், தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் மணி ஆகிய இருவரும் வாழ்த்துரை வழங்கினர். முனைவர் ந. இராமச்சந்திரன் நன்றி கூறத் தொடக்க விழா நிறைவடைந்தது.

**முனைவர் தொ.பரமசிவம்**
**பேராசிரியர் நா. சிவசுப்பிரமணியன்**
**முனைவர் வெ. வேதாச்சலம்**
**முனைவர் மே.து. இராசுகுமார்**
**முனைவர் உமாதேவி**
**முனைவர் ஜோசப் இருதய சேவியர்**
**முனைவர் சீ. பக்தவத்சல பாரதி**
**முனைவர் பெ. மாதையன்**
**முனைவர் டாக்டர் பி. நசீம்தீன்**
**முனைவர் கனல்மைந்தன்**
**முனைவர் இருதயராஜ்**
**முனைவர் க.நெடுஞ்செழியன்**
**முனைவர் பிரான்சிஸ் சேவியர்**
**முனைவர் நா. இராமச்சந்திரன்**
**முனைவர் திருஞானசம்பந்தம்**
**முனைவர் அதியமான்**
**முனைவர் வீ. அரசு**
**முனைவர் ஆ. தனஞ்செயன்**
**முனைவர் ஆ. செல்லப்பெருமாள்**
**முனைவர் பா. வேலம்மாள்**
**முனைவர் பா. ஆனந்தகுமார்**
**முனைவர் ஞா.ஸ்டீபன்**
**முனைவர் கே. பழனிவேலு**
**முனைவர் துளசி இராமசாமி**
**முனைவர் சுந்தர்காளி**

ஆகிய அறிஞர்கள் ஆய்வுரை வழங்கிச் சிறப்பித்தார்கள்.





14.03.2012 அன்று பிற்பகல் 3.00 மணியளவில் நிறைவு விழா நடைபெற்றது. முனைவர் நா. இராமச்சந்திரன் வரவேற்புரையாற்றினார். கல்லூரி முதல்வர் அருள்திரு முனைவர் அல்போன்ஸ் மாணிக்கம் தலைமையுரை யாற்றினார். தமிழ்ப் பல்கலைக்கழக இலக்கியத் துறை மேனாள் தலைவர் முனைவர் கு.வெ. பாலசுப்பிரமணியன் நிறைவுரையாற்றினார். பயிலரங்க ஒருங்கிணைப்பாளர் ஆ. தனஞ்செயன் நன்றிகூறினார்.

★

பயிலரங்கம் 20

## தொல்லியல் ஆய்வு: கோட்பாடும் செயல்முறையும்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் புதுவைப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறையும் இணைந்து 'தொல்லியல் ஆய்வு: கோட்பாடும் செயல்முறையும்' என்னும் தலைப்பில் 21.05.2012 முதல் 30.05.2012 வரை பத்து நாள் பயிலரங்கை ஈரோடு மாவட்டம் பெருந்துறை வட்டத்தில் உள்ள கொடுமணல் என்னும் ஊரில் நடத்தின.

**முனைவர் ஒய். சுப்பராயலு**
**முனைவர் அர.பூங்குன்றன்**
**முனைவர் சி. சத்தியலிங்கம்**
**முனைவர் வெ.வேதாச்சலம்**
**முனைவர் டி. சுப்பிரமணியன்**
**முனைவர் எஸ். இராஜகோபால்**
**முனைவர் ந. அதியமான்**
**முனைவர் டி. சுப்பிரமணியன்**
**முனைவர் டி. தயாளன்**
**முனைவர் பி. ஜெயக்குமார்**
**முனைவர் மகேசுவரி**
**திரு எம். இராஜேஷ்**
**முனைவர் அனுபமா**
**முனைவர் பி.ஜே.செரியன்**
**முனைவர் வி.செல்வக்குமார்**
**பேராசிரியர் சு. இராசவேலு**
**முனைவர் வி.பி. யதீஸ்குமார்**
**முனைவர் முத்துசங்கர்**

ஆகிய அறிஞர்கள் தங்கள் ஆய்வுரைகளை வழங்கினர்.

புதுவைப் பல்கலைக்கழகம், தமிழ்ப் பல்கலைக்கழகம், இந்தியத் தொல்லியல் துறை, தமிழ்நாடு மாநிலத் தொல்லியல் துறை ஆகியவற்றிலிருந்து 20 மாணவர்கள் இப்பயிலரங்கில் பங்கேற்றுப் பயனடைந்தனர்.

★



**A Dravidian Solution to the Indus Script Problem**
**ஆசிரியர்: அஸ்கோ பர்போலா**
**விலை உரூ.50/-**

# கொடுமணலில் 2400 ஆண்டுகள் பழமையுடைய தொழிற்பேட்டை வளாகம்

புதுவைப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறை 2012 ஏப்பிரல், மே மாதங்களில் ஈரோடு மாவட்டக் கொடுமணலில் புதிதாக மேற்கொண்ட தொல்லியல் அகழாய்வில் ஏராளமான செய்பொருட்கள் கண்டறியப்பட்டுள்ளன. மக்கள் வாழிடமாயிருந்த 4 அகழாய்வுத் தளங்களில் கண்டறியப்பட்ட செய்பொருட்கள் அங்கு 2400 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு பெரிய தொழிற்பேட்டை இருந்ததை உறுதிப்படுத்துகின்றன. அந்தத் தொழிற்பேட்டையில் இரும்புப்பொருட்கள், எஃகுப்பொருட்கள், நெசவுப்பொருட்கள், சங்கு வளையல்கள், ஆயிரக்கணக்கான பல்வகை மணிகள் கண்டறியப்பட்டுள்ளன. இந்த வளாகத்தில் நூல் சுற்றும் சுடுமண்கதிர், பொன் கம்பி ஆகியவை கிடைத்துள்ளன. 30 தமிழ்ச் சொற்கள் அடங்கிய 130 தமிழிப்பொறிப்புகள் கொண்ட பானைகள் கிடைத்துள்ளன.

சப மகதை பம்மதன், சாதன், விசாகி, சிலிகன், உரனன், திசன், சம்பன் சுமநன் முதலிய பெயர்கள் அவற்றில் உள்ளன.

இவ்வகழாய்வை மேற்கொண்ட புதுவைப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறைப் பேராசிரியர் கா. இராசன் இந்து நாளிதழ்ச் செய்தியாளர் திரு டி.எஸ். சுப்பிரமணியத்திடம் இது குறித்துப் பதிவுசெய்துள்ளார்.

தமிழ்நாட்டில் வேறெங்கும் இதுபோன்ற தொழிற்பேட்டை வளாகம் கண்டுப்பிடிக்கப்படவில்லை. கொடுமணல் பெரிய தொழிற்பேட்டை வளாகம். இங்கு வேளாண் பணி குறைந்த அளவிலேயே நடந்துள்ளது. சங்க கால ஊர்களான கொற்கை, பூம்புகார், கரூர், உறையூர், அழகன்குளம், பொருந்தல் என்று பல ஊர்களில் அகழாய்வு நடந்திருந்தாலும் கொடுமணலில் கிடைத்ததுபோல் வேறெங்கும் தமிழி எழுத்துப் பொறிப்புகள் கொண்ட பானைகள் கிடைக்கவில்லை.

சம்பன் சுமநன் என்ற தமிழிப் பொறிப்பு கி.மு. மூன்று அல்லது இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்ததாக இருக்கலாம். சம்பன் சுமநன் என்ற பெயருள்ள பெரிய பானை நான்கு தளங்களுள் ஒன்றின் இரண்டாம் அடுக்கில் கண்டறியப்பட்டுள்ளது. முதல் அடுக்கில் சம்பன் என்ற பெயர் பொறித்த பானை கிடைத்துள்ளது. பல பானைகளில் சம்பன், சுமநன் என்ற பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இதை வைத்துப் பார்க்கும்போது சம்பன் தந்தை, சுமநன் மகன் என்று முடிவுசெய்யலாம். இந்தத் தொழில் வளாகம் சம்பன் குடும்பத்தைச் சேர்ந்ததெனலாம்.

கொடுமணலில் இரண்டு பெருங் கற்காலக் கற்பதுக்கைகள் அகழப்பட்டன. ஒரு கற்பதுக்கை கல்வட்டம் சூழ அமைந்திருந்தது. அதன் உள்ளே இரண்டு தடுப்புகள் இருந்தன. தடுப்புகளும் மேற்கூரையும் கருங்கல்லால் அமைக்கப்பட்டிருந்தன. கல்வட்டம் நெடுங்கற்களால் அமைக்கப்பட்டிருந்தது. உயரமான கற்கள் சிதைந்திருந்தன. உள்வட்டம் சுவர்போல் அமைந்துள்ளது. முன் தடுப்பில் துளையிடப்பட்டுள்ளது. இரண்டு தடுப்புகளுக்கும் பொதுப்பாதை உள்ளது. மனித எலும்புகள் தடுப்புகளில் இருந்தன. இறப்புச் சடங்குப் பொருள்களான நான்கு கால் ஜாடி, வளையல் தாங்கி, இரும்புப் பொருள்கள், மணிகள் உள்ளே இருந்தன. கற்பதுக்கையின் வெளியே உடைந்த பானைகளும் கலயங்களும் கிடந்தன.

இரண்டாவது கற்பதுக்கையில் ஒரு முதன்மைத் தடுப்பும் இரண்டு துணைத் தடுப்புகளும் உள்ளன. ஒவ்வொன்றும் கற்கூரையுடன் உள்ளன. முதன்மைப் பகுதி சிறந்த கல்லாலும் பிற பகுதிகள் எளிய கற்களாலும் வடிவமைக்கப்பட்டுள்ளன. சுற்றியிருந்த கல்வட்டத்தில் இப்போது கற்கள் இல்லை. ஒரு தடுப்பு, தெற்குப் பார்த்து அமைந்துள்ளது. அதில் துளை உள்ளது. மற்ற இரண்டிலும் வட்ட வடிவத் துளைகள் உள்ளன. தடுப்பின் உள்ளே மணிகள் கிடைத்துள்ளன. உள்ளே துளைப்பகுதியில் அம்பு முனைகளின் தொகுப்புப் பதியப்பட்டுள்ளது. இது எதற்காக அமைந்துள்ளது என்று தெரியவில்லை என்கிறார் கா. இராசன்.

கொடுமணலில் தஞ்சாவூர்த் தமிழ்ப் பல்கலைக்கழகம் ஒய். சுப்பராயலுவை இயக்குநராகக் கொண்டு சென்னைப் பல்கலைக்கழகம், தமிழ்நாட்டுத் தொல்லியல் துறை ஆகியவற்றின் துணையோடு 1985, 1986, 1989, 1990ஆம் ஆண்டுகளில் அகழாய்வு மேற்கொண்டு 48 குழிகளைத் தோண்டியது. அப்போது 13 பெருங்கற்காலப் பதுக்கைகள் கண்டுபிடிக்கப்பட்டன. முனைவர் கா. இராசன் அவருக்குத் துணையாக அகழ்வில் ஈடுபட்டார். தொல்லியல் துறை 1988, 1999ஆம் ஆண்டுகளில் 15 குழிகளைத் தோண்டியது. அப்போது 3 பதுக்கைகள் கண்டறியப்பட்டன.

தமிழ்நாட்டில் தரை மட்டத்தில் நடந்த அகழாய்வுத் தளங்களில் கொடுமணல் குறிப்பிடத்தக்க ஒன்றாய் உள்ளது. இந்தியாவிலேயே எழுத்துப் பொறிப்புள்ள பானைகள் மிகுதியாகக் கிடைத்துள்ள இடமாக இது திகழ்கிறது. இங்கே மிகுதியான பதுக்கைகளும் அகழப்பட்டுள்ளன. பல்வேறான நிலைகளில் எலும்புக் கூடுகள் ஈமக்குழிகளில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. ஈமத் தாழிகள், பல வகையான புதைகுழிகள் இருப்பதால் பல்வேறு இனக்குழுக்கள் கொடுமணலில் வாழ்ந்திருக்க வாய்ப்புள்ளது. பிராகிருதச் சொற்களான ‘திஸ்ஸன்’, ‘விசாகி’ போன்றவை தமிழி எழுத்தில் உள்ளன. இதனால் தொழில் வணிகத் தளமான கொடுமணல் இந்தியாவின் வட பாகத்தோடு பண்பாட்டு அடிப்படையிலும் வணிக அடிப்படையிலும் நன்கு தொடர்பு கொண்டிருந்ததென்று அறியலாம்.

நன்றி : இந்து நாளிதழ், மே 28, 2012

http://www.thehindu.com/features/friday-review/history-and-culture/kodumanal-excavation-yields-a-bonanza-again/article3463120.ece






# தமிழின் தொன்மை - மாந்தவியல் ஆய்வுகள்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் வரலாறு, சமுகவியல், மாந்தவியல் துறை 'தமிழின் தொன்மை - மாந்தவியல் ஆய்வுகள்' என்னும் தலைப்பில் தேசியக் கலந்தாய்வரங்கினை 2012 மார்ச்சு 19, 20 ஆகிய நாள்களில் சென்னை இராஜா அண்ணாமலைபுரத்தில் உள்ள தியான ஆசிரமத்தில் நடத்தியது. இக் கலந்தாய்வரங்கம் பேராசிரியர் க. இராமசாமி அவர்களின் வழிகாட்டலின்கீழ் முனைவர் மு. இராமகிருஷ்ணனால் ஒருங்கிணைக்கப்பட்டது.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் முதுநிலை ஆய்வறிஞர் பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி இக் கலந்தாய்வரங்கினைத் தொடக்கி வைத்து உரையாற்றினார். அவர்தம் உரையில் தமிழில் இதுவரை நிகழ்ந்துள்ள மாந்தவியல் நோக்கிலான தமிழ்ச் சமூக ஆய்வுகள் பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

பேராசிரியர் க. இராமசாமி தம் தலையுரையுரையில் இக் கலந்தாய்வரங்கின் நோக்கத்தினையும் குறிக்கோளினையும் விளக்கிக் கூறினார்.

பின்வரும் அறிஞர்கள் இக்கலந்தாய்வரங்கில் கலந்துகொண்டு தங்கள் கருத்துரைகளை வழங்கினர்.

**பேராசிரியர் சீ. பக்தவத்சலபாரதி**
**பேராசிரியர் ஆ. செல்லப்பெருமாள்**
**முனைவர் ஆ. தனஞ்செயன்**
**பேராசிரியர் ஆறு. இராமநாதன்**
**பேராசிரியர் இ. முத்தையா**
**பேராசிரியர் க. நெடுஞ்செழியன்**
**பேராசிரியர் ஒ. முத்தையா**
**பேராசிரியர் சி.மா. இரவிச்சந்திரன்**
**பேராசிரியர் டாக்டர் நசீம்தீன்**
**பேராசிரியர் ம.சா. அறிவுடைநம்பி**
**பேராசிரியர் ந. தெய்வசுந்தரம்**
**பேராசிரியர் சு. சண்முகசுந்தரம்**
**திரு ஒரிசா பாலசுப்பிரமணியன்**
**பேராசிரியர் பா.ரா. சுப்பிரமணியன்**
**பேராசிரியர் சு. இராசவேலு**
**முனைவர் எஸ். சுமதி**
**பேராசிரியர் அ. அறிவுநம்பி**
**முனைவர் ஞா. ஸ்டீபன்**
**முனைவர் இரா. சீனிவாசன்**
**பேராசிரியர் சி. இரவீந்திரன்**




**பேராசிரியர் சிவ. மாதவன்**
**பேராசிரியர் க. ப. அறவாணன்**
**முனைவர் ச. பிலவேந்திரன்**
**பேராசிரியர் செ.வை. சண்முகம்**
**முனைவர் பாலமுருகன்**
**திரு முத்தையா வெள்ளையன்**
**திரு இரெ. முருகன்**
**பேராசிரியர் தாயம்மாள் அறவாணன்**
**பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி**
**பேராசிரியர் ப. மருதநாயகம்**
**முனைவர் இரெ. குமரன்**
**முனைவர் ச. மனோகரன்**
**பேராசிரியர் அன்னி தாமசு**
**பேராசிரியர் இரா. கோதண்டராமன்**
**முனைவர் மே. து. இராசுகுமார்**
**பேராசிரியர் டொமினிக் ராஜ்**
**பேராசிரியர் ம. ச. நாகராஜன்**
**முனைவர் என். முருகையன்**
**முனைவர் ந. தேவி**
**முனைவர் கி. ஜெயக்குமார்**

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் இளநிலை, முதுநிலை ஆய்வு வளமையர்கள், முனைவர் பட்ட மேலாய்வாளர்கள் ஆகியோர் இக்கலந்தாய்வரங்கில் கலந்துகொண்டனர்.

கலந்தாய்வரங்கின் நிறைவு விழா 2012 மார்ச்சு 20 அன்று மாலை நடைபெற்றது. முனைவர் மு. இராமகிருஷ்ணன் அனைவரையும் வரவேற்றார். பேராசிரியர் ப. மருதநாயகம் தலைமையுரையாற்றினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனப் பதிவாளர் முனைவர் மு. முத்துவேலு நிறைவுரை யாற்றினார். நிறைவாகப் பேராசிரியர் க. இராமசாமி நன்றி நவின்றார்.

★



# கூட்டங்கள்

கூட்டம் 1

## பதிப்புக் குழுக் கூட்டம்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனப் பதிப்புக் குழுக் கூட்டம் பொறுப்பு அலுவலர் பேராசிரியர் க. இராமசாமி அவர்கள் தலைமையில் 2.3.2012 பிற்பகல் 2.30 மணியளவில் நிறுவனத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் பின்வரும் நிறுவனப் பதிப்புக் குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

பேராசிரியர் **க. இராமசாமி**
(தலைவர் - பொறுப்பு அலுவலர்)

முனைவர் **மு. முத்துவேலு**
(பதிவாளர்)

பேராசிரியர் **அ.அ. மணவாளன்**
(உறுப்பினர்)

திரு **இரா. முத்துக்குமாரசாமி**
(உறுப்பினர்)

பேராசிரியர் **இ. சுந்தரமூர்த்தி**
(பதிப்புத் துறைத் தலைவர்)

முனைவர் **ந. அரணமுறுவல்**
(ஒருங்கிணைப்பாளர்)

பதிப்புக் குழுக் கூட்டத்தில் கீழ்க்காணும் பொருள்கள்பற்றிக் கலந்துபேசி முடிவுகள் எடுக்கப்பட்டன.

1. கோயம்புத்தூர் அரசு அச்சகத்தில் அச்சிடக் கொடுத்த நூல்களை விரைவில் வெளிக்கொணர வேண்டும்.
2. செம்மொழி நிறுவன நூல்களை அச்சிடத் தனியார் அச்சகங்களில் ஒப்பந்தப் புள்ளி கோரலாம்.
3. நிறுவன வெளியீடுகளாக வரும் நூல்களுக்கு அச்சிடச் செலவாகும் தொகையைக் கணக்கிட்டு அடக்க விலையையே நூலின் விற்பனை விலையாகக் குறிக்கலாம். நூல் விற்பனையாளர்களுக்கு 15% கழிவு கொடுக்கலாம்.
4. ஒவ்வொரு நூலிலும் 1200 படிகள் அச்சிடலாம்.
5. நிறுவன வெளியீடுகளைத் தரமான இதழ்களுக்கு நூல் மதிப்புரைக்காக அனுப்பிவைக்கலாம்.
6. சென்னை, தில்லி முதலிய ஊர்களிலும் உலக அளவிலும் நடைபெறும் புத்தகக் கண்காட்சிகளில் நூல்களை விற்பனை செய்யலாம்.
7. பல்கலைக்கழகங்களுக்கும் ஆய்வு நிறுவனங்களுக்கும் நூல்களை இலவயமாக அனுப்பிவைக்கலாம்.

★

கூட்டம் 2

## குறுந்திட்டப் பணிகள் மதிப்பீட்டுக் குழுக் கூட்டம்

குறுந்திட்டப்பணிகள் மதிப்பீட்டுக் குழுக் கூட்டம் மூன்று கட்டமாக 30.01.2012, 16.03.2012, 22.3.2012 ஆகிய நாள்களில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பின்வரும் திட்ட அறிக்கைகள் மதிப்பிடப்பெற்றன.



**முனைவர் சண்முக செல்வகணபதி** -
சிலப்பதிகாரம் வழி அறியலாகும் ஆடல் அரங்கேற்ற நுட்பங்கள்

**முனைவர் அமுதா பாண்டியன்** -
தொல்காப்பியத்திலிருந்து சிலப்பதிகாரம் வரை தமிழர் இசையியல் கோட்பாடு - ஒரு மறுவாசிப்பு

**புலவர் இரா. இளங்குமரனார்** -
செந்தமிழ்ச் சொற்பொருட் களஞ்சியம்

**முனைவர் குளோரியா சுந்தரமதி** -
சங்க இலக்கியத்தில் குறிஞ்சித்திணைப் பாடல்கள்: பகுப்பாய்வு அணுகுமுறை

**முனைவர் எம். சற்குணவதி** -
மணிமேகலைக் களஞ்சியம்

**முனைவர் சி. இலட்சுமணன்** -
தமிழ்ச் செவ்வியல் நூல்களின் தாள் சுவடிகள்

**திரு பி.டி.ஆர். கமலை தியாகராஜன்** -
தமிழ், ஐரோப்பிய இசைக்கருவிகள் இசைக்கும் முறைகள் - ஓர் ஒப்பாய்வு

**முனைவர் கா. இராசன்** -
சங்ககால அகழாய்வுக் களம் - பொருந்தல்

**முனைவர் என். ஞானப்பழம்** -
சங்க இலக்கியப் பாணர் வழக்காறுகள் - தமிழக, கேரளப் பாணர்களின் தற்கால வழக்காறுகளிலிருந்தான ஒப்பாய்வு

**திரு இலக்குவனார் திருவள்ளுவன்** -
சங்க இலக்கியக் கலைச்சொற்களும் கலைச்சொல் ஆக்கமும்

**முனைவர் இரா. காசிராஜன்** -
சிலப்பதிகார ஆய்வடங்கல்

**முனைவர் கு. அரசேந்திரன்** -
தமிழுக்கும் வட இந்திய மொழிகட்கும் இடையேயான வேர்ச்சொல்லொப்புமைகள் - இலக்கண ஒப்புமைகள் பகுதி 2

**முனைவர் ப.ரா.சுப்பிரமணியன்** -
முன்வரலாற்றுக்காலம் (சங்ககாலம் கி.மு 300 முதல் கி.பி 300 வரை) முதல் முன்னிடைக்காலம் (கி.பி 600 முதல் கி.பி 1300 வரை) வரையிலான கல்வெட்டுக்களின் கருத்தமைவுத் தொடரடைவு

**திரு எம். டிராஸ்கி மருது** -
சங்க இலக்கிய அசைகலைக் குறும்படங்கள் (ஐந்து குறும்படங்கள்)

**பேராசிரியர் பி.எஸ்.சுப்பிரமணியன்** -
திராவிட ஒப்பிலக்கணம் - 2

**திரு அனந்தபுரம் கோ. கிருஷ்ணமூர்த்தி** -
தமிழ் நாட்டில் சமணம்

**திரு வே.தி. செல்லம்** - தமிழின் மொழியியல் முன்வரலாற்று மீட்டுருவாக்கம் / தமிழர், தமிழ்நாட்டின் முன் வரலாறு

**முனைவர் பி. செல்வக்குமார்** -
செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன வலைத்தளத்திற்கான தரவுகளைப் பல்லூடகத் தொழில்நுட்பம்வழி வளப்படுத்துதல்

**முனைவர் கோ.குழந்தைவேல்** -
செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன வலைத்தள வாயில் மேம்பாடு

**முனைவர் அ.கா. பெருமாள்** -
பழந்தமிழர் பண்பாட்டு நினைவுச் சின்னங்கள்

★

## பணியரங்கம்

### ஐங்குறுநூற்று மருதப் பாடல்கள் செம்பதிப்பு

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனச் சுவடியியல் துறையின் சார்பில் ஐங்குறுநூற்று மருதப்பாடல்கள் செம்பதிப்பிற்கான முதற்கட்டப் பணியரங்கு 24, 25.01.2012 ஆகிய இரண்டு நாள்களில் நிறுவன வளாகத்தில் நடைபெற்றது. இப்பணியரங்கில் கலந்துகொண்டோர்:

**பேராசிரியர் கு.வெ. பாலசுப்பிரமணியன்**
(பதிப்பாசிரியர்)

**பேராசிரியர் க. இராமசாமி**
(பொறுப்பு அலுவலர் & துறைத்தலைவர்)

**முனைவர் கி. ஜெயக்குமார்**
(ஒருங்கிணைப்பாளர்)

**முனைவர் சு. சௌந்தரபாண்டியன்**
(சுவடி வல்லுநர்)

இப்பணியரங்கில் துறைத் தலைவர் ஐங்குறுநூற்றின் செம்பதிப்பு உருவாக்கப்படவேண்டிய முறைமைகள் குறித்துப் பதிப்பாசிரியருடன் கலந்துரையாடினார். நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட பாடவேறுபாடுகளின் பட்டியலை ஏற்றுக்கொண்டு ஒப்புநோக்குவதற்கும் உரிய பாடங்களைத் தேர்வு செய்து அவற்றுக்கான பாட வரையறைகளை எழுதுவதற்கும் பதிப்பாசிரியர் இசைவு தெரிவித்தார்.

இப்பணியரங்கில் சொல்லடைவு, கலைச்சொல் நிரல், பாடல்கள் மற்றும் கூற்றுகளின் பிழைபாடப் பட்டியல்கள் பதிப்பாசிரியரால் சரிபார்க்கப்பட்டு அவை கணினியில் உள்ளீடு செய்யப்பட்டன.

நிறுவனத்தின் செம்பதிப்புத் திட்ட வரையறை குறித்த அறிமுக விளக்கக் கூட்டமாக இப்பணியரங்கு அமைந்தது.

★

## நிறுவன வெளியீடுகள்



**Ancient Tamil Poetry and Poetics: New Perspectives**
**ஆசிரியர்**
**பேரா. ப. மருதநாயகம்**
**விலை உரூ.450/**



**A Compendium of Tirukkural Translations in English Vol.1 (Arattuppal)**
**ஆசிரியர்**
**பேரா. அ.அ. மணவாளன்**
**விலை உரூ.800/**



**Dynamics of Tamil Finite System**
**ஆசிரியர்**
**பேரா. இரா. கோதண்டராமன்**
**விலை உரூ.650/**



**Muttollayiram (Text, Transliteration and Translations in English Verse and Prose)**
**ஆசிரியர்**
**பி. பாண்டியன்**
**விலை உரூ.325/**

## இரங்கல் செய்தி



### பேராசிரியர் அடிகளாசிரியர்

அடிகளாசிரியர் என்ற பெயரில் தமிழுலகம் நன்கறிந்தவரும் செம்மொழி நிறுவனத் தொல்காப்பியர் விருது பெற்றவருமான பேராசிரியர் அடிகளாசிரியர் தமது 102ஆம் அகவையில் இயற்கை எய்தினார் என்ற செய்தி அனைவரையும் துன்பத்தில் ஆழ்த்தியது. விழுப்புரம் மாவட்டம் குகையூர் என்ற சிற்றூரில் பிறந்து படிப்படியே தம் சொந்த முயற்சியால் தமிழ் கற்று வளர்ந்து பெரும் பேராசிரியராக விளங்கினார்.

1937இல் சென்னைப் பல்கலைக்கழகத்தில் புலவர் பட்டம் பெற்ற இவர் 1938இல் மயிலம் தமிழ்க் கல்லூரியில் ஆசிரியராகப் பணியில் சேர்ந்து பிறகு விரிவுரையாளராகவும் துறைத் தலைவராகவும் பதவி உயர்வுபெற்றார். தமிழ்க்கடல் மறைமலையடிகளாருடனும் நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டாருடனும் நெருங்கிப் பழகியவர். 1950முதல் இருபதாண்டுக் காலம் கரந்தைத் தமிழ்க் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிந்தார். ஓய்வு நேரத்தில் அருகிலிருந்த சிவன் கோவிலில் சைவ சித்தாந்த வகுப்புகளை நடத்தியுள்ளார்.

தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் பதிப்பாசிரியராக இருந்து பல நூல்களைப் பதிப்பித்துள்ளார். 1977ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் ஆய்வறிஞராகப் பணிபுரிந்துள்ளார். 1982ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழகச் சுவடிப் புலத்தில் சிறப்புநிலை இணைப்பேராசிரியராக மூன்றாண்டுக்காலம் பணிபுரிந்து மூப்பின் காரணமாக ஓய்வுபெற்றாலும் வீட்டிலிருந்துகொண்டே தம் ஆய்வுப் பணியைத் தொடர்ந்தார்.

தமிழ் ஆய்விலும் சைவ சித்தாந்த ஆய்விலும் ஈடுபட்டு 19 நூல்களை வெளியிட்டுள்ளார். வெளிவராத நூல்கள் 8 உள்ளன. 37 நூல்களைப் பதிப்பித்துள்ளார். இவருடைய தொல்காப்பியப் பதிப்பு அனைவராலும் போற்றிப் பாராட்டப்பெற்றது. 2005-2006ஆம் ஆண்டுக்கான தொல்காப்பியர் விருது செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தால் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது. தமது 100ஆம் அகவையில் தில்லி சென்று குடியரசுத்தலைவரிடம் செம்மொழி நிறுவனத் தொல்காப்பியர் விருதைப் பெற்றுவந்தது குறிப்பிடத்தக்கது.

1910ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் (சித்திரை 5) விழுப்புரம் மாவட்டம் கல்லக்குறிச்சி வட்டம் குகையூரில் பெரியசாமி ஐயர் - குங்கும அம்மாள் என்னும் பெற்றோருக்கு வீரசைவ மரபில் தோன்றிய குருசாமி என்ற அடிகளாசிரியர் தம் வாழ்நாள் முழுவதும் தமிழும் சைவமும் தம்மிரு கண்கள் என்று வாழ்ந்து 8.1.2012ஆம் நாள் தம்முடைய 102ஆம் அகவையில் இயற்கையெய்தினார். அவரது குடும்பத்தாருக்கும் தமிழ்ச்சுற்றத்தாருக்கும் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது.

# செம்மொழி ஆய்வு வட்டக் கூட்டங்கள்

**05-01-2012**

தலைமை : முனைவர் ச. மனோகரன்
ஆய்வாளர் : முனைவர் கோ. சதீஸ்
பொருண்மை : தமிழ் நெடுங்கணக்கில் ஐகாரம்



**11-01-2012**

தலைமை : முனைவர் அன்னி தாமசு
ஆய்வாளர் : முனைவர் இரா. அருள்மணி
பொருண்மை : சங்க காலக் காசுகள்



**19-01-2012**

தலைமை : பேராசிரியர் க. இராமசாமி
ஆய்வாளர் : முனைவர் நா. கண்ணன்
பொருண்மை : தமிழும் தூரக்கிழக்கும்



**27-01-2012**

தலைமை : முனைவர் ந. அரணமுறுவல்
ஆய்வாளர் : முனைவர் பி. கணேசன்
பொருண்மை : சங்க கால இரும்புத் தொழில்நுட்பம்



**02-02-2012**

தலைமை : முனைவர் ந. அரணமுறுவல்
ஆய்வாளர் : முனைவர் கூ.மு. புவனேசுவரி
பொருண்மை : குன்றக்குரவையில் இசை



**09-02-2012**

தலைமை : முனைவர் ச. மனோகரன்
ஆய்வாளர் : முனைவர் கி. ஜெயக்குமார்
பொருண்மை : செம்பதிப்பின் நோக்கங்கள்



**16-02-2012**

தலைமை : பேராசிரியர் க. இராமசாமி
ஆய்வாளர் : முனைவர் சு. சௌந்திரபாண்டியன்
பொருண்மை : தொல்காப்பியத்தில் ஒடு, ஓடு



**29-02-2012**

தலைமை : முனைவர் அன்னிதாமசு
ஆய்வாளர் : முனைவர் ந. தேவி
பொருண்மை : தமிழ் எபிரேயச் செவ்விலக்கியங்களில் கனவுகள் - ஒப்பீடு



**08-03-2012**

தலைமை : பேராசிரியர் க. இராமசாமி
ஆய்வாளர் : திரு நடன. காசிநாதன்
பொருண்மை : கடல் அகழாய்வுகள் காட்டும் பண்டைய பூம்புகார்



**14-03-2012**

தலைமை : முனைவர் மே.து. ராசுகுமார்
ஆய்வாளர் : முனைவர் க. நர்மதா
பொருண்மை : சதிரிலிருந்து பரதம்வரை



# பணிக்குழாம்

இயக்குநர்

**பேராசிரியர் இரா. சந்திரசேகரன்**

*ஆராய்ச்சி அலுவலர்கள்*

முனைவர் கூ.மு. புவனேஸ்வரி
முனைவர் ந. தேவி
முனைவர் க. நர்மதா
முனைவர் இரா. அருள்மணி
முனைவர் கு. ஜெயகுமாரி

*இளநிலை ஆராய்ச்சி அலுவலர்கள்*

முனைவர் க. கமலா ஏஞ்சல் பிரைட்
முனைவர் சு. ஏழுமலை
முனைவர் மு. செல்வதுரை
முனைவர் சே. கரும்பாயிரம்
முனைவர் த. சரவணன்
முனைவர் இரா. வெங்கடேசன்
முனைவர் ந. பெரியசாமி

*முதுநிலை ஆய்வு வளமையர்கள்*

முனைவர் வ. மாரியப்பன்
முனைவர் ம. தமிழ்வாணன்
முனைவர் அ. ஆரோக்கியதாசு
முனைவர் மா. சுசிலா
முனைவர் ப. கண்ணதாசன்
முனைவர் சுப. வேல்முருகன்

*இளநிலை ஆய்வு வளமையர்கள்*

முனைவர் வே. அழகுமுத்து
முனைவர். ம. நாகராஜன்
திருமதி ம. தாமரைச்செல்வி
திரு. து.ச.ரா. ராஜேஷ்குமார்
திரு. கி. கண்ணன்
திரு. கோ. சந்திரசேகர்

*ஆராய்ச்சி உதவியாளர்*

முனைவர் சி. இராமச்சந்திரன்

*தொழில்நுட்பப் பணியாளர்கள்*

திரு. த. செந்தில்குமார் *(நிரலாளர்)*
திரு. சு. கார்த்திகேயன் *(நிரலாளர்)*
முனைவர். இரா. அகிலன் *(நிரலாளர்)*
திரு. அ. முருக சுவாமிநாதன் *(நிரலாளர்)*
திரு. இரா. சுந்தரகணபதி *(கணினி நிருவகிப்பாளர்)*
திரு. மு. இராசசேகர் *(இணையத்தள வடிவமைப்பாளர்)*

*நிருவாகப் பணியாளர்கள்*

திரு. கோ. புண்ணியமூர்த்தி
*(அலுவலகக் கண்காணிப்பாளர்)*
திரு. ஜா.வா. பாஸ்கரன்
*(இளநிலைக் கணக்கு அலுவலர்)*
திரு. மோ. முருகானந்தம் *(முதுநிலை எழுத்தர்)*
திரு. க. சங்கர் *(இளநிலை எழுத்தர்)*
திரு. அ. முருகேசன் *(இளநிலை எழுத்தர்)*
திருமதி இர. நளினா *(இளநிலை எழுத்தர்)*

*தரவு உள்ளீட்டாளர்கள்*

திரு. வெ. சிவப்பிரகாசம்
திருமதி சு. கீதா
திரு. தி.ஞா. அருள்ஒளி
திரு. மு. முனியசாமி
திரு. சோ. சரவணன்

*அனுப்புகை உதவியாளர்*

திரு. ம. கோவிந்தன்

*பன்னோக்கு உதவியாளர்கள்*

திருமதி. ந. ஜெயலட்சுமி
திருமதி. சி. அன்னபூரணி

**தொல்காப்பியம்**

**எட்டுத்தொகை**

- நற்றிணை
- குறுந்தொகை
- ஐங்குறுநூறு
- பதிற்றுப்பத்து
- பரிபாடல்
- கலித்தொகை
- அகநானூறு
- புறநானூறு

**பத்துப்பாட்டு**

- திருமுருகாற்றுப்படை
- பொருநராற்றுப்படை
- சிறுபாணாற்றுப்படை
- பெரும்பாணாற்றுப்படை
- முல்லைப்பாட்டு
- மதுரைக்காஞ்சி
- நெடுநல்வாடை
- குறிஞ்சிப்பாட்டு
- பட்டினப்பாலை
- மலைபடுகடாம்

**பதினெண்கீழ்க்கணக்கு**

- நாலடியார்
- நான்மணிக்கடிகை
- இன்னா நாற்பது
- இனியவை நாற்பது
- கார் நாற்பது
- களவழி நாற்பது
- ஐந்திணை ஐம்பது
- ஐந்திணை எழுபது
- திணைமொழி ஐம்பது
- திணைமாலை நூற்றைம்பது
- திருக்குறள்
- திரிகடுகம்
- ஆசாரக்கோவை
- பழமொழி
- சிறுபஞ்சமூலம்
- முதுமொழிக்காஞ்சி
- ஏலாதி
- கைந்நிலை

**சிலப்பதிகாரம்**

**மணிமேகலை**

**முத்தொள்ளாயிரம்**

**இறையனார் களவியல்**